

திருக்கோணமலை

# அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம்

## கும்பாபிஷேக மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஓம்
# அருள்மிகு வள்ளி தேவசேனா சமேத
# முத்துக்குமாரசுவாமி
# திருக்கோணமலை



திருக்கோணமலை
அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான
மகா கும்பாபிஷேக
சிறப்பு மலர்

(மன்மத வருஷம் பங்குனி மாதம் ஏகாதசி திதி திருவோண நட்க்ஷத்திரம்)
03.04.2016

வெளியீடு
அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம்
திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

" கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஆன்றோர் அருள்வாக்கு. கோவில்கள் செறிந்த திருகோணமலைத் திருநகரத்தில் சனீஸ்வரப் பெருமானுக்கு தனிக் கோவில் உண்டு என்பது திருத்தலங்களின் எண்ணிக்கையை காட்டுவதாயுள்ளன. கோவிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த திருக்கோணேஸ்வரத் திருத்தலத்தில், பாடப்பட்ட கோவில்களுள் அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருக்கோவிலும் அடங்கும். நகரத்தின் மத்தியில் முழுமை பெற்ற தலமாகக் காணப்படும் இத்திருத்தலத்திற்கு ஒரு சிறப்பு "சரவணப் பொய்கை" என்று பக்தர்களால் போற்றப்படும் தீர்த்தக் கேணியாகும். இரண்டாம் உலக யுத்தத்தின் போது திருகோணமலையில் திறந்திருந்த ஒரே ஆலயம் என்ற பெருமையும் இதற்குண்டு.

இலக்கியங்கள் காலத்தின் தன்மையை விளக்குவன என்றால் மிகையாகாது. 03.04.2016 தினத்தன்று மகாகும்பாபிஷேகம் காணும் இத்திருத்தலத்தில் அன்றைய தினமே ஒரு கும்பாபிஷேக மலர் வெளியீடு நடைபெற இருப்பது முத்துக்குமாரரின் திருவருளே எனலாம். மலரின் உள்ளீடாக இருப்பவை சுமார் 220 வருட பாரம்பரியங்களை விளக்கும் கட்டுரைகளோடு இன்றைய தேவைகட்கு இத்திருத்தலம் எங்ஙனம் அனுசரணையாக உள்ளது என விளக்கும் வடிவங்களாக உள்ளது. இம்மலரானது இலங்கைத் திருநாட்டில் புகழ்பெற்ற பெரியோர்தம் ஆசியுரைகளையும் தன்னகத்தே அடக்கியுள்ளதோடு நடைபெறும் நிகழ்வுகளால் பயன் பெறும் வருங்கால சந்ததியினரின் சொல்லாக்கமும் இணைக்கப்பட்டுள்ளது சிறப்பாகும். சமய நிகழ்வுகளை காரணம் தெரியாது கடைப்பிடித்தல் என்னும் நிலையை மாற்றுமுகமாக அவற்றின் காரண காரியங்களை அறிவுடையோர் எழுதியிருப்பது எதிர்கால சந்ததியினரை முழுமையடைய செய்யும் என்பது திண்ணம். இவற்றோடு இவ்வாலயத்திற்கே உரித்தான பள்ளியெழுச்சி, பராக்கு, லாலி, மங்களம் என்பவற்றுடன் பஞ்சபுராணங்களும், நவசந்தி பாடல்களும் இணைத்திருப்பது இம்மலரை மிளிரச் செய்வனவாகும். இவற்றை ஆக்கி அளித்திட்ட அன்பர்களுக்கும், அடியார்கட்கும் அருள் சேர்வதாக!

முகாமையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு முத்துக்குமார சுவாமி தேவஸ்தான மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் 2016

## மலருள் மணங் கமழ்பவை...................

* ஆசிச் செய்திகள் :

- சிவஸ்ரீ சோ.ரவிச்சந்திரக்குருக்கள்
- சிவஸ்ரீ மு. வைகுந்தவாசக் குருக்கள்
- சிவஸ்ரீ ந.பிரசாந்தக் குருக்கள்
- சிவஸ்ரீ ஸ்ரீ.கனகசபாபதிக் குருக்கள்
- சிவஸ்ரீ சதா இராதாக்கிருஷ்ணக் குருக்கள்
- சிவஸ்ரீ கனக.நித்தியானந்தக் குருக்கள்
- சிவஸ்ரீ சு.மணி.கிருஷ்ணகுமார் குருக்கள்
- சிவஸ்ரீ சு.சுதாகரக் குருக்கள்
- சிவஸ்ரீ வ.சிவகுமாரக் குருக்கள்
- சிவஸ்ரீ சு.சாந்தமூர்த்திக் குருக்கள்
- ஸ்ரீலஸ்ரீ மு.சுந்தரலிங்க தேசிகர்

* வாழ்த்துச் செய்திகள் :-

- திரு.இரா.சம்பந்தன் - பா.உ (எதிர்கட்சி தலைவர்)
- திரு.டி.எம்.சுவாமிநாதன் - இந்து மத கலாசார அமைச்சர்
- திரு.க.துரைரெட்ண சிங்கம் - பா.உ
- திரு.அ.உமா மகேஸ்வரன் - பணிப்பாளர்

* படங்கள் :-

- தேவஸ்தான ஆதீன தர்மகர்த்தாக்கள்
- தேவஸ்தான முகாமையாளர்கள்
- ஆசியுரை வழங்கும் குருமார்கள்
- அறுபடை வீடு
- இலங்கையில் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயங்கள் சில
- மகா கும்பாபிஷேக நிகழ்வுகள் - 2002 (இரண்டு பக்கம்)
- மகோற்சவம் ( இரண்டு பக்கம்)
- மகோற்சவ தேர்த்திருவிழா
- பாலஸ்தாபன நிகழ்வுகள்
- வாகனசாலை (இரண்டு பக்கம்)
- இசை நடன கலாலயம்

* கட்டுரைகள் :-

- திரும்பிப் பார்க்கின்றேன் - திரு.இ.ஸ்ரீதரன் (தர்மகர்த்தா)
- ஆலய வளர்ச்சி அன்றும் இன்றும் - (திரு.து.தவசிலிங்கம் (முகாமைபாளர்)
- கும்பாபிஷேக நிகழ்வுகள் 1889 ------ முதல் இன்று வரை
- திருக்குடமுழுக்குக் காணும் முத்துக்குமாரப் பெருமான் - சிவஸ்ரீ.சோ.ரவிச்சந்திரக்குருக்கள் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆகமங் கூறும் ஆஹுதி வழிபாடு - சிவஸ்ரீ ந.பிரசாந்தக் குருக்கள்
- மத நல்லிணக்கமும் மதச் சார்பின்மையும் - திரு.சி.சிவசேகரம்
- இந்து சமய மரபில் இறைவழிபாட்டின் மகத்துவம் - பேராசிரியர்
  - திரு.ப.கோபாலகிருஷ்ண ஐயர் -
- கந்தபுராண மகிமை - திரு.கே.சித்திரவேலாயுதன்
- முத்தமிழ் இசை வளர்க்கும் முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம் -
  - திருமதி.தேவிகா ராணி முருகுப்பிள்ளை -
- கந்தபுராணமும் சைவ சித்தாந்தமும் - திரு.குமாரசுவாமி சோமசுந்தரம்
- ஆலயங்கள் எப்படி இருக்க வேண்டும். - திரு.பொ.கந்தையா (காந்தி ஐயா)
- மகோற்சவ நவசந்தி வழிபாடு - சைவப் புலவர், பண்டிதர் இ.வடிவேலு

* பாடல்கள் :-
- ஸ்ரீமுத்துக்கமார சுவாமி திருப்பள்ளியெழுச்சி
  - செல்வி.மணிமேகலாதேவி, கார்த்திகேசு -
- பஞ்சபுராணம்
- ஸ்ரீமுத்துக்குமார சுவாமி திருவூஞ்சல் - திரு.த.சரவணமுத்துப்பிள்ளை
- ஸ்ரீமுத்துக்குமார சுவாமி எச்சரிக்கை, பராக்கு, லாலி, மங்களம் -
  - சைவப்புலவர், பண்டிதர் இ.வடிவேல் -
- திருப்பொற்சுண்ணம் - மாணிக்கவாசக சுவாமிகள் (திருவாசகப் பகுதி)
- ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி கீர்த்தனை - செல்வி.மணிமேகலாதேவி கார்த்திகேசு
- தேர்ச்சிந்து - ஞானசிரோன்மணி, சைவப்புலவர் பண்டிதர் இ.வடிவேலு
- சகலகலாவல்லி மாலை - குமரகுருபர சுவாமிகள்
- ஸ்ரீசண்முகப் பெருமான் திருவூஞ்சல், எச்சரிக்கை, பராக்கு, லாலி, மங்களம்
  - சைவப்புலவர் பண்டிதர் இ.வடிவேல் -
- திருவெம்பாவை - மாணிக்கவாசக சுவாமிகள் (திருவாசகப் பகுதி)
- ஸ்ரீமுத்துக்குமார சுவாமி திருவனந்தல் - செல்வி. மணிமேகலாதேவி கார்த்திகேசு

* * * * * * *

- எமது பார்வையில் ஆலயமும் கலாலயமும் - நெகிழும் நெஞ்சங்கள்
- சிறப்புமிக்க முருகன் ஆலயங்கள் - சிவஸ்ரீ.வ.சிவகுமாரக்குருக்கள்
- கங்காஸ்நானம் - சுவாமி.கமலானந்தா
- கோமாதா - திரு.வ.நடராசா ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
- அறிந்து கொள்வோம் தொகுப்பு - திருமதி.வித்தியா கிருபானந்தன்
- அருவமும் உருவமாகி - திரு.செ.கணபதிப்பிள்ளை
- கந்தபுராணச் சிறப்புகள்
- ஆபத்து வேளையில் அபயமளித்த ஸ்ரீமுத்துக்குமரன்
  - கோயிற் குத்தகைக் குடியிருப்பாளர்கள் -
- நன்றி நவிலல் - திரு.து.தவசிலிங்கம் (முகாமையாளர்)

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீன கர்த்தா, பிரதம குரு "வேதாகம மாமணி" சிவஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள் அவர்களின் ஆசிச்செய்தி

திருவருளோங்கும் திருமலை நகரில் திவ்விய ஷேத்திரங்களில் ஒன்றாக விளங்கும், கலியுக தெய்வமென போற்றப்படுகின்ற அருள்மிகு ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானத்தில் புனருத்தாரண திருப்பணி வேலைகள் மிகக் குறுகிய காலத்தில் சிறப்பாக நடைபெற்று, நவகுண்டபட்ஷ புனருத்தாரண மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது முருகப் பெருமானின் பேரருளை மேலோங்க உணர்த்தியுள்ளது.

இவ்வாலயத்தின் வளர்ச்சிக்குத் தன்னலமற்ற சேவையாற்றி வரும் ஆலய தர்மகர்த்தா திரு.இ.ஸ்ரீதரனும் முகாமையாளராக சேவையாற்றும் திரு.து.தவசிலிங்கம் ஆகியோரின் அயராத முயற்சியும், இறை நம்பிக்கையோடு கூடிய வழிநடத்தலும், பாலஸ்தாபனம் செய்யப்பட்ட சில மாதங்களில் கும்பாபிஷேகம் காணுகின்ற பாக்கியம் முருகப்பெருமான் பக்தர்களுக்குக் கிட்டியுள்ளது எனலாம், கும்பாபிஷேகம் எனும் பெருஞ்சாந்தி குடமுழுக்குச் சிறப்புற பணி செய்த, சிவாச்சாரியப் பெருந்தகைகள், தொண்டர்கள், கலைப்பணி செய்தோர், பக்த பெருமக்கள் அனைவருக்கும் கும்பாபிஷேகப் பலன் கிடைக்கப் பெற்று பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல கலியுக கந்தனாம் வள்ளி தேவசேனா சமேத முத்துக்குமாரப் பெருமானின் பேரருட் கடாட்சம் கிடைக்க அன்னை பத்திரகாளி அம்பாளின் பாதாரவிந்தங்களைப் பணிந்தேத்துவாம்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேக பிரதமகுருவின் ஆசிச்செய்திகள்!

ஒரு முருகா! என்றன் உள்ளங்
குளிர உவந்துடனே
வருமுருகா! என்று வாய்வெரு
வா நிற்பக் கையிங்கனே
தருமுருகா! என்று தான்புலம்
பாநிற்பத் தையல் முன்னே
திருமுருகாற்றுப் படையுட
னேவரும் சேவகனே

இந்து சமயத்தில் இறைவழிபாட்டுக்கு கிரியை, பக்தி இரண்டும் மிகமுக்கியம். பஞ்சபூதங்கள் வடிவாய இறைவனை பஞ்சபூதப் பொருளாகிய நிலம். நீர், தீ, காற்று, ஆகாயம் என்பவற்றால் ஆராதிக்கின்றோம். தீயாகி, நீராகி, திண்மையாகி, திசையாகி, அத்திசைக்கோர் ,தெய்வமாகத் தோன்றும் இறைவனை ஆலயங்களிலும், நீரிலும், அக்னியிலும் மந்திர பூர்வமாக வரவழைத்து அவரது உருவச்சிலையில் நீரினால் நிறைவு பெற ஆவாகிப்பது அபிஷேகம் என்றும், அக்னியில் ஆவாகனம் செய்து பூஜிப்பது யாகம் என்றும் இருவிதமாக வழிபடுகின்றோம்.

இங்கு அபிஷேகம் என்னும் சொல் இறைவனை நீரினால் நனைத்தல் என்பதாகும். இவ்வாறு இறைவனை மந்திரபூர்வமாக நீர் நிறைந்த குடத்தில் தியானம், ஆவாகனம் செயல்முறை, பாவனைகளால் பூரணமாக ஆவாகித்து ஆராதனை செய்து, ஆராதனை செய்த கும்பத்தை வேத மந்திர வாத்ய கோஷங்களுடன் இறைவனின் திருவுருவத்தில் அபிஷேகம் செய்து அவனைச் சாந்த சொரூபமாக திருவருள் சுரக்க வைப்பதே அபிஷேகம் எனும் அருட் செயலாகும்.

தட்ஷண கைலாசமென அழைக்கப்படும் திருகோணமலையிலே உலகில் எங்குமில்லாதவாறு குமாரலிங்கமாக அருள்பாலித்துக் கொண்டிருக்கும் முத்துக்குமாரருக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளிற்கும் மகாகும்பாபிஷேகம் நடைபெற்று முடிந்த இவ்வேளையில் இவ்ஆலயத்திற்கு திருப்பணிக் கும்பாபிஷேகம் செய்தவர்கள் நற்பேறுகள் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

"சர்வ ஜனா சுகினோ பவந்து சமஸ்தசன் மங்களானி பவந்து"
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

"குகா ப்'ஜா ப்ருகீர்த்தி" ஆச்சார்ய சிந்தாமணி
சிவஸ்ரீ முத்துக்குமார வைகுந்தவாச குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷே சர்வ சாதகாச்சாரியார் "ஸர்வ ஸாதகப் ப்ரயோக ரத்னா" சிவஸ்ரீ.ந.பிரசாந்தக்குருக்கள் வழங்கிய ஆசிச்செய்தி

துய்யதோர் மறைகளாலும்
துதித்திடற்கரிய செவ்வேள்
செய்ய பேரடிகள் வாழ்க
சேவலும் மயிலும் வாழ்க
வெய்ய சூர்மார்பு கீண்ட
வேற்படை வாழ்க அன்னான்
பொய்யில் சீர் அடியார் வாழ்க
வாழ்க இப்புவன மெல்லாம்

கருணையே வடிவான இறைவன் பஞ்ச பூதங்களிலும் இரண்டறக் கலந்திருக்கிறார். இதை மணிவாசகர்

"பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி

இதன் பொருள் :-

நிலம் :- ஸப்தம், ஸ்பரிஷம், ரூபம், ரஸம் கந்தம் எனும் 5 குணங்களைக் கொண்டது.
நீர் :- ஸப்தம், ஸ்பரிஷம், ரூபம், ரஸம் எனும் 4 குணங்களைக் கொண்டது.
தீ :- ஸப்தம் ஸ்பரிஷம், ரூபம், எனும் 3 குணங்களைக் கொண்டது.
காற்று :- ஸப்தம், ஸ்பரிஷம், எனும் 2 குணங்களைக் கொண்டது.
ஆகாயம் :- ஸப்தம்

இவ் ஐந்து உயர்நிலைகளிலும், இறைவன் நீக்கமற நிறைந்திருக்கிறான். அந்த இறையை பஞ்சபூத வடிவமான யாகசாலையில் எழுந்தருளச் செய்து பஞ்சபூதங்களைக் கொண்டு ஆராதித்து, திருக்கோவிலில் இருக்கும் திருவுருவத்திலே ஒன்று சேர்ப்பிப்பது மஹாசாந்தி எனப் பெயர் பெறுகிறது. மகத்தான இவ்வழிபாட்டினை ஆலயந்தோறும் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழ்த்தி இறை சக்தியை அதிகரிக்கச் செய்கிறார்கள். இப்பெருஞ்சாந்தி பல ஆலயங்களிலும் அந்தந்த சூழலுக்கு ஏற்ப விரிந்தும் ஒடுங்கியும் இடம்பெறுகிறது.இறையருட் பயனாய் இயல்பாகவே தெய்வீகத்தன்மை நிறைந்து விளங்கும் நித்திலம் கொழிக்கும் திருகோணமலை தன்னில் கோவில் கொண்டு விளங்கும் ஸ்ரீமுத்துக்குமாரசுவாமிப் பெருமானுக்கு 03.04.2016 அன்று நிகழும் திருக்குட நன்னீராட்டு மிக மிக உயர்வானது என்பதில் ஐயமில்லை. மேற்படி ஆலய தர்மகர்த்தாக்களின் ஆன்மீக தர்மப்பணி ஆலய அறநெறிப்பணிகள் போற்றதலுக்குரியதாகும். இவற்றுக்கெல்லாம் மகுடம் சூட்டினாற் போல் நல்லைக் கந்தனை ஆராதிக்க உதித்த குருமுதல்வர் சிவஸ்ரீ வைகுந்தவாசக் குருக்கள் மூலமாக திருக்குட நன்னீராட்டு நிகழ்வது மேலும் உயர்வையும், மகிழ்வையும் தருகிறது. தெய்வீகம் நிறைந்த பெருஞ்சாந்தி விழா சிறக்க கந்தவேளைப் பிரார்த்திக்கிறேன். பெருஞ்சாந்தி விழா சார்ந்து மலரவிருக்கும் திருக்குட நன்னீராட்டு மலரும் சிறக்க ஆசி கூறி அமைகிறேன். ஆலயத்தாருக்கும் அடியார் பெருமக்களுக்கும், எமது அன்பு கலந்த நல்வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம்
## கும்பாபிஷேக ஆசிச்செய்தி

குகநேயச் செல்வர்களே,

எல்லாம் வல்ல எம்பெருமானின் கண்ணில் இருந்து ஆறுதீப்பொறி புறப்பட்டு சரவணப் பொய்கையில் சென்றடைந்தன. இது கேள்வியுற்ற உமாதேவியார் ஓடிச்சென்று தாமரைக் குளத்தில் ஆறு தீப்பொறிகளும் ஆறு குழந்தைகளாக இருக்கக் கண்டு ஒரு சேர வாரி அணைத்தார். ஆறுவாரி குழந்தைகளும் ஒரு குழந்தையாக மாறியது. அதனால் குழந்தைகள் முத்துப் போல் இருந்ததால் முத்துக்குமரன் என பெயர் வந்தது.அந்த முத்துக்குமரனே தென் கைலாயம் என்று சொல்லப்படுகிற திருகோணமலையில் திருஞான சம்பந்தர் வீதியில் கோவில் கொண்டு நாடி வரும் பக்தர்கட்கு எல்லாம் நல்ல ஆசி வழங்கிக் கொண்டிருக்கிறார். அந்தப் பெருமானுக்கு மன்மத வருஷம் பங்குனி மாதம் 21ம் நாள் (03.04.2016) ஞாயிற்றுக்கிழமை கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதால் பக்தர்கள் எலலோரும் கலந்து எம்பெருமானின் அருளை பெற வேண்டுகிறேன். அவன் அருளாலே அவன் தாள் வணங்கி.

இவ்வண்ணம்
கோவில் குருக்கள்
பிரதிஷ்டா திலகம் ஸ்ரீ. கனகசபாபதிக் குருக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## கும்பாபிஷேக ஆசிச்செய்தி

உலகில் பிறந்துள்ள அனைத்து உயிரினங்களுக்கும், நிகழ்கால துன்பத்திற்கும் சாந்தி தரக்கூடிய நற்கருமம் எதுவோ, அதை ஆர்வத்துடன் அறிந்து செயற்படுத்த வேண்டும். எம்பெருமான் அகில உலகத்தையும் படைக்கும் போதே அதிலுள்ள பிராணிகளுக்கும் அறம், பொருள், இன்பம், வீடு எனும் புருஷார்த்தங்களை அடையச் செய்யும் வேதங்களையும், ஆகமங்களையும் அருளிச் செய்யும் அந்த வேத வாக்குகளின் படி இந்த ஆன்மாவானது உய்வடையவேண்டுதற்கு ஆலயம் அமைத்து அதில் தெய்வத்தைப் பிரதிஷ்டை செய்யும் கருமம் முக்கியமான இடத்தை வகிக்கின்றது. அந்த விதியின் படி நம் முன்னோர்கள் சிவ ஆகம விதி வழுவாது ஆலயங்களை அமைத்து, தெய்வங்களை பிரதிஷ்டை செய்து பூசித்து வந்தார்கள்.

அப்படியாக அவர்கள் எமக்கு அமைத்துத் தந்த ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து அவர்கள் செய்ததர்மத்தை அழியவிடாமல் காப்பாற்றுவதால் எமக்கு நான்கு மடங்கு புண்ணியம் கிடைக்கும் என்பது தத்துவம்.

உருவம் அற்ற அருவமான பரம் பொருளை எங்கள் சிற்றறிவிற்கு எட்டும் வகையில் திருவுருவங்களாக அமைத்து வழிபடுவது எமது வழிபாட்டு முறையாகும். அந்த வகையில் எங்க முத்துக்குமாரருக்கு அவரது ஞான வடிவாகிய வேலின் உருவத்தைக் கொடுத்து, அதைத் தங்க வேலாக அமைத்து வெள்ளியாலான ஓங்காரரூபமான மயிலின் மேல் ஸ்தாபித்து, சிவசக்தியின் நடுவில் வீற்றிருக்கும் சோமாஸ்கந்த தத்துவத்தை விளக்கி நிற்பது போல் கருவறையில் அமைந்திருக்கும் குமார லிங்கத்தின் மடிமேல் அமர்ந்திருந்து, வேலுண்டு வினையில்லை. மயிலுண்டு பயமில்லை என்று தன்னை நாடி வரும் அடியவர்களுக்கு அருளை வாரி வழங்கி வரும் எங்கள் முத்துக்குமரனுக்கும், அவரது பரிவார தெய்வங்களுக்கும் மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மனமகிழ்ச்சியடைவதோடு, இந்த விழாவை சிறப்பான முறையில் நடத்துபவர்களுக்கும், விழாவில் கலந்து கொள்ளும் முத்துக்குமரனின் பக்தர்கள் அனைவருக்கும் எம்பெருமானின் கருணைப் பேரருள் கிடைக்க வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றேன்.

சுபம்

இவ்வண்ணம்
சிவஸ்ரீ சதா இராதாகிருஷ்ணக்குருக்கள்
ஸ்ரீகும்பத்துமால் கருமாரி அம்பாள் ஆலய பிரதமகுரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் குகமயம்

## திருகோணமலை மடத்தடி
## ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஆலயம்
## பிரதமகுரு சிவஸ்ரீ கனக நித்தியானந்தக் குருக்கள் அவர்களின்
## ஆசிச்செய்தி

திருகோணமலை திருஞான சம்பந்தர் வீதியில் கோவில் கொண்டு பன்னெடுங் காலமாக அருள் ஆட்சி புரியும் எம்பெருமான் முத்துக்குமார சுவாமிக்கும் ஏனைய பரிவார மூர்த்திகட்கும் நிகழும் மன்மத வருடம் பங்குனி மாதம் 21ம் நாள் 03.04.2016 திருக்குடமுழுக்கு பெருஞ்சாந்தி என்று சொல்லப்படுகின்ற மகாகும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. அந்த வகையில் இறைவழிபாடும் இறை நம்பிக்கையும் காலம் காலமாக எம்மையும் எமது குலத்தையும் நல்வழிப்படுத்தி வந்திருப்பதை நாம் இதிகாச, புராண, சரித்திர வாயிலாக அறிகின்றோம். அதன் அடிப்படையில் மனிதர்களாகிய நாம் ஆறறிவு பெற்று இருப்பினும் வாழ்க்கை வசதிகளை பலவாறாக பெருக்கியிருப்பினும் வாழ்க்கையில் சில பல காரியங்களை எம்மால் செய்ய முடியாத போது இறைவன் துணையை நாடுகின்றோம் எனவே எமது சமயத்தில் தோன்றிய ஞானிகள் அறிஞர்கள் ஆலய வழிபாட்டை செய்து எமக்கு நல்வழி காட்டினார்கள் அவர்கள் காட்டிய வழிபாட்டின்அடிப்படையாக விளங்குவது அகத்தூய்மை புறத்தூய்மை இத்தூய்மையின் அடிப்படையிலே இறையருள் பெறலாம் எனவே எமது முன்னோர்கள் தாபித்த ஆலயங்களை காத்தும் வளர்த்தும்கும்பாபிஷேகங்களை நடாத்தி தூய்மையான எமது மன வெளிப்பாட்டை இறைவன் பால் செலுத்தி மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற முத்துக்குமாரனை வணங்கி இறையருள் பெறுவோமாக

"லோக சமஸ்தா சுகினோ பவந்து"
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவாகமகிரியாமணி, கிரியாபானு, ஆகமஜோதி
## சிவஸ்ரீ சு.மணி.கிருஸ்ணகுமார் குருக்கள்
## ஸ்ரீ விஸ்வநாதசுவாமி (சிவன்) கோவில் அவர்களின்
## ஆசிச்செய்தி

ஆலயங்களை வெறும் வழிபாட்டுக் கூடங்களாக நாம் எண்ணுவதில்லை. இறைவனின் இருப்பிடமாகவும், இறை வடிவாகவும் எண்ணி வழிபடுகிறோம். உடலின் ஒவ்வொரு பகுதியும் ஆலயமாக உள்ளது. அதே போன்று ஆலயத்தின் ஒவ்வொரு பகுதியும் உயிர்களின் உடலோடு, ஆத்மாவோடு, உயிர்சக்தியோடு தொடர்புடையது..

ஆலயத்திலுள்ள பராசக்தியைப் பெறுவதற்காக உயிர் சக்திகள் ஆலயத்திற்குச் செல்கின்றன. இருட்டில் மெல்லிய ஒளியில் மூல மூர்த்தியை வணங்கும் போது ஊன்றிக் கவனித்தால் மட்டுமே வணங்க முடியும். இப்படிச் செய்வதால் மனம் குவிதல், ஒரு நிலைப்படுதல், கவனித்தல் திறன் மனோவிஞ்ஞானம் ஆகியன வளருகின்றன. எனவே பரிணாம வளர்ச்சியில் விலங்கு நிலையிலிருந்து வளர்ந்த மக்களைத் தெய்வ நிலைக்கு உயர்த்தவே கோயில்கள் கட்டப்படுகின்றன.

புதிய கோயில்களைக் கட்டுவதற்கும் பழைய கோயில்களைப் புனருத்தாரணம் செய்வதற்கும், விக்கிரகங்களை அமைப்பதற்கும், பூசைகள், விழாக்களை நடத்துவதற்குமான விதிமுறைகளை ஆகமங்கள் விரிவாகக் கூறுபவற்றை நோக்குமிடத்து கோயில் வழிபாடு சமுதாயத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளமையை உணர முடிகிறது.

சிவாகமங்கள் கூறும் கிரியைகளுள் மிக முக்கியமானதும், அருளுக்கு அடிப்படையானதும் கும்பாபிஷேகம் ஆகும். ஒருவன் தன் நலம் கருதி வாழ்நாளில் செய்து கொள்ளும் சாந்திக் கிரியைகளைப் போலன்றி, எல்லா உயிர்களும் குறைவில்லாது வாழ்வதன் பொருட்டு நிகழ்த்தப்படுவதாற் குடமுழுக்கானது பெருஞ்சாந்தி என்று போற்றப்படுகின்றது. கோயில்களில் இடம்பெறும் பூசைகளும், விழாக்களும்சமய உணர்வையும் பக்தியையும் வளர்ப்பதோடு சமூக மயப்பாடுக்கும் ஒற்றுமைக்கும் பங்களிப்பு நல்கின்றன.

இவ்வகையில் இலங்கை நாட்டில் பல ஆலயங்கள் காணப்படுகின்றன. திருகோணமலையில் உள்ள மிக முக்கியமான ஆலயங்களுள் ஒன்றான முத்துக்குமாரசுவாமி ஆலயம் நிலைப்பேற்றுணர்விற்கும், நம்பிக்கைக்கும் அடையாளமாக எழுந்து நின்று கும்பாபிஷேகம் நிறைவு பெறவும் கும்பாபிஷேக மலரும் சிறப்புற வாழ்த்தி ஆசியுரை வழங்குவதில் மகிழ்வடைகிறேன்.

ஆகவே நாடடில் சமாதானம், இனங்களுக்கிடையே ஒற்றுமை, எல்லோருக்கும் சுபீட்சமான வாழ்க்கை, மன அமைதி நாட்டில் செழிப்பு அனைத்தையும் எல்லாம் வல்ல முருகப்பெருமானின் வேலும், மயிலும் கொடிய வினை தீர்த்து அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில் பிரதம சிவாச்சாரியாரும், நிர்வாகஸ்தரும் ஆகிய "வேதாகம பக்திரட்ணா" "சிவாச்சாரியமணி"**

**சிவஸ்ரீ.சுரானந்தேஸ்வர சுதாகரக்குருக்கள் அவர்கள் வழங்கிய ஆசியுரை**

தேவாரப் பாடல் பெற்றதும், தட்சிண கைலாசமாகவும் விளங்கும் திருக்கோணமலையிலே திருக்கோணேஸ்வரப் பெருமான் வீற்றிருந்து அருள்பாலிக்கும் இப்புண்ணியபூமியில் அருள் ஆட்சி புரியும் அருள்மிகு முத்துக்குமாரசுவாமி ஆலயம் இருப்பது அடியார்கள் அனைவரும் அறிந்ததே!

"இந்திரன் குமரியோர் பால் எயினர் தம் பாவையோர் பால் சந்ததமிருப்பவானோர் முனிவர் சங்கம் சூழப் பந்தமதகலுந் தொண்டர் பரிவுடன் குகவென்றேத்தக் கந்தனாங்கிருந்த மாட்சி கழறுதற்கெளிதன்றம்மா இவ்வாறு வள்ளி தேவ சேனா சமேதராக ஆலயத்தில் அருட்காட்சி தருகின்றார்.

இவ்வாலயத்தில் எனது தாத்தா ஆகிய சிவஸ்ரீ பூரண.சண்முகரெத்தினக்குருக்கள் அவர்கள் பல வருடங்கள், நித்திய பூசை,திருவிழா - நடாத்தி வந்தார்கள் என்பது அடியார்கள் அனைவருக்கும் நன்கு தெரியும். மேலும் எதிர்வருகின்ற பங்குனித்தினங்களில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

மஹாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல மாதுமை அம்பாள் சமேத கோணேஸ்வரப் பெருமானினதும் அருள்மிகு வில்லூன்றிக் கந்தசுவாமியாரினதும் பொற்பாத கமலத்தை வணங்கி நல்லாசிகளை கூறி எனது ஆசியுரையை நிறைவு செய்கிறேன்.

சர்வே ஜனா சுகினோ பவந்து

மக்கள் அனைவரும் இன்புற்று வாழ்க
வாழ்க வளமுடன்

சிவ.சுரானந்தேஸ்வர சுதாகரக்குருக்கள்
வில்லூன்றிக் கந்தசுவாமி ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச்செய்தி

"கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை"யான் ஆட்சி செலுத்தும் இத்திருகோணமலை நகரின் மத்தியில் வடக்கு நோக்கி சிவகுமாரனாக குமாரலிங்கமாக தங்கவேலும் லிங்க வடிவுமாக காட்சி நல்கும் சிறப்பு வாய்ந்த முத்துக்குமாரஸ்வாமி ஆலயத்தில் பல வருடங்களுக்குப் பின்பு பல திருப்பணி வேலைகள் செய்யப்பெற்றும் அழகிய ஓவியங்களால் கண்களை முருகன் பால் ஈர்க்கச் செய்தும் ஒளியும் அழகும் மிக்க ஆலயமுமாக பல முயற்சிகள் செய்தும் அயராது உழைத்தும் இன்றும் மஹா கும்பாபிஷேகம் செய்வதை இட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வாலயம் அருளாற்றல் மிக்கது. பக்தர்கள் வேண்டிய வரங்களைப் பெற்று மகிழ்வதனை நாம் கண் கூடாகக் காண்கின்றோம்.

முருகப் பெருமான் வாரி வழங்குவதில் வள்ளல். வள்ளியின் கணவராதலால் வள்ளல் அவனைச் சரண் புகுந்தால்எதனையும் பெறலாம்.

முருகா சரணம் குமரா சரணம்
என அவனை வழிபட்டு ஆசி கூறுகின்றேன்.

இவ்வண்ணம்
சிவஸ்ரீ வ.சிவகுமாரக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"**

எழில் கொஞ்சும் இலங்கைத் திருநாட்டில் திருகோணமலை எனும் பாடல் பெற்ற திருத்தலமாகிய மாதுமை அம்பாள் சமேத திருகோணேஸ்வரர் பெருமானின் கண்ணே அமர்ந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி திருக்கோவில் மஹாகும்பாபிஷேகம் (03.04.2016) சுபமுகூர்த்த வேளையில் இடம்பெறுகின்ற இப்புண்ணிய கைங்காரியத்தை நடாத்திக் கொண்டிருக்கும் சிவாச்சாரியார்களே, ஆலய பரிபாலர்களே, இவ் மஹா கும்பாபிஷேகத்தை காண வந்திருக்கும் முருகப் பெருமானின் பக்த அடியார்களே அருள்மிகு ஸ்ரீமுத்துகுமாரசுவாமி பெருமானின் அருள் கடாட்சம் இலங்கை திருநாட்டில் இனமத வேறுபாடின்றி வாழும் அனைத்து பக்தர்களுக்கும் எம் பெருமானின் திருவருள் கிடைக்க எல்லாம் வல்ல அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்பாளை வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

சிவஸ்ரீ சுந்தர சாந்த மூர்த்தி குருக்கள்
பிரதிஷ்டாதிலகம்
ஆகம ஞான சுரபி
அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்மன் கோவில்
உவர்மலை, திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலடி விநாயகர் தேவஸ்தானம்
திருக்கோணமலை

## அருள்மிகு முத்துக்குமார சுவாமி தேவஸ்தானம்

இத்திருத்தலத்தில் குடியிருக்கும் லிங்கப் பெருமானை குமாரலிங்கம் என்றே அடியவர்கள் கூறுவர். அருவமாகி, உருவமாகி, அருவுருவமாகி அருள்பாலிக்கும் கலியுகவரதனும் முத்துக்குமாரன் தங்கவேலில் உறைந்து குமாரலிங்கத்துடன் அருள்பாலிக்கும் சிறப்பு இத்திருத்தலத்திற்கு உண்டு. இவ்வாலயத்தில் எழுந்தருளியாய் இருக்கும் வள்ளி, தெய்வயானை சமேத முத்துக்குமாரர் பொன்னொளி வீசும் சிறப்புடையவர். இத்திருவுருவங்கள் வார்க்கப்படும் போது தாராளமாக பொன்னை அள்ளி சேர்த்ததால் இவ்வொளி உண்டாயிற்று என என் மூதாதையர்கள் கூறக் கேட்டிருக்கின்றேன்.

இத்திருக்கோவிலை நன்கு பராமரிக்கும் தர்மகர்த்தாவான திரு.இ.ஸ்ரீதரன் குடும்பத்தினரும், முகாமையாளராக சேவையாற்றும் திரு.து.தவசிலங்கம் குடும்பத்தினரும் பெரும் அர்ப்பணிப்புடன் கருமமாற்றுவதால் எம்பெருமான் ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. மிகச் சிறந்த சிவாச்சாரியப் பெருமக்கள் இத்தரும காரியத்தை நடாத்த இருப்பதை பார்க்கும் போது எம்பெருமான் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

இத்திருப்பணியில் சேவையாற்றும் சகலருக்கும் சித்திகளை அள்ளி அருள வேண்டும் என ஆலடி விநாயகப் பெருமானை வேண்டி என் நல்லாசிகளை வழங்குகிறேன்.

ஸ்ரீலஸ்ரீ மு.சுந்தரலிங்க தேசிகர்
ஆதீனகர்த்தா, பிரதமகுரு
சைவப் பேரறிஞர், ஜோதிட சித்தாந்தசேகரம்
அகில இலங்கை சமாதான நீதவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කාර්යාලය/அலுவலகம்/Office
විපක්ෂ නායක කාර්යාලය,
03 වැනි මහල, පාර්ලිමේන්තුව,
ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம்,
03 ஆவது மாடி, பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.

Office of the Leader of the Opposition,
03rd Floor, Parliament,
Sri Jayewardenepura Kotte.

ආර්.සම්බන්දන්, පා.ම.
இரா. சம்பந்தன், பா.உ.
R. Sampanthan, M.P.
විපක්ෂ නායක - ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව
எதிர்க்கட்சித் தலைவர் -இலங்கைப் பாராளுமன்றம்
Leader of the Opposition-Parliament of Sri Lanka

දුරකථන/தொலைபேசி/Telephones:
කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2777253, 011-2777256
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2777257, 011-2777285
නිවස / வதிவிடம் / Residence: 011-2559787, 026-2227520
විද්‍යුත් තැපැල් / மின்னஞ்சல் / E mail: sampanthan_r@parliament.lk, samtco@yahoo.com

**திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவருமான கௌரவ இரா.சம்பந்தன் அவர்கள் வழங்கும் ஆசிச் செய்தி.**

வரலாற்றுச் சிறப்புமிகு திருகோணமலை நகரின் மத்தியில் எழுந்தருளியிருந்து அடியார்களுக்கு அருள்பாலித்துவரும் பழம்பெரும் ஆலயமான அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானத்தின் மகாகும்பாபிஷேகத்தையொட்டி வெளியிடப்படவுள்ள சிறப்பு மலருக்கு பக்திபூர்வமாக ஓர் ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வெய்துகின்றேன்.

இவ் ஆலயம் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிலிருந்து வருகை தந்த சித்தரினால் பிரதிஸ்டை செய்யப்பட்ட லிங்கத்தோடு கர்ப்பக்கிருகத்தில் தங்க வேலையும் வெள்ளி மயிலையும் கொண்டமைந்துள்ளது. திருகோணமலைத் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பெருமதிப்பார்ந்த திரு.என்.ஆர்.இராஜவரோதயம் அவர்களது மூதாதையர்களால் இவ் ஆலயம் உருவாக்கப்பட்டு நீண்டகாலமாக தொடர்ந்து அவர்களால் சிறப்புறப் பரிபாலிக்கப்பட்டு வந்துள்ளது. இரண்டாம் உலகமகா யுத்தம் இடம்பெற்ற காலத்தில் திருகோணமலையில் அமைந்துள்ள அனேக ஆலயங்கள் நாளாந்த பூசைகள் மற்றும் நித்திய கருமங்கள் ஏதுமின்றி பூட்டப்பட்டிருந்த வேளையில், அடியார்கள் வழிபாடியற்றுவதற்கேற்ற வகையில் திறக்கப்பட்டிருந்த ஆலயங்களில் இதுவும் ஒன்றென என அறியக்கிடைக்கின்றது.

அப்பகுதி அடியார்கள் மட்டுமன்றி, அப்பகுதிக்கு வருகைதரும் அடியார்களும் இவ் ஆலயத்தில் வழிபாடியற்றி வருகின்றனர். இத்தகு சிறப்புமிகு ஆலயம் வழிபடுவோரின் பெருமுயற்சி காரணமாக வளர்ச்சி கண்டு கும்பாபிஷேகம் இடம்பெறும் பெருமையைப் பெற்றுள்ளது. ஆலய வரலாறுகளில் பன்னீராண்டுக்கொரு முறை நிகழும் கும்பாபிஷேகம் என்பது மிக முக்கியமான ஒரு நிகழ்வாகும். அத்தகையதொரு கும்பாபிஷேகத்தை வடமாகாணத்தின் வரலாற்றுப் பெருமைமிகு ஆலயமான நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பிரதம குருவான சிவஸ்ரீ வைகுந்தவாசக் குருக்கள் தலைமையில் நடாத்தவிருப்பது மற்றொரு சிறப்பம்சமாகும்.

இவ் ஆலயத்தின் நித்திய கருமங்கள் தொடர்ந்தும் சிறப்புற நடைபெற வேண்டுமெனவும் மென்மேலும் இவ் ஆலயம் வளர்ச்சிபெற்று அனைவருக்கும் அருள்பாலிக்க வேண்டுமெனவும் எல்லாம் வல்ல அருள்மிகு முத்துக்குமாரசுவாமிப் பெருமானை வேண்டுவதுடன், இவ் ஆலயத்தின் வளர்ச்சிக்கும் கும்பாபிஷேக செயன்முறைக்கும் உதவி ஒத்தாசை புரிந்த நல்லுள்ளம் கொண்டோர் அனைவருக்கும் இவ்வேளையில் எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், ஆலய கும்பாபிஷேகம் சிறப்புற நடந்தேறவும் அது தொடர்பான மலர் சிறப்புற அமையவும் எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்!**

இரா. சம்பந்தன்

இரா.சம்பந்தன், பா.உ.,
எதிர்க்கட்சித் தலைவர்

இரா.சம்பந்ன் பா.உ
எதிர்க்கட்சித் தலைவா
எதி.்கட்சித், தலைவா அலுவகைம்
பாராளுமனறம்
ஶ்ரீ ஜயவர்தனபுர கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம்**
**மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு**

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு டி.எம்.சுவாமிநாதன் அவர்களின் வாழ்த்துச் செய்தி



திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ள மகாகும்பாபிஷேகத்திற்கும், அதனையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுமார் இருநூறு வருட பழைமையும், கீர்த்தியும் மிகுந்த இவ்வாலயம் சித்தர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டு பூஜிக்கப்பட்ட ஆலயமாகவும் அனர்த்த காலங்களில் கூட அடியவர்களுக்கு அருள்கதவு திறந்து அருள்பாலித்த அற்புத ஆலயமாகும்.

இயற்கையின் எழில்கொஞ்சும் திருகோணமலை நகரில் அருடபொலிவு, ஆன்மீகப்பெருமை, பக்தர்களின் பக்திப்பரவசம் என்பவை காரணமாக இவ்வாலயம் கும்பாபிஷேகம் கண்டுள்ளமை சிறப்பாகும். இலங்கைவாழ் இந்து மக்களின் கலை, கலாசாரம் என்பன நீடித்து நிலைத்திருப்பதற்கு ஆலயங்களே பெருந்தூண்களாக விளங்குகின்றன. இத்தகு சிறப்புப் பொருந்திய ஆலயங்களைப் பேணிக்காத்தல் மிக மிக அவசியமாகும்.

அந்தவகையில் அருள்மிகு ஸ்ரீ முத்துக்குமாரசாமி ஆலயத்தின் புனருத்தாரன மகா கும்பாபிஷேகத்தை சிறப்புற நடாத்தவுள்ள சிவாச்சாரியப் பெருமக்களுக்கும் ஆலய பரிபாலனக்குழுவினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். எல்லாம் வல்ல முத்துக்குமாரசுவாமியின் அருளால் அமைதியும், இன்பமும் பல்கிப்பெருக பிரார்த்திப்போமாக.

டி.எம். சுவாமிநாதன்
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும்
இந்துமத அலுவல்கள் அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පාර්ලිමේන්තුව

பாராளுமன்றம்

**PARLIAMENT**

204/6 லோவர் வீதி
திருகோணமலை

தொ.பே -: 0262227715
தொ.நகல் -:026-2055100

திருக்கோணமலை முத்துக்குமார சுவாமி தேவஸ்தான மகா குடமுழுக்கு 2016.04.03ஆந் திகதி நடைபெற முருகப்பெருமானின் திருவருள் கூடியுள்ளதையும், இதனை முன்னிட்டு சிறப்பு மலர் வெளியிட இருப்பதையும் அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியுடன் எல்லாம் வல்ல முருகப்பெருமானின் அருளை எண்ணிப்போற்றுகிறேன்.

தெட்சணகைலாயம் எனப்போற்றப்படுகின்ற திருக்கோணேஸ்வரம் அமைந்துள்ள திருகோணமலையின் நடு நாயகமாக அமைந்துள்ளது அருள்மிகு முத்துக்குமார சுவாமி தேவஸ்தானம். பல வரலாற்றுப் பெருமைகளைக் கொண்டு விளங்குவது இப்புனிதத்திருத்தலம்.

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் இருந்து வந்த சித்தர் அவர்களினால் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்யப்பட்டதாக ஆலய வரலாறு கூறுகிறது. இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது திருகோணமலை நகரம் வெகுவாகப்பாதிக்கப்பட்டது. இவ் யுத்தகாலத்தின் போதும் இவ்வாலயம் பூட்டப்படாது மக்கள் வழிபட்டு அருள்பெற்ற திருத்தலமாக விளங்குகிறது. நகரின் மத்தியில் கலியுகக்கந்தனாகிய முருகப்பெருமான் எழுந்தருளி வேண்டுவோர் வேண்டுவதை ஈந்து அருள்பாலித்து வருகின்றார்.

இத் தேவஸ்தானத்தின் அறங்காவலர் சபையினர் இவ்வாலயத்தின் முகாமைத்துவத்தை மிகவும் செம்மையாக நடத்தி வருவது சிறப்புக்குரியது. குறிப்பாக திருவாளர்.து.தவசிலிங்கம் அவர்கள் முகாமையாளராக இருந்து இவ்வாலய வளர்ச்சியில் கூடுதலான பங்கு கொண்டு வருகிறார் அன்னாரின் வழிகாட்டலில் இவ் ஆலயம் நாளாந்தம் வளர்ச்சி பெற்று வருகின்றது. இத்தெய்வீகப்பணியில் அர்ப்பணிப்புடன் இவ்வாலய முகாமையாளரோடு சேர்ந்து செயற்திறனுடன் செயற்படும் அறங்காவலர் சபையினரையும் ஏனைய அன்பர்களையும் பாராட்டி நன்றி கூற அனைவரும் கடமைப்பட்டவர்கள். இவர்களது இத் தெய்வீகப்பணி மென்மேலும் சிறப்புற எல்லாம் வல்ல முருகப்பெருமானை வேண்டுகிறேன்.

நன்றி

க. துரைரெட்ணசிங்கம்

க.துரைரெட்ணசிங்கம்
பாராளுமன்றஉறுப்பினர்
திருகோணமலை

க. துரைரெட்ணசிங்கம்
நாடாளுமன்ற உறுப்பினர்
(தேசியப் பட்டியல்)
204/6, லோவர் வீதி
திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின்
வாழ்த்துச் செய்தி



இயற்கை எழில் கொஞ்சும் இலங்கைத் திருநாட்டில் வரலாற்றுப் புகழ் மிக்கதும், பாடல்பெற்ற தலத்தினைத் தன்னகத்தே கொண்டதுமான திருகோணமலைப் பிரதேசத்திலே 200 வருட பழைமை வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஆலயத்தில் சிறப்பாக நடைபெற உள்ள மகா கும்பாபிஷேகத்திற்கும் அதனை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

சித்தரினால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கத்தோடு கர்ப்பக்கிருஹத்தில் தங்க வேலையும், வெள்ளி மயிலையும் கொண்ட அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம் சிவ-ஸ்கந்த ஐக்கியத்தின் அடையாளமாக விளங்குகின்றது.

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்த பெருமான் அருளாட்சி செய்யும் திருகோணமலை நகரிலே சுவாமி நாதனாக தந்தைக்கே உபதேசித்த முருகப்பெருமானுக்கு கோயில் அமைத்த பெருமை சித்தர்களுக்கு மட்டுமல்ல, இம்மண்ணின் மக்களுக்கும் உரித்தாகும்.

அந்தவகையில் தொன்மையும், அருட்சக்தியும் மிக்க அருள்மிகு ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானத்தில் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவுள்ளமை வாழ்த்துக்குரியதாகும். மகாகும்பாபிஷேகத்தை நடத்தவுள்ள சிவாச்சாரியப் பெருமக்களுக்கும், ஆலய அறங்காவலர்களுக்கும், முகாமைக் குழுவினருக்கும், கும்பாபிஷேக மலர்க்குழுவினருக்கும் எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**அ. உமாமகேஸ்வரன்,**
பணிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதீன தர்மகர்த்தாக்கள்



அந்நாள் ஆதீன கர்த்தா
அமரர்.
திரு.ந.இ.இராஜவரோதயம்



இந்நாள் ஆதீன
தர்மகர்த்தா
திரு.இ.ஸ்ரீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகாமையாளர்கள்



அமரர்.திரு.முத்துக்குமாரப்பிள்ளை நவரெட்ணம்



அமரர்.திரு.பரமநாதபிள்ளை சிவசேகரம்




அமரர்.திரு.செ.லிங்கரெட்ணம்



அமரர்.திரு.சி.சிவானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை வழங்கும் குருமார்கள்



வேதாகமாமணி
ஸாக்த ஸ்ரீ சோ.ரவிச்சந்திரக்குருக்கள்
பத்ரகாளிகோவில்,திருகோணமலை



மகாகும்பாபிஷேகப்பிரதமகுரு
"குகா பூஜா ப்ரகீர்த்தி" ஆச்சார்ய
சிந்தாமணிசிவஸ்ரீ முத்துக்குமார
வைகுந்தவாசக்குருக்கள்



ஸர்வ ஸாதகப்ரயோகர்த்ன
சிவஸ்ரீ ஃபிரசாந்தக்குருக்கள்
(வட்டுக்கோட்டை)



சிவஸ்ரீ சதாராதாகிருஷ்ணக்குருக்கள்
ஸ்ரீ கருமாரிஅம்பாள் ஆலய பிரதமகுரு



சிவஸ்ரீ கனகசபாபதிக்குருக்கள்
(அருள்மிகுமுத்துக்குமாரஸ்வாமி
தேவஸ்தானம்)



சிவஸ்ரீ கனகநித்தியானந்தகுருக்கள்
(ஸ்ரீ கிருஸ்ணன் கோவில்)



சிவஸ்ரீ வ.சுதாகரக்குருக்கள்
(வில்லூன்றிக் கந்தசாமிகோவில்)



சிவஸ்ரீ சு.மணிகிருஷ்ணகுமாரகுருக்கள்
(ஸ்ரீ விஸ்வநாத ஸ்வாமிதேவஸ்தானம்)



சிவஸ்ரீ வ.சிவகுமாரக்குருக்கள்
திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபடை வீடு

## திருப்பரங்குன்றம் – முதலாவது படைவீடு



மதுரையில் இருந்து 10 கி.மீ தூரத்திலுள்ள
குடைவரைக்கோயில் கோபுரம் 1050 அடி
உயரமுள்ளது.
தீர்த்தம் :– சரவணப் பொய்கை
திருத்தலச் சிறப்புக்கள் :–
தெய்வயானைத் திருமணம் நடைபெற்றது
முருகன் சிவனை நோக்கித் தவம் செய்தது
பார்வதி பரமேசுவரரைத் தரிசித்த சிவத்தலமாகவும் விளங்குகிறது.



## திருச்செந்தூர் – திருச்சீரலைவாய் – 2வது படைவீடு



திருநெல்வேலியில் இருந்து 55கி.மீ தூரத்தில்
கடற்கரையோரமாக அமைந்துள்ளது. சூர சங்காரத்தின்
பின்னர் முருகன் தாமரை மலர் கொண்டு
பஞ்சலிங்கங்களை துதித்த இடமாகும். கருவறையில்
முருகன் நின்ற திருக்கோலத்தில் உள்ளார்
அவரின் பின்னால் இந்த 5 பஞ்சலிங்கங்களையும்
காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபடை வீடு தொடர்ச்சி...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபடை வீடு தொடர்ச்சி...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலுள்ள பிரசித்திபெற்ற முருகன் ஆலயங்கள் சில...



கதிர்காமம்




நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானம்




வெருகலம்பதி சித்திரவேலாயுத சுவாமி ஆலயம்




செல்வச் சந்நிதி ஆலயம் - தொண்டமானாறு



வில்லூன்றி கந்தசுவாமி ஆலயம் -திருக்கோணமலை



மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹா கும்பாபிஷேக நிகழ்வுகள் - 2002









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹா கும்பாபிஷேக நிகழ்வுகள் - 2002 தொடர்ச்சி...






2002ல் புதிதாக அமைக்கப்பட்ட
பள்ளியறை முருகன்



2002ல் புதிதாக அமைக்கப்பட்ட
பள்ளியறை சித்திரத்தேர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகோற்சவம்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகோற்சவத் தொடர்ச்சி ...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகோற்சவ தேர்திருவிழா





1994ல் சித்திரத்தேரை
உருவாக்கிய ஆச்சாரியர்குழு



ஈசான மூலையில் தேவார புராணம்
(கலைமகள் முன்பள்ளிச் சிறார்கள்)



ஈசான மூலையில் தேர்ச்சிந்து
(தி/ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி மாணவிகள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாலஸ்தாபன நிகழ்வுகள் - 2016
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு முத்துக்குமாரசுவாமி
# தேவஸ்தான வாகனசாலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனசாலை தொடர்ச்சி...









புதிதாக வெள்ளியால்
வடிவமைக்கப்பட்ட மயில்வாகனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசை நடனக் கலாலயம்








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரும்பிப் பார்க்கிறேன்

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்பது மூதாட்டி ஔவையின் முதுமொழி. நாகரீக சமூகத்தில் மானிடர் யாவர்க்கும் அடையாளம் அவர் தம் மொழியும் சமயமுமேயாகும். இதில் நாம் இந்து சமயம் மற்றும் நாம் தமிழர்கள் என்பது எம்மை பெருமை கொள்ள வைக்கின்றது. தமிழ் மொழி அநாதியானது அவ்வாறே இந்து சமயமும் அநாதியானது. அநாதியான இந்து மதம் இன்று வரை அழியாதிருப்பது ஆலய வழிபாட்டினாற்றான் என்றால் மிகையாகாது. ஆலய வழிபாடு மனிதகுலத்தை வழிப்படுத்தும் வகையினால் ஒழுக்கமுள்ள சமுதாயம் இன்று வரை வாழ்வது கண்கூடு.

திருகோணமலைக்கு தெட்சண கைலாயம் என்று மற்றொரு பெயரும் உண்டு. திருக்கோணமலையில் அருளோச்சும் கோணைநாதரை விளித்து ஞானசம்பந்தப் பெருமான் பாடுகையில் "கோவிலும் சுனையும் சூழ்ந்த" என்று பாடியதற்கு இவ்விடம் சூழ உள்ள கோவில்களே காரணமாயிற்று. அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருக்கோவில் நகரின் மத்தியில் அமைந்து நல்லருளை வழங்குவதால் ஏனைய திருத்தலங்களோடு இணைந்து சம்பந்தப் பெருமானால் பாடப்பெற்றது என்றால் மிகையாகாது.

200 ஆண்டுகளுக்கு முன்பு தான்தோன்றியாக கிடைக்கப் பெற்ற தங்கவேலை சடையனார் என்னும் ஞானி ஒரு குடிசைக் கோவிலில் வழிபட்டு வந்த போது அவருக்கு பின் திரு செல்லையாப்பிள்ளை என்னும் பெரியார் அக்குடிசைக் கோவிலை பராபரித்து வந்ததாகவும் அவரது மறைவிற்குப் பின் எனது மூதாதையரான அமரர் சண்முகப் பிள்ளை அவர்கள் அக்கோவிலை ஆதரித்த வேளை, ஒரு சந்நியாசியானவர் காசியில் இருந்து ஒரு சிவலிங்கத்தை கொணர்ந்து திரு. சண்முகம்பிள்ளையவர்களை ஏற்க வேண்டுதல் செய்த வேளை, கோவிலில் வேலுடன் எங்ஙணம் சிவலிங்கத்தை பிரதிஸ்டை செய்ய முடியும் என்ற அவர்தம் எண்ணப்பாட்டிற்கு கனவில் இறைவன் அவ்வாறே வழிபடலாம் என உணர்தியதானால் கோவிலில் கருவறையில் வேலுடன் சிவலிங்கமும் வைத்து பூசிக்கப்படடு இன்று வரை மூலவர்களாக இருப்பதைக் காணலாம். அத்தோடு இல்லாமல் ஆலய அமைப்பிற்கான இடங்களையும் இறைவனே காட்டியதனால் பரவசமடைந்த செல்வந்தரான அமரர். சண்முகம்பிள்ளை ஆலயத்தை பரிகார மூர்த்திகள் மற்றும் தீர்த்தக்கிணற்றையும் கட்டி கி.பி 1889 ஆனி மாதம் 10th திகதி முதல் கும்பாபிஷேகம் செய்தார் என அறியக் கிடைக்கின்றது. இக்காலத்தே எம்பெருமான் தீர்த்தம் ஆடுவதற்கு இன்று சரவண பொய்கை என்று அழைக்கப்படும் கேணியும் கோவிலின் மேற்குப் புறத்தே அமைக்கப்பட்டது வரலாறாயிற்று. திருகோணமலையில் சுவாமி தீர்த்தமாடும் கேணி அருகிலேயே உண்டாக்கப்பட்டது இதுவே முதல் முறையாகும். ஆலயத்தை அமைத்ததுடன் நின்று விடாமல் ஆலய பராமரிப்பிற்கு தேவையான வருவாய் தரும் ஆதனங்களையும் கோவிலுக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பெரியவர் எழுதியதால் ஆலய பராமரிப்பு பிற்காலத்தில் இலகுவாயிற்று. அமரர் சண்முகம்பிள்ளை அவர்கள் மறைவிற்குப் பின் அவரின் மருகர் அம்பலவாணரும் அவருக்குப் பின் அவருடைய மருகர் அமரர் நவரெட்ணமும் ஆலயத்தைப் பராபரித்து வந்தார்கள். பின் எனது தந்தையான அமரர் இராஜவரோதயம் அவர்கள் பொறுப்பேற்றிருந்த போதிலும் அவர் இளையவராக இருந்ததனால் அவரின் மாமனார் அமரர் லிங்கரெட்ணம் ஆலயத்தை பராபரித்து வந்தார். இவர் காலத்தே 1932 ஆம் ஆண்டு சித்திரை 6ம் திகதி இரண்டாவது கும்பாபிஷேகம் இனிதே நடந்திருந்தது. இதன் பின் எனது தந்தையரான இரத்தின இராஜவரோதயம் அவர்கள் பராபரிப்பு பொறுப்புக்களைச் சுமந்து இனிதே நடாத்தியதோடல்லாமல், தமது சொத்துக்களில் ஒரு பகுதியினை அளித்து ஆலயத்திற்கு மூன்றாவது கும்பாபிஷேகம் செய்யும் எண்ணத்தினையும் கொண்டிருந்தார். ஆனாலும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த எனது தந்தையார் 1950 இல் கண்டெடுக்கப்பட்ட கோணேசப் பெருமானுக்கு கோவில் கட்டும் மகத்தான பணியில் தன்னை அர்ப்பணித்ததோடல்லாமல் அவரே முன்னின்று கோணேசப் பெருமானுக்கு 03.04.1963 இல் கும்பாபிஷேகம் செய்து அந்த நிறைவோடு இறைபதம் எய்தியதால் முத்துக்குமாரசுவாமி கோவில் பராபரிப்பு பொறுப்பு என்னைச் சார்ந்தது. ஆனாலும் நான் வேலை விடயமாக வெளியே இருக்க நேர்ந்ததால் , ஆலய பராபரிப்பு பொறுப்புக்களை எனது மாமனாரான அமரர் சி.சிவானந்தம் அவர்களிடம் ஒப்புவித்திருந்தேன். இவருடைய காலத்தே ஆலயம் துரித வளர்ச்சி கண்டது. புனருத்தானப் பணிகளை இனிதே நிறைவேற்றிய அமரர். சிவானந்தம் 25.04.1983 அல் மூன்றாவது கும்பாபிஷேகத்தை நடாத்தி முடித்திருந்தார். கட்டுத் தேர் ஓடிய ஆலயத்தில் ஒரு சித்திரத் தேர் ஓட வேண்டும் என்னும் எண்ணத்தால் ஈர்க்கப்பட்டு அது தொடர்பான கருமங்களைத் தொடங்கிய போதும் அது நிறைவேறு முன்பே 1994 இல் அமரர் சிவானந்தம் இறைபதம் எய்தினார். ஆலய பராமரிப்பு பொறுப்பானது என்னைச் சார்ந்த போதிலும் எனது வேலைப்பளுவின் காரணத்தால் எனக்கு உதவியாக திரு. து.தவசிலிங்கம் அவர்களை முகாமையாளராக பொறுப்பேற்குமாறு நான் வேண்டிய போது அவர் மகிழ்ச்சியுடன் அப்பொறுப்பினை ஏற்று இன்று வரை செவ்வனே நடாத்தி வருவது ஒரு சிறப்பு. 1994 ஆம் ஆண்டின் பின் ஆலயம் மிக துரித வளர்ச்சி கண்டுள்ளது. ஒரு கல்யாண மண்டபம் கட்டப்பட்டதோடு ஆலய சேவையாளர்கட்கான விடுதிகள் நான்கும் கட்டப்பட்டதோடு ஆலயத்திற்கான வாகனங்களும் புதிதாக செய்யப்பட்டு வான்தொடு சப்பரமுமாக எம்பெருமான் ஆலயம் வளர்ச்சி கண்டுள்ளது. புனருத்தானம் செய்யப்பட்டு சுற்றுமண்டபம் பூர்த்தியாகி நான்காவது கும்பாபிஷேகம் 27.06.2002 இல் சிவஸ்ரீ பரமேஸ்வரக்குருக்கள் தலைமையில் இனிதே நிறைவேறியது முத்துக்குமாரரின் திருவருட்கடாட்சமென்றே கொள்ள வேண்டும்.

"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது முதுமொழி. ஆகம விதிப்படி ஆலயங்கள் பராமரிக்கப்பட வேண்டும் என்பது எமது சமயத்தின் நியதி. இதன்படி இன்றுவரை ஆகமவிதிகளுக்கு அமைவாக முத்துக்குமாரர் ஆலய பூசைகள் நடைபெறுவது அவர்தம் அருளேயாகும். இரண்டாம் உலக யுத்தத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து ஆலயங்களும் பூட்டப்பட்ட வேளை தினசரி பூசைகள் நடைபெற்ற ஆலயமாக முத்திரை பதித்திட்ட முத்துக்குமாரசுவாமி ஆலயம் திருகோணமலையில் ஐந்து காலப் பூசைகள் நடக்கும் ஒரே ஆலயமாக திகழ்வது ஒரு சிறப்பாகும். அர்த்த ஜாமப் பூசைகளின் போது எம் பெருமான் சயன அறைக்கு சிறிய சித்திரத்தேரில் தினசரி செல்வது வெகு சிறப்பு என்றே சொல்லலாம்.

தமிழ் உணர்வும் சமய அறிவும் இளம் சந்ததியினரிடையே தளைக்க வேண்டும் என்னும் எண்ணக்கருவில் ஆலய மண்டபத்தில் திருமதி. விஜயகுமாரி தவசிலிங்கத்தால் தொடங்கப்பட்ட "இசை நடன கலாலயம்" இளம் சந்ததிகட்கு சங்கீதத்தில் ஒரு ஈர்ப்பையும் சமயத்தில் ஒரு பற்றையும் தோற்றுவித்திருக்கின்றது என்றால் மிகையாகாது. இலவசக் கல்வி காரணமாக ஆயிரக்கணக்கான சிறுவர் சிறுமியர் சங்கீதத்தில் தேர்ச்சி பெற்று பண்ணோடு பாடும் திறமை பெற்று பொதுப் பரீட்சைகளில் சித்தியடைந்திருப்பது தமிழர்களின் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையின்மையை குறைந்துள்ளது என்றே சொல்லலாம். இப்போது ஆலயம் முழுமையாக புனருத்தானம் செய்யப்பட்டு ஐந்தாவது மகா கும்பாபிஷேகம் 03.04.2016 நடைபெற இருப்பது இறைவன் திருவருளேயாகும்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர்
திண்ணியராகப் பெறின்"

என்பது திருவள்ளுவர் திருவாக்கு. "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்பது முதுமொழி. முத்துக்குமாரரின் திருவருளால் நடைபெற இருக்கும் மகா கும்பாபிசேகம் சிறப்பாக நடைபெறுவதோடு அவனருளால் அனைத்து மக்களும் நல்லாசிகள் பெற்று உய்யுமாறு பிரார்த்திக்கிறேன்.

**"என் கடன் பணி செய்து கிடப்பதே"**

**இ. ஸ்ரீதரன்**
**தர்மகர்த்தா**

இவ்வுலகம் ஒரு முட்செடி போன்றது. முட்செடியின் முள்ளில் மாட்டிக்கொண்டுள்ள துணியின் ஒரு பகுதியை விடுப்பதற்குள் மற்றொரு பகுதி மாட்டிக் கொள்கின்றது. உலகமெனும் முட்செடியில் அகப்பட்டுக் கொள்கின்றவர்களின் கதியும் அப்படியே.

**- வாரியார் வாக்கு -**

கடவுளிடம் பக்தி செலுத்தும் வயதும், உருவமும் குறுக்கிடாது. கல்வி, செல்வம், ஜாதி, பலம் முக்கியமல்ல. சல்ல ஆசாரம், நற்குணம் இவற்றிலும் இறைவன் அவ்வளவாக கவனம் செலுத்துவதில்லை. அவர் அன்பு ஒன்றையே எதிர் பார்க்கிறார்.

**- வாரியார் வாக்கு -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய வளர்ச்சி - அன்றும் இன்றும்

தெட்சண கைலாயம் என்றும் சிவபூமி என்றும் பெயர் பெற்ற திருகோணமலை திருநகரத்தை ஏற்றிப் போற்றிய சைவப் பெரியார்கள் பலருண்டு. அண்மைக் காலத்தே நம்மிடையே வாழ்ந்து மறைந்த யோகர் சுவாமிகள் இந்நிலமெங்கனும் சிவலிங்கங்கள் நிறைந்து இருப்பதால் இங்கே காலூன்றி நடக்க மாட்டேன் என்று கூறியதில், இப்பூமியின் மகத்துவம் விளங்கிக் கொள்ளப்படுகின்றது. கோவிலும் சுனையும் சூழ கோணைநாதப் பெருமான் உள்ளார் என்று திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் பாடியது இத் திரு நகரில் சனீஸ்வரப் பெருமானுக்கு தனிக்கோவில் அமைந்திருக்கும் நிகழ்வால் விளக்கமாயிற்று. ஆலயங்கள் மிகச் செறிந்த இடத்திலேயே காகவாகனச் சனிபகவானுக்கு ஆலயம் அமைக்கலாம் என்பது ஐதீகம். ஆலயங்கள் கோலோச்சும் அரும் நகரின் மத்தியில் அருள்மிகு முத்துக்குமாரசுவாமியின் திருக்கோவில் அமைந்திருப்பது அவனின் திருவருள் என்றே கொள்ள வேண்டும். “மானிடராய் பிறக்க மாதவம் செய்திட வேண்டும்” என்பது முதுமொழி. மானிடப் பிறப்பின் நோக்கம் ஆன்மாவை முக்தி பெறச்செய்வது என்றால் அ∴து இறையருளால் மட்டுமே முடியக் கூடியது. சாதாரண மக்கள் இறையருள் பெற்றிட துணை நிற்பது இறைவன் உறையும் ஆலயங்களேயாகும்.

இரண்டேகால் நூற்றாண்டுகளுக்கு முன்பு திருகோணமலை மத்தியில் வாழ்ந்த சடையர் என்னும் ஞானிக்கு தான் தோன்றியாக கிடைக்கப் பெற்ற தங்கவேலை சிறு கோவில் வைத்து பூஜிக்கும் பாக்கியம் கிட்டியிருந்தது. அன்னாரின் அந்திம காலத்தில் அக்கோவிலை பராபரிக்கும் பொறுப்பை அமரர் சண்முகம்பிள்ளையவர்கள் ஏற்றுக் கொண்ட போதிலும், காசியிலிருந்து வந்த சந்நியாசியின் வேண்டுகோளை தட்ட முடியாது இறைதுணையை நாட வேண்டியதாயிற்று. காசியிலிருந்து சந்நியாசி கொணர்ந்த சிவலிங்கத்தை இக்கோவில் வேலுடன் வைத்து வழிபட வேண்டும் என்னும் கோரிக்கைக்கு பதிலாக அமரர் சண்முகப்பிள்ளையவர்கள் கனவில் இறைவன் திருவாக்காக “வேலுடன் சிவலிங்கம் இருக்கலாம்” என்று சொல்லப்பட்டதன் விளைவாகவே இன்றும் முத்துக்குமாரசுவாமி திருக்கோவில் கருவறையில் சிவலிங்கமும் தங்கவேலும் பிரதிஸ்டை செய்யப்பட்டு பூஜிக்கப்பட்டு வருகின்றது. இப்பெரியார் காலத்தே எம்பெருமான் ஆலயத்தில் முதற்கும்பாபிஷேகம் 1889.06.10 அன்று இனிதே நடைபெற்றதாக வரலாறு மூலம் அறியக்கிடைக்கின்றது. அமரர் சண்முகம்பிள்ளை இல்லறத்தில் தவவாழ்க்கை வாழ்ந்ததன் காரணமாக அச்செல்வந்தரின் சொத்துக்களில் பெரும்பகுதி ஆலயபராமரிப்பிற்கு அன்னாரினால் எழுதப்பட்டதால், இன்றும் ஆலய பராபமரிப்பு இடரின்றி இனிதே நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தவம் செய்வார் தம்கருமம் செய்வார் மற்றெல்லாம் அவம் செய்வார் ஆசைப்பட்டு" என்னும் முதுமொழிக்கு அரணாக வாழ்ந்த அப்பெரியார் மறைவின் பின் அவரின் பரம்பரையில் வந்த அமரர் அம்பலவாணர், அமரர் நவரெட்ணம் ஆகியோர் ஆலயத்தை பராமரித்து வந்தார்கள். அமரர் நவரெட்ணத்திற்கு பின் அன்னாரின் புத்திரர் அமரர் இரத்தின இராஜவரோதயம் பொறுப்பேற்ற போதிலும், அவர் இளைஞராக இருந்த காரணத்தால் அவரின் மாமனார் அமரர் லிங்கரெட்ணமே ஆலயத்தை பராமரித்து வந்ததோடல்லாமல், இரண்டாவது கும்பாபிசேகத்தையும் 06.04.1932 இல் நடாத்தி முடித்திருந்தார் என வரலாறு கூறுகின்றது. அமரர் இரத்தின இராஜவரோதயம் திருகோணமலையின் பாரளுமன்ற உறுப்பினராகவும் இருந்ததினால் கடற்கரையில் கண்டெடுக்கப்பட்ட கோணைநாதப் பெருமான் மற்றும் பரிவாரமூர்த்திகட்கு கோவில் கட்டும் மகத்தான பணியிலும் தன்னைப் பிணைத்ததோடல்லாமல் கோணேசப் பெருமானுக்கு 1962 ஆம் ஆண்டு கும்பாபிசேகம் நாடாத்தி முடித்த திருப்தியோடு, 1963 ஆம் ஆண்டு அமரரான பின், முத்துக்குமாரசுவாமி திருக்கோவிலை பராபரிக்கும் பொறுப்பு அன்னாரின் மூத்த புதல்வர் இ.ஸ்ரீதரன் பால் சேர்ந்தது. இளைஞராக இருந்த ஸ்ரீதரன் வேலை விடயமாக வெளியே இருந்ததால் அவர்தம் மாமனாராகிய அமரர் சிவானந்தம் அவர்களை முகாமையாளராக்கி அவரிடம் பராமரிப்பு பொறுப்புக்களை ஒப்புவித்திருந்தார்.

அருள்மிகு முத்துக்கமாரசுவாமி தேவஸ்தானத்திற்கு ஒரு சிறப்புண்டு. இரண்டாம் உலக யுத்தத்தின் போது திருகோணமலையில் உள்ள சகல ஆலயங்களிலும் பூசைகள் நிறுத்தப்பட்டு பூட்டப்பட்ட வேளை அடியவர்களை அரவணைக்கும் முகமாக திறந்திருந்த ஒரே ஆலயம் என்ற மகோத்துவம் இவ்வாலயத்திற்கு உண்டு. அமரர் சிவானந்தம் காலத்தே ஆலயத்தில் பல்வேறுபட்ட திருப்பணிகள் தொடங்கப்பட்டன. ஆலயத்தின் வலது புறத்தே மண்டபமும் வாகனசாலையும் அமைக்கப்பட்டதோடு ஆலய முன்றலில் கோபுரத்திற்கு முன்பதாக நிரந்தர மண்டபமும் அமைக்கப்பட்டதோடு நவக்கிரகங்களுக்கான கோவிலைக் கட்டி ஆறுமுகப் பெருமானுக்கு அர்த்த மண்டபத்தோடு ஆலயமும் கட்டி அமரர் இராஜவரோதயத்திற்கு ஒரு நினைவு நிலையமும் இடப்புறத்தே அமைக்கப்பட்டது. புணருத்தானப் பணிகளை செவ்வனே நிறைவேற்றியதோடல்லாமல் மூன்றாவது கும்பாபிசேகத்தையும் 25.04.1983 ஆண்டில் வெற்றிகரமாக நிறைவேற்றியிருந்தார். ஆலயத்தில் கட்டுத்தேர் இழுக்கப்பட்டு வந்த வேளையில் ஒரு உயரமான சித்திரத்தேர் உலா வர உருவாக்கப்பட வேண்டும் என்னும் எண்ணத்தால் ஈர்க்கப்பட்ட அமரர் சிவானந்தம் அவர்கள் அதற்கான பாரிய பணிகளை தொடங்கியிருந்தார் எனினும் அஃது முடிவடையும் முன்பே இறைபதம் எய்தியிருந்தார். அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருக்கோவிலில் அமரர் சிவானந்தம் ஐயா வேண்டுகோளின் பேரில் எனது தந்தையார் அமரர் இ.துரைசாமி அவர்கள் வசந்த மண்டபத்தின் பக்கமாக உள்ள மண்டபத்தினை கட்டி முடித்து கொடுத்திருந்தார். அப்பணியின் போது அமரர் சிவானந்தம் ஐயாவுடன் பழகும் வாய்ப்பு எனக்கு கிட்டியது. இதன் காரணமாக அமரர் சிவானந்தம் ஐயா நோய் வாய்ப்பட்ட காலத்தில் திரு இ.ஸ்ரீதரன் தர்மகர்த்தா அவர்களின் வேண்டுகோளினை ஏற்று முகாமையாளராக செயற்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மதித்திருந்தேன். அமரர் சிவானந்தம் ஐயா அவர்கள் 1994 ஆம் ஆண்டு இறைபதம் எய்தியதன் பின்பு நான் முழுநேர முகாமையாளராக பொறுப்பினை ஏற்றுக் கொண்டேன் அமரர் சிவானந்தம் ஐயா எண்ணக்கருவில் உதித்திருந்த சித்திரத்தேர் திருநெல்வேலி சிற்பகலாவல்லுனர் திரு.சு.இராசரெட்ணம் குழுவினரால் அழகாக முடிக்கப்பட்டு 23.05.1994 வெள்ளோட்டம் விடப்பட்டது. திருகோணமலையில் உள்ள சித்திரத் தேர்களில் மிக உயரமானது இதுவேயாகும். அத்தோடு சித்திரத் தேர் செய்ய வந்திருந்த இன்றைய கமலாலயம் கலைகூட சகோதரர்களின் செயற்பாடுகளில் ஈர்க்கப்பட்டதால் அந்த குழுவினர் மூலம் ஆலயத்திற்கு தேவையான வாகனங்களை செய்யும் முயற்சி தொடங்கப்பட்டது. ஆலயத்தில் அதுவரை முருகப் பெருமான் உலாவர அழகான மயில் வாகனமும் கந்தஷஷ்டிக்கான சூரனும் இருந்ததால் ஒரு கிடா வாகனம், கிளி வாகனம், இரண்டு மயில் வாகனங்கள், மூன்று தாமரை வாகனங்கள், மூன்று யானை வாகனங்கள், மூன்று குதிரை வாகனங்கள், மூன்று எருது வாகனங்கள், வானுயர் சப்பரம், (இதுவே திருகோணமலை ஆலயங்களில் உள்ள அதியுயர் சப்பரம்) சேந்தை மற்றும் தண்டிகை ஆகியவை மகோற்சவத்தின் போது திருவுலா வருமுகமாக 1995 ஆம் ஆண்டிலேயே அழகாக செய்து முடிக்கப்பட்டது. ஆலயத்தின் உள்ளே கல்யாணம் நடத்தும் போது ஆசாரமில்லாத பலதரப்பட்டவர்களும் ஆலயத்திற்குள் நுழைவதை குறைக்கு முகமாக 80 அடி நீளத்தில் ஆலயத்தின் முன்பாக ஒரு அழகிய கல்யாணமண்டபம் அமைக்கப்பட்டது. அதே 1999 ம் ஆண்டு கல்யாண மண்டபத்தின் பின்புறமாக ஆலய குருமாருக்கான விடுதியாக இரட்டை விடுதியும் கட்டப்பட்டது. ஆலயத்தை சுற்றி வர உள்வீதியில் மேற்குப் புறமாக மட்டும் மண்டபம் அமைக்கப்பட்டிருந்ததால் உள்வீதி பூராவும் மண்டபம் அமைக்கப்பட்டு வசந்தமண்டப முன்றலும் கொன்கிறீட் தளத்தினால் மூடப்பட்டு வசந்த மண்டப வாசலும் 2002 ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. இத்தருணத்தில் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட பிள்ளையாரை பிரதிஸ்டை செய்யுமுகமாக ஆலய வலது பக்கமாக தனிக்கோவில் அமைக்கப்பட்டது. முத்துக்குமாரர் வள்ளி தெய்வயானையுடன் சயனம் கொள்ள ஒரு சயன அறையும் உருவாக்கப்பட்டதோடு அர்த்த மற்றும் ஸ்தம்ப மண்டபங்கள் முழுமையாக புனருத்தாரனம் செய்யப்பட்டன. இக்கட்டுமானங்கள் காரணமாக அடியவர்கள் உற்சவத்தின் போதும், பூசைகளின் போதும் மழை, வெயில் என்ற பிரச்சினையில்லாமல் எம்பெருமானை தொழுதிட வழிவகுக்கப்பட்டுள்ளது ஒரு சிறப்பேயாகும்.

எமக்கென்று பரிபூரணமான கலை கலாச்சாரம் இருந்து வந்துள்ளது. எமது முன்னோர்கள் எமது அடையாளமான கலை கலாச்சார விழுமியங்களை பேணிக்காத்து வந்துள்ள போதிலும் இன்றைய இளம் சிறார்கள் அத்தகைய விழுமியங்களை பேணாத தன்மை காணப்படுகின்றது. இன்றைய நாகரீக வளர்ச்சியில் ஈடுபாடு கொண்ட இளம் சந்ததியினர், உலகமயமாதல் காரணமாக, எமது அடையாளங்களை இழக்கும் நிலைக்கு தள்ளப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. இலத்திரனியல் வளர்ச்சி காரணமாக எமது பண்பாடுகளும் மாற்றமடைந்து வருகின்றன. இத்தகைய சூழ்நிலையில் எமது கலை கலாச்சார விழுமியங்களின் அடையாளமான கர்நாடக சங்கீதத்தினையும் பரத நாட்டியத்தினையும் பேணிக்காத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிவரும் எமது சந்ததியினரிடம் ஒப்புவிக்க வேண்டிய பாரிய பொறுப்பு எமக்குள்ளது. இத்தகைய பாரிய பணியில் அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம் 16 ஆண்டுகளாக ஈடுபட்டு வருவதை நோக்குமிடத்து எமது இனத்தின் அடையாளங்கள் எதிர்காலத்தில் பேணப்படும் என்பதில் நம்பிக்கை வருகின்றது. சங்கீத வித்வான் விஜயகுமாரி தவசிலிங்கம் ஆலயத்தின் அனுசரணையுடன் ஆலய கல்யாண மண்டபத்தில் இலவச சங்கீத மற்றும் நடனக்கலைகளை பயிற்றுவிக்குமுகமாக "இசைநடன கலாலயத்தை" 2002 ஆம் ஆண்டு தொடங்கிய போது அம்முயற்சிக்கு ஆலயத்தால் முழு ஆதரவும் அளிக்கப்பட்டது. இன்று 15வது ஆண்டு பூர்த்தியை கொண்டாட இருக்கும் இசைநடன கலாலயத்தின் இலவச சேவையால் ஈர்க்கப்பட்ட ஆயிரக்கணக்கான இளம் பராயத்தினர் வட இலங்கை சங்கீத மற்றும் நடன பரீட்சைகட்கு தோற்றி 1[st] பிரிவு சித்திகளை அள்ளி இருப்பது அவர்களுக்கு எமது கலை கலாச்சாரத்தில் ஏற்பட்டுள்ள ஈர்ப்பை காட்டுகின்றது.

"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் முதுமொழிக்கு ஒப்பாக திருமதி.விஜயகுமாரியால் தொடங்கப்பட்ட இலவச வகுப்புக்கள், கலாலயத்தில் கற்று பல்கலைக்கழகங்கள் வரை சென்று வந்த மாணவ மாணவியரால் தொடருவது கலாலயத்தின் எதிர்காலத்தை பிரகாசமாக்கியுள்ளது என்றால் மிகையில்லை. பால்மணம் மாறாத பாலகர் பண்ணிசை பயில்வதும் வளர்ந்த சிறுவர் சிறுமியர் வீணை, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், வாய்ப்பாட்டு பயின்று இசைப்பதும் நடன ஆசிரியைகளிடம் நடனம் பயில்வதுமாக தினசரி ஆலயமண்டபம் கலகலப்பாக இருப்பதை பார்க்கையில் எமது அடையாளம் அழிவில்லாது தொடரும் என்ற நம்பிக்கையை நம்மிடையே ஊட்டி நிற்பது மகிழ்ச்சியேயாகும்.

2002[ம்] ஆண்டு கும்பாபிசேகத்தின் பின்னர் இத் திருக் கோவிலில் ஐந்து காலப்பூசைகள் நடைபெறுவதும் தினசரி எம்பெருமான் காலை பள்ளியறை திருப்பள்ளியெழுச்சிப் பூசையோடு சயனமண்டபத்தில் இருந்து மூலஸ்தானத்திற்கு சிறிய தேரில் எழுந்தருளுவதும், அர்த்த ஜாமபூசையோடு திரும்பவும் சயனமண்டபத்திற்கு தேரில் வலம் வந்து திருவனந்தலுக்குச் செல்வதும் சேர்த்து ஐந்து கால பூசைகள் நடைபெற்று வருகின்றன.

காலத்தின் கோலத்தால் பல ஆலயங்களில் பலவிதமான மாற்றங்கள் வந்திருந்தாலும் எமது ஆலயத்தில் பூசை புனஸ்காரங்கள் ஆகமவிதிப்படியே அந்தண சிவாச்சாரியார்கள் மூலம் நடைபெற்று வருகின்றது. 1994 இற்கு முன்பு சிவாச்சாரியார்கள் தரித்து இருந்து சேவை செய்யும் முகமாக விடுதிகள் இல்லாத குறை நிவர்த்தி செய்யப்பட்டு இன்று அர்ச்சகர்கட்கு 04 பெரிய விடுதிகளும் ஏனைய சேவையாளர்கட்கு 04 விடுதிகளும் அமைக்கப்பட்டிருப்பதனால் அர்ச்சகர்கள் ஆலய சுற்றாடலில் தங்கியிருந்து ஆகம விதிப்படி சேவையாற்றும் நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் முதன்முதலாக கட்டப்பட்ட இரட்டைவிடுதி உடைக்கப்பட்டு சிவஸ்ரீ இராதாகிருஸ்ண குருக்கள் காலத்தே பிரதம குருக்களுக்கு சகல வசதிகளுடன் (பலகனி ஈறாக) அமைக்கப்பட்ட பெரிய விடுதி ஒரு சிறப்பம்சம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய தோற்றத்தில் மாற்றங்கள் செய்தாலும் அந்தண சிவாச்சாரியார் சேவை முழுமையடையாதவிடத்து ஆகம விதிப்படி பூசை புனஸ்காரங்கள் நடைபெறுவது கடினம். இந்நிலையில் கடந்த காலத்தே நற்சேவை நல்கிய சிவாச்சாரியார்களாக,

பிரம்ம ஸ்ரீ இராஜமாணிக் குருக்கள்

பிரம்மஸ்ரீ சண்முகரத்தின சர்மா

சிவஸ்ரீ பூரணசண்முகரத்தினம் குருக்கள்

சிவஸ்ரீ.இ.இராஜேஸ்வரக்..குருக்கள்

சிவஸ்ரீ சதா இராதாகிருஷ்ண குருக்கள்

சிவஸ்ரீ..கனகநித்தியானந்தக் குருக்கள்

ஆகியோர் நினைவு கூரத்தக்கவர்கள். இவர்களை விட அமரர் பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்த குருக்கள் தேவைக்கு ஏற்ப சேவைகளை நல்கியதையும் பிரம்மஸ்ரீ சுந்தரம் ஐயர் சாந்தமூர்த்தி குருக்கள் பிரம்மஸ்ரீ குமரக் குருக்கள் இன்றைய தினங்களில் தேவைக்கேற்ப நல்கும் சேவையும் நினைவு கூறத்தக்கவை. அந்தண சிவாச்சாரியார்களோடு மற்றைய சேவைகளை நல்கியோரையும் இத்தருணத்தில் நினைவு கூருவது கடமையாகின்றது. எல்லோராலும் மணியப்பு என்றழைக்கப்பட்ட திரு.பாலசுப்பிரமணியமும் திரு.பொன்னுத்துரையும் அவர்தம் சேவைகட்காக நினைவு கூரத்தக்கவர்கள். இன்று நோய்வாய்ப்பட்டு விலகி இருந்தாலும் ஆலயம் அவர்கட்கு ஓய்வூதியம் போன்று நிதி உதவி அளித்து வருகின்றது.

எமது ஆலயத்தின் சிறப்பு என்னவெனில் இங்கு தொண்டராக சேவையாற்றும் இளைஞர்கள் பல்கலைக்கழகங்களிற்கு தெரிவானோர் அல்லது பட்டப்படிப்பு முடித்தோர் என்பது இன்றும் தொடரும் நிலையாக உள்ளது எம்பெருமான் அருள் என்றே கொள்ள வேண்டும். மட்டிக்களி பிரதேசத்தில் அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமான சுமார் 05 ஏக்கர் காணியானது பாழ்பட்டிருந்த நிலையில் பலராலும் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நிலையை மாற்றி இன்று சுமார் 45 குடும்பங்கள் குத்தகைக்கு குடியிருக்கும் இடமாக மாற்றியமைத்து அவர்கள் நல்வாழ்விற்கு வழிசமைத்த நிகழ்வு ஒரு மைல்கல்லாகும். இக்குடியேற்றத்திற்கு நாம் வழங்கிய பெயரான "இராஜவரோதயம் சதுக்கம்" இன்று எல்லோரினாலும் ஏற்கப்பட்டிருப்பது ஒரு மகிழ்ச்சியான விடயமேயாகும். அதே போன்று தம்பலகாமத்தில் உள்ள 25 ஏக்கர் வயலையும் ஒழுங்காக குத்தகைக்கு அளித்து வருமானம் பெறுதோடு, கங்காணி குள வயல் 30 ஏக்கரையும் அவ்வண்ணமே குத்தகைக்கு விட்டு வருமானம் பெறும் வகையான ஏற்பாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரந்தரமாக்கப்பட்டுள்ளதோடு நகரத்தில் உள்ள குத்தகை குடியிருப்பாளர்கள் நிலையும் புதுப்பிக்கப்பட்டு வருவது ஒரு நடைமுறையாக உள்ளது.

பல முன்னேற்றகரமான நிகழ்வுகள் நடைபெற்று முடிந்துள்ள போதிலும் எம்பெருமான் தீர்த்தமாடும் சரவணப்பொய்கை என்று அழைக்கப்படும் தீர்த்தகேணியை விஸ்தீரணமாக்கும் பணி இன்னமும் கைகூடவில்லை. வருடாவருடம் அதிகரிக்கும் பக்தர்கள் நலன் கருதி அந்தப் பணியையும் செய்து முடிக்க எம்பெருமான் திருவருள் சித்திக்கட்டும் என்று பிரார்த்தனை செய்து கொள்வதோடு ஆலய வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் அனுசரணையாகவும் செயற்படும் அன்பர்கள் முத்துக்குமாரரின் திருவருள் பெற்று உய்யும் வண்ணம் பிரார்த்திப்போமாக.

திரு து.தவசிலிங்கம்

முகாமையாளர்

**சரியான மனப்பான்மை :**

ஒரு பக்தருக்கு ஒரு மகன் இருந்தான். அவன் திடீரென்று ஒருநாள் இறந்து விட்டான். பக்தருக்கு மகனின் இழப்பால் வருத்தம் தோன்றவே இல்லை. அதைச் சாதாரண நிகழ்வாகவே கருதினார். மக்கள் உடவவருடைய போக்கை கண்டு அவரை அணுகி "உங்களின் மகன் இறந்து போயிருக்கும் போது நீங்கள் எப்படிக் கவலையில்லாமல் இருக்கின்றீர்கள்?" எனக் கேட்டனர்.

பக்தர் சொன்னார் "தோட்டத்தின் காவலன் தோட்டத்தில் மலர்ந்த மலர்களை மாலையாக தொடுத்து அதைத் தன் எஜமானனிடம் கொடுத்து திரும்பும் போது அழுகிறானா? கவலையடைகிறானா? அதே போல் எல்லாப் பொருட்களும் இறைவனுடையவை என்னிடம் தந்த பொருளை இறைவனிடம் திரும்ப அளித்து விட்டேன். இதில் எனது கவலை என்ன? என்று பதில் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம்

### கும்பாபிஷேக நிகழ்வுகள்

- 1வது கும்பாபிஷேகம் :- 10.06.1889 இல் ஆலய தர்மகர்த்தாவாக இருந்த அமரர்.சண்முகம்பிள்ளை அவர்களால் நடாத்தப்பட்டது.

- 2வது கும்பாபிஷேகம் :- 06.04.1932 இல் ஆலய தர்மகர்த்தா அமரர் இ.இராஜவரோதயம் மற்றும் முகாமையாளர் அமரர்.லிங்கரெட்ணம் ஆகியோரால் நடாத்தப்பட்டது.

- 3வது கும்பாபிஷேகம் :- 25.04.1983 அல் ஆலய தர்மகர்த்தா திரு இ.ஸ்ரீதரன் மற்றும் முகாமையாளர் அமரர் சி.சிவானந்தம் ஆகியோரால் நடாத்தப்பட்டது.

- 4வது கும்பாபிஷேகம் :- 27.06.2002 இல் ஆலய திரு இ.ஸ்ரீதரன் மற்றும் முகாமையாளர் திரு து.தவசிலிங்கம் ஆகியோரால் நடாத்தப்பட்டது.

- 5வது கும்பாபிஷேகம் :- 03.04.2016 இல் ஆலய தர்மகர்த்தா திரு இ.ஸ்ரீதரன் மற்றும் முகாமையாளர் திரு.து.தவசிலிங்கம் ஆகியோரால் நடாத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குட முழுக்கு காணும் முத்துக்குமாரப் பெருமான்

திருக்கோணமலை அருள்மிகு ஸ்ரீ முத்துக்குமார சுவாமி ஆலயம் பழமை மிகு வரலாற்றுச் சிறப்பும், வழிபாட்டுப் பெருமையும் கொண்ட ஆலயமாகும். சுமார் 1800ம் ஆண்டளவிலிருந்து இவ்வாலயம் அடியார்களின் வழிபாட்டுத் தலமாக விளங்குகின்றது.

இவ்வாலயம் அன்றுதொட்டு இன்று வரை நித்திய, நைமித்திய கிரியைகள், விஷேட உற்ஷவங்கள், திருப்பணிகள் என்பன காலம் தவறாமல் நடைபெற்றுக் கொண்டு வருவன ஓர் சிறப்பம்சமாகும்.

முத்துக்குமார சுவாமி அற்புதங்களையும், வரலாற்றுப் பெருமைகளையும் கூறும் பல நூல்கள் உள்ளன. அவற்றில் திரு.த.சரவணமுத்துப்பிள்ளை, சைவப் புலவர் திரு.வடிவேல் அவர்கள், திரு.கனகசுந்தரம்பிள்ளை ஆகியோர் இயற்றிப் பாடிய பாடல்களில் எம்பெருமானின் அருட்கடாட்சம் மேலோங்கி நிற்பதை உணர முடிகிறது.

கலியுகத்தின் கண்கண்ட தெய்வமென போற்றப்படுகின்ற முத்துக்குமார சுவாமி ஆலயத்திற்கும், திருக்கோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கும் பண்டுதொட்டு இன்று வரையுள்ள உறவினை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். திருக்கோணமலை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இ.இராஜவரோதயம் ஆலயத்தின் தர்மகர்த்தாவாக இருந்த காலத்திலிருந்து இத்தொடர்பு நீடிக்கின்றது. திரு.இராஜவரோதயம் அவர்கள் திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலய ஆதின கர்த்தாவாக இருந்த எனது தந்தையார் சிவஸ்ரீ சு.கு.சோமஸ்கந்தக் குருக்களுடன் ஆலயம் சம்பந்தமாக நெருக்கமான தொடர்பினை பேணி வந்தார்.

ஆலயத்தில் நடைபெறும் நற்பணிகள் எதுவாயினும் அவ்வப்போது சோமஸ்கந்த குருக்களோடு கலந்து சிந்தனை செய்து ஆலோசனைகளை இராஜவரோதயம் அவர்கள் பெறுவார்கள். மேலும் ஆலயத்தில் நடைபெறும் நித்திய, நைமித்திய, விசேட பூஜைகள், உற்ஷவங்கள் சிறப்பாக நடாத்துவதற்கு எனது தந்தையாரின் ஆலோசனைகளையும், வழிகாட்டலையும் பெற்று இராஜவரோதயம் அவர்கள் சிறந்த முறையில் ஆலயத்தை தர்மபரிபாலனம் செய்து வந்தார்.

அத்தோடு முத்துக்குமாரசுவாமி ஆலய சுவாமி அலங்கார ஆபரணங்கள், பெறுமதியான சொத்துக்கள், கோயில் உடைமைகள் என்பன விழாக்காலம் முடிந்ததும் பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு கொண்டு வந்து பாதுகாப்பாக வைக்கும் ஏற்பாட்டினை இவர்கள் இருவரும் செய்துவந்தார்கள். முத்துக்குமார சுவாமி ஆலயத்தில் இதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படும் வரை இவ்வொழுங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தது. இராஜவரோதயம் அவர்களின் காலத்தின் பின் அவரது மைத்துனர் திரு.சிவானந்தம் மாஸ்டர் அவர்கள் தர்மகர்த்தாவாக இருந்து பல திருப்பணிகள் கும்பாபிஷேகங்கள் என்பனவற்றை சிறந்த முறையில் நடாத்தி ஆலயத்தில் ஆன்மிக பணி செய்தார் என்றால் மிகையாகாது.

தற்போது முகாமையாளராக விளங்குகின்ற திரு து.தவசிலிங்கம் அவர்களும் குறுகிய கால இடைவெளியில் ஆலய வளர்ச்சிக்கு தேவையான சகல வளங்களையும் அமைத்து அசையா சொத்துக்கள் எல்லாவற்றையும் சீர்படுத்தி ஆலய நிர்வாக ஒழுங்கமைப்புக்குள் நெறிப்படுத்தி காலங்களுக்கேற்ப பல புனருத்தாரண திருப்பணிகள் பலவற்றை சிறப்பான முறையில் நிறைவு செய்திருக்கின்றார்.

ஆலய விசேட உற்சவங்களுக்கான சுவாமி அலங்கார ஆபரணங்கள், மற்றும் அலங்கார பூஜைப் பொருட்கள் என்பன அவரது விடாமுயற்சியால் அமையப் பெற்றுள்ளது.

அத்தோடு ஆலயத்தில் நித்திய, நைமித்திய கிரியைகளையும் விஷேட உற்ஷவங்களையும் சிறப்பாக நடாத்துவதற்கு வேத, ஆகமங்கள் கற்றுணர்ந்த சிவாச்சாரியார்களை தேர்ந்து ஆலயத்தில் கிரியா நிகழ்வுகளை சிறப்பாக நடாத்தி அடியார் மனங்களில் இறையருளை மேலோங்கும் வண்ணம், இவரது பணிகள் பெரும் ஆன்மிக வளர்ச்சி அடைந்துள்ளன.

ஆலய பரிபாலனத்தோடு அறநெறி சார்ந்த பரதநாட்டியம், பண்ணிசை, சமயம், தமிழ், இசை போன்ற வகுப்புக்களையும் நடாத்தி சைவத்தையும், தமிழையும், கலை கலாசார விழுமியங்களையும் பேணி வளர்க்கின்ற பேராலயமாக விளங்குகின்றது.

எம்பெருமான் மஹா கும்பாபிஷேகம் சிறப்பிற்றோங்க தேசமெல்லாம் ஆன்மிகஒளி பரப்பி பெரும் சாந்தி பெருவிழாவின் குஞ்சரனின் சோதரனாம் குறவள்ளி நாதனின் பேரருட் கடாச்ஷம் கிடைக்க ஸ்ரீசக்கர நாயகியாம் அன்னை பத்திரகாளி அம்பாளின் பாதம் பணிந்தேத்துவோம்.

வாழி

| | | | |
|---|---|---|---|
| பெருஞ்சாந்தி | குடமுழுக்கு | பெரிதே | வாழீ |
| பேறான | ரேருளும் | பொலிந்தே | வாழீ! |
| கலையோங்க | திருப்பணியின் | சிறப்பே | வாழீ! |
| வானுயர | கோபுரங்கள் | அழகே | வாழீ! |
| வேதமொடு | ஆகமங்கள் | வியங்தே | வாழீ! வாழீ! |
| வேதியர்கள் | வேள்விகள் | அருள்நிறைவே | வாழீ! வாழீ! |
| ஞானமிகு | தர்மகர்த்தா | நற்பணிகள் | வாழீ! வாழீ! |
| ஞானிலத்தின் | நல்லடியார் | தொண்டர்களும் | வாழீ! வாழீ! |
| வாழீ வாழீ! | வாழீ வாழீ! | வாழீ வாழீ! | வாழீ வாழீ! |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

| | | | |
|---|---|---|---|
| திருமலையில் | கோயில் கொண்ட | குமரருக்கும் | மங்களம் |
| திருப்புகழின் | தெய்வமான | வேலருக்கும் | மங்களம் |
| ஏறுமயில் | ஏறிவிளையாடும் | தேவசேனாதிபதிக்கும் | மங்களம் |
| ஈசனுடன் | ஞானமொழி | பேசிடவே | மங்களம் |
| நாத விந்து | கலா | தீபருக்கும் | மங்களம் |
| நல்லடியார் | வினைகளையும் | நாதருக்கும் | மங்களம் |
| சீர் மேவும் | வள்ளி குஞ்சரி | மணவாளருக்கும் | மங்களம் |
| சீரோங்கும் | முத்துக்குமாரர் | குடமுழுக்கும் | மங்களம் |

மங்களம்! மங்களம்!! மங்களம்!!!
ஜெய மங்களம்!
நித்திய சுப
மங்களம்!
சுபம்

"வேதாகம மாமணி"
சிவஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள்
(ஆதீன கர்த்தா, பிரதம குரு, திருக்கோணமலை
பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்)

ஒரு குளத்தை வெட்டுகின்றவன் பத்து கிணறுகள் வெட்டும் புண்ணியத்தைப் பெறுகின்றான். பத்து ஏரிகளை ஏற்படுத்துகின்றவன் ஒரு குழந்தையைப் பெறும் பெருமையை அடைகின்றான். ஆனால் அதிக செலவில்லாத ஒரு செடியை நடுவதன் மூலம் ஒருவனுக்கு பத்து பிள்ளைகளை பெற்ற பெருமை கிடைக்கும்.

- முதுமொழி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகமம் கூறும் ஆஹுதி வழிபாடு

ஒண்சுட ரானை உலப்பிலி நாதனை
ஒண்சுட ராகி என் உள்ளத்து இருக்கின்ற
கண்சுட ரோன் உல கேழும் கடந்த அத்
தண்சுடர் ஓமத் தலைவனும் ஆமே.

(திருமந்திரம் - 221)

திருக்கோவில்களில் நிகழும் கிரியைகளையும் அவற்றின் விதிமுறைக்ளையும் நன்குணர்ந்து அனுஷ்டித்தால் பன் மடங்கு பலன் பெறலாம் என்பது அனைவரும் அறிந்ததே ஆகும். கோவில்களில் நிகழும் கிரியைகளில் ஹோம வழிபாடுகள் மிகவும் முக்கிய இடத்தைப் பெறுகிறறது. அக்னியானது பஞ்ச பூதங்களுள் மூன்றாவதாகிய தேயு எனும் பெயருடையதாய் ஒளிப் பொருளாய் மற்ற வஸ்துக்களை சுத்தமாக்குவதோடு தானும் "ஸுசி:" என்ற நாமமுற்று மிகப் பரிசுத்தமுடையதாய் விளங்குகிறது. அத்தோடு தன்னிடத்தில் ஆஹுதி செய்யப்படும் பொருட்களை தாங்கிச் சென்று உரிய தேவர்களிடம் சமர்ப்பிப்பதால் "ஹுதவஹ:" எனும் பெயர் உடையதாய் விளங்குகிறது.

மஹா யாகங்கள் நடைபெறும் வேளையில் ஏகாக்னி, பஞ்சாக்னி, நவாக்னி என ஆகம சாஸ்திரங்களுக்கு அமைய அக்னி வழிபாடு விரிந்து செல்வதைக் காண முடிகிறது. ஏகாக்னிக்கு மேல் அக்னி வழிபாடு விரிவடையுமாயின் மஹா யாகத்தில் ஒவ்வொரு திக்குகளிலும் உள்ள அக்னி குண்டங்களுக்கு உரிய மூர்த்திகள், அதன் அங்கங்கள், மந்த்ரங்கள் மற்றும் சமித்து, தான்யம் என தனித்தனியே சிவாகமங்கள் கூறி நிற்கிறன.

மேலும் சமித்துவகை, அன்னவகை, பழவர்க்கம், நெற்பொரி, நவதானியம், முதலியவற்றை ஹோமம் செய்து நெற் ஆஹுதியாக மந்த்ர தர்ப்பணம் (மந்த்ரங்களை திருப்தி செய்தல்) மந்த்ர தீபனம் (மந்த்ரங்களை ஒளி பெறச் செய்தல்) என தர்ப்பண தீபன ஆஹுதிகளும் நிகழும். அத்துடன் தேசாபாதனம் (தேச வேறுபாடு) காரணமாக வரும் குறைகளை நீக்கி நற்தேசமாக்கும் பொருட்டும் காலாபாதனம் (கால வேறுபாடு) அதனால் வரும் குறைகளை நீக்கி நல்ல காலமாக ஆக்கும் பொருட்டாம். அதாவது விதிக்கப்படாத இடத்தில் ஹோமம் நடாத்துவதும், விதிக்கப்படாத காலத்தில் ஹோமம் செய்தல் ஆகிய குறைகளைத் தீர்த்தலும், துர்நிமித்த சாந்தி சுவர்க்கம், இடையிலுள்ள அந்தரிக்ஷம், பூமி ஆகிய இவற்றிலுண்டாகும் துர்நிமித்தத்துக்கு உரிய சாந்தியின் பொருட்டும், "ஸுநிமித்தா பாதனம்" முற்கூறிய சுவர்க்கம், அந்தரிக்ஷம், பூமி இவற்றில் நலனுக்காக செய்யப்படும் ஆஹுதிகளை நிகழ்த்தி நிறைவாக மஹா பூர்ணாகுதி இடப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆகம வழியில் ஹோமத் திரவியங்களின் வகை

காமிகம், பூர்வகாரணம், உத்தரகாரணம், அஜிதம், அம்சும தந்திரம், வாதுளம், வீரம், சுப்ரபேதம், மகுடம் போன்ற ஆகமங்கள் ஹோம வழிபாடுகள் பற்றி மிகவும் விரிவாக சுட்டி நிற்கிறன.

26 வகையான அவிர்ப்பொருட்களைக் கொண்டது ஷட்விம்சதீ திரவிய ஹோமம் என்றும்; 86 வகையான ஹோமப் பொருட்களைக் கொண்ட ஹோம வழிபாடு ஷட்சுஸீதி திரவிய ஹோமம் என்றும்; 96 வகையான திரவியங்களைக் கொண்ட வழிபாடு ஷண்ணவதி திரவிய ஹோமம் எனவும், பிரதிஷ்டா கிரியா, காரிகையின் பிரகாரம் 108 திரவியங்கள் கொண்ட ஹோமம் எனவும்; மேலும் 214 திரவியங்கள் கொண்டஹோமம் எனவும் பல ஆஹுதி வழிபாடுகளை ஆகமங்கள் விளக்கி நிற்கிறன.

ஹோமப் பொருட்கள் அக்னி பகவானிடத்தே ஆஹுதியாக சேர்க்கப்படும் இடத்து, அவை அக்னி பகவானின், நாக்குகளின் ஊடாக இறைவனை சென்றடைகின்றன என சாஸ்திரங்கள் கூறும். ஹோம குண்டத்தில் எழுந்தருளும் அக்னி பகவானுக்கு ஏழு நாக்குகள் இருப்பதாகவும், அவை ஒவ்வொன்றும் தனித்தனியே யாகத்தின் பலனை கொடுக்கக் கூடியவையாகவும் அமைந்திருக்கிறது. அவை முறையே ஹிரண்யாகனகா, ரக்தா, கிருஷ்ணா, சுப்ரபா, பஹுரூபா என நாமங்களைக் கொண்டதாகவும் விளங்குகிறன.

### ஸப்த ஜிஃவாக்களில் ஹோமம் செய்வதன் பலன்கள்

ஹிரண்யா, கனகா } உ சாந்தி உண்டாம்

ரக்தா - வசியம் உண்டு

கிருஷ்ணா - மாரணமாம்

சுப்ரபா - மோட்சம்

பஹுரூபா, அதிரக்தா } உ ஸர்வாபீஷ்ட சித்தி

ஸப்த ஜிஃவாக்களில் செய்யும் திரவிய ஹோமத்தை உத்தர காரணம், வாதுளம் ஆகிய ஆகமங்கள் தெளிவாகக் கூறியுள்ளன. ஜிஃவாக்களில் செய்யப்படாத திரவிய ஹோமங்கள் பலனளிக்காது. அது மாத்திரமின்றி உத்தர காரணத்தில் ஒவ்வொரு ஜிஃவாக்களில் ஒவ்வொரு வகையான திரவியங்கள் ஹோமம் செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது. இது தவிர அக்னிபகவானின் ஏனைய அங்கங்களையும், உத்தர காரணாகமம் விளக்கி இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யத்ர காஷ்டந்து தத் ஸுரோத்ரம் யத்ர பஸ்மந்து தத்சிர:
யத்ரா அல்ப ஜ்வலிதே நேத்ரே யத்ர தூமந்து நாஸிகா

அதாவது எங்கு எரியாமல் விறகாக இருக்கிறதோ அது அக்னியின் காது. எங்கு பஸ்மமாக இருக்கிறதோ அது சிரசு. எங்கு சிறிதாக எரிகின்றதோ அது கண். எங்கு புகையாக அது மூக்கு ஆகவும் கூறப்பட்டுள்ளது. எனவே இவ்வாறான இடங்களை தவிர்த்தல் வேண்டும் என்றும், அக்னி ஜுவாலையாக எரிகின்ற பொழுது நாக்குகள் புறப்படும் என்றும், நாக்குகளில் தான் அவிப் பொருட்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஹோமம் செய்யும் போது சிவாச்சாரியார்கள் அக்னியை எவ்வாறு சிந்திக்க வேண்டுமென்று காரணாகமம் கூறுகின்றது. சமித்து ஓமம் செய்யும் பொழுது அக்னி இருந்த பாவனை ஆகவும், சரு (அன்னம்) ஹோமம் செய்யும் போது நின்ற பாவனையாகவும், நெய் ஹோமம் செய்யும் போது சயன பாவனையாகவும் சிந்திக்க வேண்டுமென்று கூறுவதைக் காணலாம்.

**ஸமித் ஹோம லக்ஷணம்**

காமிகம் :-

ஸமித்தின் அடிப்பாகத்தில் பிரம்மாவும், நுனிப்பாகத்தில் ராக்ஷதனும் வசிப்பதானால் அடியையும், நுனியையும் விட்டு விட வேண்டும். ஹோம ஸமித்தானது 12 அங்குல அளவில் இருத்தல் வேண்டும்.

மற்றுமோர் வகை :-

பட்டை நீக்கிய ஸமித்து அழிவை உண்டாக்கும் ஒடிந்த ஸமித்து குலநாசம், ஈரச்சமித்து பந்துக்களின் அழிவு, உக்கிப்போன ஸமித்து மனைவியின் மரணம், துளையுள்ளவை கலகங்களுக்குக் காரணம். அளவுக்கதிகமான சமித்து பெரு மழைக்குக் காரணமாகும். கறுப்பு எள்ளு தான் ஹோமத்துக்கு உரியது.

**ஹோமப் பொருட்களின் அதிதேவதை**

| | | |
|---|---|---|
| ஸமித்து | - | சிவன் |
| நெய் | - | பரமேஸ்வரி |
| அன்னம் | - | மஹாவிஷ்ணு |
| நெற்பொரி | - | ரிஷிகள் |
| கடுகு | - | அக்னி |
| சத்துமா | - | சூரியன் |
| எள் | - | பிதிர்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹோம முத்திரை

ஹோமப் பொருட்களை அக்னியில் ஆஹுதி இடும் போது அவற்றுக்குரிய முத்திரைகளும், ஆகமங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவையே ஸுகரி, மிருகி முத்திரை, ஹம்ஸ முத்திரை, முஷ்டி முத்திரை போன்ற முத்திரைகளினால் ஹோமப் பொருட்களை அக்னியில் இடவேண்டும் என்பதாம்.

### ஹோமத்திரவியங்களும், பலன்களும்

| | | | |
|---|---|---|---|
| பொரசு | - ப்ரஸாவிருத்தி | எள்ளன்னம் | - பாபநாசம் |
| கருங்காலி | - விஜயம் | மிளகன்னம் | - சத்ருநாசம் |
| அரசு | - தனாதிக்யம் | தயிரன்னம் | - ஆரோக்கியம் |
| இத்தி(இச்சில்) | - சௌக்யம் | பருப்பன்னம் | - வித்யாலாபம் |
| அத்தி | - போகம் | தேனன்னனம் | - சந்தோஷம் |
| சந்தனம் | - சாந்தி | கடுகு அன்னம் | - பயநாசம் |
| ஆல் | - ஆரோக்கியம் | தேங்காய் சாதம் | - புஷ்டி |
| வன்னி | - வசியம் | எலுமிச்சை சாதம் | - வசியம் |
| வில்வம் | - இஷ்டசித்தி | பாயசான்னம் | - திருப்தி |
| வெள்ளெருக்கு | - ரோகநாசம் | உளுந்தன்னம் | - க்ரோதசமனம் |
| மா | - ஐஸ்வர்யம் | உளுந்து | - பசுவிருத்தி |
| பாதிரி | - சத்ருக்ஷயம் | நெற்பொரி | - சாயுஜ்யம் |
| மூங்கில் | - சாந்தி | சத்துமாவு | - |
| பலா | - கீர்த்தி | திலகண்டம் | - ஆயுள் |
| அறுகம்புல் | - தரித்ரநாசம் | (எள் உருண்டை) | |
| தர்ப்பை | - ஞானசித்தி | மோதகம் | - ஆனந்தம் |
| நெய் | - ரோகநாசம் | அகில் | - வலிமை |
| ஹவிஸ் (சுத்தான்னம்) | - சுபவிருத்தி | தேவதாரு | - சுகம் |
| பாலன்னம் | - ஆயுள் | வெண்மொச்சை | - சௌந்தர்யம் |
| விளாம்பழம் | - புத்ரலாபம் | கிழங்குகள் | - பூமிலாபம் |
| மாதுளம்பழம் | - புத்ரலாபம் | வெட்டிவேர் | - லாபம் |
| பேரீச்சம்பழம் | - வலிமை | விலாமிச்சைவேர் | - மோகம் |
| நாரத்தம்பழம் | - சோகநாசம் | மருக்கொழுந்து | - விருத்தி |
| எலுமிச்சம்பழம் | - வசியம் | குங்குலியம் | - சாதுர்யம் |
| திராட்சைப்பழம் | - இஷ்டசித்தி | சிற்றேனம் | - ப்ரிதி |
| பயறு | - ஆயுள் | கிராம்பு | - பயநாசம் |
| கொண்டைக்கடலை | - சியேசு | ஜாதிக்காய் | - |
| விரோதசமனம் | | | |
| கோதுமை | - ஸாதிகாரம் | ஜாதி பத்ரி | - அனுகூலம் |
| குளச்சல் நெல் | - வீர்யம் | பன்னீர் | - பிரியம் |
| யவைநெல் | - இராஜவசியம் | குங்குமப்பூ | - ப்ரீதி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| மூங்கில் அரிசி | - தேகசாந்தி | பச்சைக்கற்பூரம் | - ப்ரீதி |
| கொள்ளு | - தேக பலம் | சந்தனக்கட்டை | - ப்ரீதி |
| கருமொச்சை | - வம்ச விருத்தி | கஸ்தூரி | - ப்ரீதி |
| துவரை | - வீரியம் | புனுகு | - ப்ரீதி |
| தினை | - இஷ்டசித்தி | கோரோஜனை | - ப்ரீதி |
| அவரை | - பந்துலாபம் | செஞ்சந்தனம் | - ப்ரீதி |
| நெல் | - சுபீட்சம் | தாமரை முதலான புஷ்பங்கள் | - செல்வம் |
| சாமை | - மழை | பத்திரங்கள் | - ஆரோக்கியம் |
| வரகு | - மலநாசம் | (தளிர்கள்) | |
| கரும்பு | - பிராணிசுகம் | வில்வம் | - பாபநாசம் |
| வெள்ளரிக்காய் | - விருத்தி | நீலோத்பலம் | - அருள் |
| தேன் | - சந்தோஷம் | | |
| சர்க்கரை | - சத்ருநாசம் | | |
| அவல் | - இஷ்டசித்தி | | |
| லட்டுகம் | - சபீட்சம் | | |
| ரிபுநாகம் | - நடன் நீக்கம் | | |
| பால் | - சௌபாக்யம் | | |
| தயிர் | - சுகம் | | |
| வெல்லம் | - செல்வப்பேறு | | |
| வாழைப்பழம் | - துக்கநாசம் | | |
| மாம்பழம் | - ரோகநிவர்த்தி | | |
| பலாப்பழம் | - சுபம் | | |
| z மாஷாபூகம் | - யட்சு | | |
| அப்பம் | - சந்தோஷம் | | |
| நீர்க்கொழுக்கட்டை | - இஷ்டசித்தி | | |
| திலாபூபம் (எள் கொழுக்கட்டை) | - பாபநாசம் | | |

சக்தி வாய்ந்த இவ்வேள்வியின் பலன்களை திருஞான சம்பந்த சுவாமிகள் "கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே" எனக் கூறி அருளியபடியும், சாஸ்திரங்கள் விதித்தவாறும், அக்னியை, உண்டாக்கி ஹோமாதிகளைச் செய்வதனால் வறுமை, நோய், பிணி, கலி தோஷங்கள் அணுகாது. ஆகவே விப்ரேந்திரர்களால் நிகழ்த்தப்படும் ஹோம வழிபாடுகள் தெய்வீகத்தைப் பெருக்குவதோடு, சூழவுள்ள பக்த குழாம்கள், லக்ஷ்மிகரத்தையும், வெற்றியையும், புண்ணியத்தையும் நீண்ட வாழ்நாளையும், நோயின்மை, ஆரோக்கியம், அபிவிருத்தி ஆகியன பெற்று வையத்து வாழ்வாங்கு வாழ்ந்திருப்பார்கள்.

சுபம்

கட்டுரையாக்கம்
"ஸர்வ ஸாதகப்ரயோக ரத்னா"
சிவஸ்ரீ N.பிரசாந்தக்குருக்கள்
உடுக்கைவேளை மஹா கணபதி திருக்கோவில்
வட்டுக்கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத நல்லிணக்கமும் மதச் சார்பின்மையும்

ஒரு கடவுளை மட்டுமே ஏற்கும் மதங்களுள்ளன. பல கடவுளரை ஏற்கும் மதங்களும் உள்ளன. ஒரு கடவுள் இருக்கலாமெனின் ஏன் பல கடவுளர் இருக்கவியலாது என்பது தர்க்கவழிச் சரியான வினாவாகும். எல்லாம் வல்ல ஒரு கடவுளை மறுக்கும் மதங்களுள்ளன. எக்கடவுளையும் மறுக்கும் மதங்களும் உள்ளன. எனின், மதங்கட்குப் பொதுவான கடவுட் கொள்கை உண்டா?

முதலும் முடிவுமற்ற ஒரு ஆன்மாவை ஏற்கும் மதங்கள் உள்ளன. ஒரு பிறவியுடன் ஓயும் ஆன்மாவை ஏற்கும் மதங்கள் உள்ளன. ஆன்மாவை மறுக்கும் மதங்களுமுள்ளன. எனின், மதங்கட்குப் பொதுவான ஆன்மக் கொள்கை உண்டா?

பொதுவான மத நூலொன்றையோ நூல்களையோ கொண்ட மதங்கள் உள்ளன. அவ்வாறற்ற மதங்களுமுள்ளன. ஒவ்வொரு மதத்திற்குள்ளும் சடங்கு சம்பிரதாயங்கள் வேறுபடுகின்றன.

அனைத்து மதங்களிடையும் உடன்பாடுகள் இருப்பின், அவை பொதுவாக எச்சமூகத்திலும் இருக்கக் கூடிய மதஞ்சாராத அற விழுமியங்கள் பற்றியனவன்றி மதங்களின் அடிப்படை நம்பிக்கைகளினின்று எழுவன அல்ல.

எனவே, எல்லா மதங்களும் ஒன்றையே கூறுகின்றன என்பது மத நல்லிணக்கங் கருதி மதத் தலைவர்கள் பொது மேடைகிற் கூறும் மனமறிந்த பொய்களில் ஒன்று. பொய்களின் மூலம் நிலையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த இயலுமோ என்பது வலுவான ஒரு ஐயம்.

மதங்களிடையே நல்லிணக்கம் வேண்டின் அது உண்மை சார்ந்திருப்பது சிறப்பு. எவரும் தான் உடன்படாவற்றைச் சகித்தலும், அவற்றைப் பிறர் கடைப்பிடித்தலை மதித்தலும் ஒரு நல்ல சமூகத்தின் தேவை.

உலக வரலாற்றிற் போர்களை நியாயப்படுத்த மதம் மிகப் பயன்பட்டுள்ளது. இந்தியத் துணைக்கண்ட வரலாற்றில் இந்து மதங்கட்கும் பிற மதங்கட்குமிடையே பூசல்கள் விளைந்துள்ளன. இந்து மதங்கள் எனப்படுவனவற்றிடையேயும் பூசல்கள் விளைந்துள்ளன. ஆழ நோக்கின் பூசல்களின் தோற்றுவாய் மத நம்பிக்கைகளின் வேறுபாட்டை விட அடிப்படையாக அதிகாரத்துக்கான போட்டியே என விளங்கும்.

எந்த மதத்தின் சிறப்பும் அதன் தொன்மையிலோ தூய்மையிலோ இல்லை. எந்த மதத்தினதும் பயன் அம்மதத்தைப் பின்பற்றுவோரைச் சமூக நலன் பேணும் நல்ல குடிமக்களாகவும் பிறர் துன்பந் தீர்க்கும் அக்கறையுடைய நல்ல மனிதர்களாகவும் பேணுவதிலேயே உள்ளது. அதிற் தவறும் எம் மதமும் சமூக விரோதமானது. மதத்தின் பெயராற் பிறருக்குக் கேடிழைத்தல் மதச் சுதந்திரமல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது பிற சமூகக் குற்றங்கள் போற் தண்டனைக்குரியது. இன்று வழக்கிலுள்ள மத அடிப்படைவாதப் போக்குகளை மறுக்குந் தேவை சமூகத்துக்குள்ளது. இவ்வாறான நிலைமைகளைக் கருதியே மதச் சார்பின்மையாளர்கள், எம் மதத்தினராயினும், அரசையும் மதத்தையும் விலக்குவதை வலியுறுத்துகின்றனர்.

மதத்துக்குத் தனிமனித உளவியல் சார்ந்த ஒரு தேவை உண்டு அதற்குச் சமூகங் சார்ந்த ஒரு தேவையும் உண்டு. அத்தேவைகளை ஏற்பது மனிதரின் அடிப்படை உரிமைகளை ஏற்பதாகும்.

மதச் சார்பின்மை மனிதரின் அடிப்படை உரிமைகளை அது ஏதோ ஒரு மதவாத அடக்குமுறைக்குத் துணையாகும்.

மதச் சுதந்திரம் என்பது ஒருவர் தனது மதத்தைத் தெரிவதற்கான சுதந்திரமுமாகும். அது சுயாதீனமான தெரிவாக நிகழலாமேயன்றி மிரட்டல், வற்புறுத்தல், இலஞ்சம், ஏமாற்றுப் போன்ற முறைகேடான வழிகளில் நிகழும் தவறு. சட்டமிற்றி இம் முறைகேடுகளைத் தடுக்கவியலாது என்பதால், அவற்றைத் தடுக்க வன்முறையிலும் மிரட்டலிலும் சட்டவிரோதச் செயல்களிலும் எவரும் ஈடுபடுதலை ஏற்கவியலாது, எனின் இப் பிரச்சனையைக் கையாள்வது எவ்வாறு?

மதம், ஆன்மிகம், சோதிடங்கள், மாந்திரிகம், சித்துவேலைகள் போன்ற பெயர்களில் நிகழும் அனைத்தும் பொதுப் பார்வைக்கு உட்படாவிடின், மக்களை ஏய்க்குஞ் செயல்களை மறித்தல் கடினம். எனவே தனியே மதமாற்றத்தைக் குறிவைப்பதைத் தவிர்த்து, எதன் பெயரிலும் மக்களை மனமறிய ஏய்குஞ் செயல்களை விசாரிக்கும் பொறுப்புச் சட்டத்துக்கும் அதற்கான உரிமை ஒவ்வொரு பிரசைக்கும் இருத்தல் வேண்டும். பிற ஏமாற்றுக்கள் போல முற்கூறிய ஏமாற்றுகளும் தண்டனைக்குரியனவாகின், மதத்தினதும் ஆன்மிகத்தினதும் பிற மனித நம்பிக்கைகளினதும் பிற மனித நம்பிக்கைகளினதும் பெயர்களில் மக்கள் ஏமாறவும் பிளவுறவும் வாய்ப்புக் குறையும்.

திருகோணமலைக்கு நீண்டதொரு மதச் சகிப்பு மரபுண்டு. அது சிலகாலம் முன்பு சோதனைக்கு உட்பட்டபோதும் இப்போது மதச் சகிப்பு மரபு மீள வலுப்பெறுகிறது. திருகோணமலையின் புகழ்பெற்ற கோவில்களில் ஒன்றான திரு.முத்துக்குமாரசுவாமி கோவிற் திருப்பெருங் குடமுழுக்கு மீள எழும் ஆரோக்கியமான சூழலில் இடம்பெறவுள்ளமை மகிழ்ச்சிக்குரியது. இவ்வாலயத்தை மரபுவழுவாது பொறுப்புடன் நிருவகித்து வரும் அறங்காவலருக்கும், முகாமையாளருக்கும் கோவிற் பூசகர்கட்கும் பிற பணியாளர்கட்கும் என் மரியாதைகளைத் தெரிவிப்பதுடன் திருப்பெருங் குடமுழுக்குச் சீருற நடக்க என் வாழ்த்துக்களையுந் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சி.சிவசேகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய மரபில் இறைவழிபாட்டின் மகத்துவம்

இறைவழிபாடு என்பது மனித வாழ்க்கைக்கு இன்றியமையாததொன்றாகும். அதுவே ஆன்மீக ஈடேற்றத்திற்கு உதவும் வழிமுறையாகும். மனித உயிர் மேம்பட இறைவழிபாடே துணையாகும். வழிபாட்டினை நம்வாழ்வில் கடைப்பிடிக்காதொழிந்தால் வாழ்க்கையில் எமக்கு இடையறாத பல இன்னல்களும் தொல்லைகளும் கவலைகளும் ஏற்படும் என்பது அனுபவபூர்வமான உண்மையாகும். இக்கருத்தை சைவச் சிறார்களிடையே வற்புறுத்தும் வகையில் நாவலர் பெருமான் அவர்களுக்கென உருவாக்கிய பாலபாட நூலில் குறிப்பிடுகையில்

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முக்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்ற வாக்கியத்தின் மூலம் மனித வாழ்வில் வழிபாடு இடம் பெறவேண்டிய அவசியத்தைத் தெளிவாக வற்புறுத்தியுள்ளார். இறைவழிபாடு பற்றிய அவரது இச்சிந்தனைக்கு, 'இந்த வசனம்' வேதசாரம் சாத்திர சத்து புராண நிதியம் பெறுபேறு" என இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை பாராட்டுரை தந்துள்ளமை குறிப்பிடற்பாலது. இந்து சமயத்தின் - சைவ சித்தாந்தத்தின் உயிர்நிலை இந்த வாக்கியத்தில் பொதிந்துள்ள கருத்தாகும் என அறிஞர்கள் பாராட்டியுள்ளனர். சமயநெறி சார்ந்த ஒருவன் தான் வழிபடும் கடவுள் இன்னாரென்றும் அந்தக் கடவுளை வழிபடும் முறை இன்னதென்பதும் அவ்வழிபாட்டினால் கிட்டும் பயன்கள் இன்னதென்பதும் என அறியக் கடமைப்பட்டுள்ளான் என்றும் அவ்விதம் அறியும் போதே அவனுக்குச் சமய ஒழுக்கம் சித்திக்கும் என்றும் நாவலர் சைவ உலகுக்கு வழங்கிய அறிவுரையாகும். "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது" என்ற வாக்கியத்தின் உட்பொருள் எமது வாழ்க்கைக்குத் தேவையான சமய விளக்கங்களாகும். "நாம் சிற்றறிவு சிறதொழில் உடையேம். ஆதலால் முற்றறிவு முற்றுத் தொழில் உடைய கடவுளை வணங்கி அவருடைய திருவருள் வசமாய் நிற்பின் அன்றி பாவபுண்ணியங்களை உள்ளபடி அறிதலும் பாவங்களை ஒழித்துப் புண்ணியங்களைச் செய்தலும், நம்மால் இயலாவாம்" என்ற தெளிவான விளக்கம் இறைவழிபாட்டின் மகத்துவத்தை எமக்கு உணர்த்துகின்றது.

இறைவன் எல்லா உயிர்களிலும் எல்லாப் பொருள்களிலும் நீக்கமற நிறைந்து நிற்கின்றான். "இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என சிவபுராணத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் இறைவனைப் போற்றியுள்ளார். இனி எல்லாம் அவனிடத்தில் இருக்க அவன் அவைகட்கு உறைவிடமாக இருக்கின்றான். இது இறைவனுடைய விசுவரூபம் என் அருளாளர்கள் போற்றுவர்.

இறைவன் எங்கும் நிறைந்தவன் எனில் ஏன் அவன் நமது கண்ணுக்குத் தெரியவில்லை என்பாரும் உள்ளனர். விறகிலே நெருப்பு உள்ளது பாலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய் உள்ளது. ஆனால் அவை கண்ணுக்குப் புலப்படுவதில்லை. கண்ணுக்குத் தெரியாத காரணத்தால் இல்லையென்று கூறுவது எவ்வளவிற்குப் பொருந்தாதோ அது போன்றே இறைவனும் கண்ணுக்குப் புலப்படாதுவிடினும் எங்கும் நீக்கமறநிறைந்துள்ளான் என்பது எமது நம்பிக்கையாகும். விறகை எரித்தால் தீ வெளிப்படுவது போன்றும் தயிரைக் கடைந்தால் நெய் வெளிப்படுவது போன்றும் வழிபாடு, தியானம், ஜபம் போன்ற சாதனைகளால் இறைவன் எம்உள்ளத்தில் எழுந்தருள்வான்.

"கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்"

என்ற சிவபுராண அடிகள் இறைவனது மேன்மையை எமக்குத் தெளிவுபடுத்துகின்றன. இறைவனும் உலகமும் ஒன்றி நிற்கும் கலப்பினால் ஒன்றாகியும் பொருட் தன்மையால் வேறாகியும் உலகத்துக்கு உதவும் பொருட்டு உடனாகியும் இறைவன் ஒன்றாகி, வேறாகி உடனாகி நிற்கின்றான்.

உடலும் உயிரும் போல் ஒன்றாகியும்
கண்ணொளியும் கதிரொளியும் போல் வேறாகியும்
கண்ணொளியும் உயிரறிவும் போல் உடனாகியும்
ஒன்று பட்டு அருள்புரிவான்.

இக்கருத்தை மெய்கண்டார் "அவையே தானேயாய;" எனச் சுருங்கக் கூறி உணர்த்தியுள்ளார். மேலும் திருஞானசம்பந்தர் இறைவனது அருள் நிலையை

ஈறாய் முதல் ஒன்றாயிரு பெண் ஆண் குணம் மூன்றாய்
மாறாமறை நான்காய் வருபூதம் அவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையொடு எட்டுத்திசை தானாய்
வேறாய் உடன் ஆனாய் இடம் வீழும் மிழலையே

எனப் போற்றியுள்ளார். எனவே நாம் இறைவனது அருட் பெருங் கருணையை ஒவ்வொரு கணப்பொழுதும் நினைத்து நினைத்து நாம் இறைவழிபாட்டில் ஈடுபட வேண்டும். நாம் இதிலிருந்து தவறினால் நன்றி மறந்த பாவத்திற்கு ஆளாவோம் என்பது திண்ணம்.

தீவிர சிவபக்தியின் மூலம் கண்ணப்பர் இறையருளுக்குப் பாத்திரரானார். வழிபாட்டில் அவர் எமக்குச் சிறந்த வழிகாட்டி. மேலும் மனிதரல்லாத பிராணிகள் கூட வழிபாட்டில் ஈடுபட்டுள்ள வரலாறு உள்ளது. திருச்சிராப்பள்ளிக்கு அருகே ஆனை பூசித்த தலம் திருவானைக்கா எனவும் எறும்பு பூசித்த தலம் திரு எறும்பூர் எனவும் சிறப்புற்று சிவவழிபாட்டின் மகத்துவத்துக்குச் சான்றாக உள்ளன. மனிதப் பீறவி மகத்தானது. இப்பிறவியில் நாம் கடவுளை வணங்கி நலம்பெறத் தவறினால் வேறு பிறவி எமக்கு வாய்க்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே வழிபாட்டில் எம்மை தகுதியுள்ளவர்களாக்க தீட்சை பெறுதல் வேண்டுமென்பது சாஸ்திர விதிமுறையாகும். ஒவ்வொருவரும் சிவபூசை முதலான வழிபாட்டில் ஈடுபட வேண்டும். அவரவர் தம் மனதுக்கு வந்த குல தெய்வ வழிபாட்டில் ஈடுபடலாம். இதற்கென ஏற்பட்டதே திருக்கோயிலும் ஆலய வழிபாடும் ஆகும். ஆலயத்தில் இறைவனை நோக்கி இடையறாத அன்பு செலுத்துதல் வேண்டும் நாயன்மார்கள் இறைவன் மீது செலுத்திய அன்பு அயரா அன்பாகும். சிவஞானபோதம் பதினொராம் சூத்திரத்தில் "அயரா அன்பின் அரன் கழல் செலுமே" எனப் போற்றியுள்ளமை குறிப்பிடப்பாலது. திருக்குறளில் வரும்

"தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

என்ற குறள் இறைவழிபாட்டின் சிறப்பையும் அதன் பயனையும் தெளிவுறக் கூறுகின்றது. இச்சிந்தனைக்கமைவாக திருநாவுக்கரசர்

துன்பம் இன்றித் துயர் இன்றி என்றும் நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்
என்பொன் ஈசன் இறைவன் என்றுள்குவார்க்கு
அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே

என்ற பாடல் வழி இறைவழிபாட்டின் மகத்துவத்தை எடுத்துக் கூறி எம்மை அவ்வழிபாட்டிற்கு ஆற்றுப்படுத்துகின்றார். இறைவழிபாடு நம்மை நாமே தூய்மை செய்து கொள்ள முனையும் ஒரு நன் முயற்சியாகும். நம்மிடமுள்ள பலவகை அழுக்குகளை நீக்க அவ்வழிபாடு உதவுகின்றது.

அழுக்காறு, அவா, வெகுளி, செற்றம் முதலிய மனஅழுக்குகளைத் தியானத்தினாலும் பொய், புறங்கூறல் இன்னாச்சொல், பயனில்சொல் ஆகிய வாய் அழுக்குகளைத் துதியினாலும், தீச்செயல் புரிதலாகிய மெய் அழுக்கை அர்ச்சனையிலும் நாம் போக்கி உய்வு பெற முடியும் என்பதே எமது சமயக் கோட்பாடாகும். சுருங்க கூறின் மனம் வாக்கு காயம் ஆகிய திரிகரண சுத்தியும்தியானம். துதி, அர்ச்சனை ஆகிய மூன்றினாலும் கிட்டுகின்றது. அத்தகைய நல்ல முயற்சியே இறை வழிபாடாகும். இவ்வழிபாடு புரியும் முறைமையினைத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் நன்கு விளக்குகின்றார்.

திருக்குறும் அழுக்காறு அவாவொடு வெகுளி
செற்றம் ஆகிய மன அழுக்கைத்
தியானம் என் புனலால் பொய்புறங் கூறல்
தீச்சொல் என்கிற வாய் அழுக்கை
அருட்கிளர் நினது துதி எனும் மெய் அழுக்கை
அருச்சனை எனும் புனலினாற் கழுவா
அசுத்தனேன் உய்யும் நாள் உளதோ

என்ற பாடல் எமக்கு நன்கு வழிகாட்டவல்லது.

வழிபாடு என்பது அகவழிபாடு புறவழிபாடு என இருவகையில் சிறப்புப் பெறும். இவற்றுள் அகவழிபாடே மேலானது. புறவழிபாடு படிப்படியாக அகவழிபாட்டிற்கு எம்மை ஆற்றப்படுத்தும் எம்மை ஆற்றுப்படுத்தும். நெஞ்சமே கோயில், நினைவே சுகந்தம் அன்பே மஞ்சனநீர் என்னும் நிலையில் அமைய இறைவனை வழிபடும் முறையே அகவழிபாடாகும். திருநாவுக்கரசர் இவ்வழிபாட்டின் மகிமையை

காயமே கோயில் ஆகக்
கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மையாக
மனமணி இலிங்கம் ஆக
நேயமே நெய்யும் பாலாக
நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனாக்குப்
போற்றவிக் காட்டி னோமே

என்ற பாடல் வழி விளக்குகின்றார். புறவழிபாடு புறத்தே நிகழும் வழிபாடு ஆகும். இறைவனுக்குப் பூச்சாத்துதல், சந்தனம் பூசுதல், நிவேதனம் படைத்தல், தூபம் இடுதல், விளக்கேற்றுதல், துதி பாடுதல் ஆகியவற்றைக் கொண்டது அவ்வழிபாடு.

இவ்வாறு அக, புற வழிபாடுகளை மக்கள் மேற்கொண்டு உய்வு பெறுவதற்காக அமைக்கப்பட்டனவே இறைவனுக்குரிய ஆலயங்கள் 'ஆலயந் தொழுவது சாலவும் நன்று' என மக்களை அருளாளர்கள் ஆற்றுப்படுத்தியதன் மூலம் திருக்கோயில்கள் இறைவழிபாட்டை மேற்கொள்ள உவந்த இடங்களாக ஊர்கள் தோறும் எழுச்சி பெற்றன. இறைவழிபாட்டினை மேற்கொள்வதற்காகவே மன்னரும் மக்களும் அருளாளர்களும் ஆலயங்களைக் கண்ணை இமை காப்பது போல் பாதுகாத்துப் பேணி வந்துள்ளனர். விநாயகர், சிவன், அம்பிகை, முருகன், திருமால் ஆகிய கடவுளர்க்கான திருக்கோயில்கள் தமிழகத்திலும் இலங்கையிலும் எழுச்சி பெற்றன. தமிழ்நாட்டில் பக்தி நெறிக்கு வளம் சேர்ந்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் திருக்கோயில்களைத் தளமாகக் கொண்டு இறைவழிபாட்டின் மகத்துவத்தையும் பக்திநெறியையும் மக்களிடையே பரவச் செய்தனர். கோயில் என்றால் தில்லையே என தில்லை நடராஜப்பெருமானின் திருக்கோயில் சைவர்களிடையே பக்திக்கும் வழிபாட்டிற்கும் உரியதாயிற்று. இறைவழிபாட்டின் போது திருமுறைகளை ஓதுவதற்கு முன்னர் 'திருச்சிற்றம்பலம்' என உச்சரிக்கும் புனிதத்துவம்ஏற்பட இப்புனிதத்தலமே காரணமாயிற்று. 'முத்தி தரும் தெய்வச் சபையைக் காண்பதற்குச் சேர வாரும் செகத்தீரே' எனத் தாயுமானவர் மக்களை இறைவழிபாட்டிற்கு ஆற்றுப்படுத்தியவர். நாவலர் வெளியிட்ட சிவாலய தரிசன விதி என்ற நூல் இறைவழிபாட்டினை மேற்கொள்ளக் கூடிய ஒழுங்கு முறைகளைக் கூறுவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாலயத்தில் இடம்பெறும் சிவவழிபாட்டோடு நன்கு இணைந்ததாகவே முருகவழிபாடும் இந்து சமயமரபில் மேன்மையடைந்து வந்துள்ளது. காலம் தோறும் இவ்வழிபாடு பெற்று வந்த சிறப்பினை வடமொழியிலும் தமிழிலும் எழுந்த இலக்கியங்கள் போற்றுகின்றன. முருகன் குறிஞ்சித் தெய்வமாகச் சிறப்புப் பெற்று வந்துள்ளமை குறிப்பிடற்பாலது. சங்க இலக்கியங்களிலும் முருகன் குறிஞ்சி நிலத் தெய்வமாகப் போற்றப்படுகின்றான். தொல்காப்பியம் மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி என்றும் அங்கு வாழ்பவர் முருகனை வழிபடுபவர் என்றும் குறிப்பிடுகினறது. "சேயோன் மேய மைவரை உலகமும்" என்ற தொடர் சிவந்த நிறமுடையவனாகிய முருகன் நீலநிற மலைப் பகுதிக்குத் தெய்வமெனப் போற்றப்படுகின்றான். கடம்ப மரம் கந்தனுக்கு உகந்தது என்ற காரணத்தால் கடம்பன், கடம்பின் நெடுவேள், கடம்பர் செல்வன் எனப் போற்றப்பட்டான். பண்டைக்காலத்திலேயே முருகனுக்கு கோயில் அமைத்து வழிபாடுகள் நிகழ்த்தி வந்துள்ளனர். சிலப்பதிகாரம் காவிரிப்பூம்பட்டினத்தில் 'அறுமுகச் செவ்வேள் அணி திகழ் கோயிலும்' மதுரையில் "கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்" இருந்ததைக் குறிப்பிடுகின்றது. மணிமேகலை 'ஆலமர் செல்வன் மகன்" ஆகிய குமரவேளுக்கு விழா எடுப்பது பற்றிக் கூறுகின்றது. நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படையில் குமரவேள் கோயில் கொண்டுள்ள இடங்களாகிய திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன் குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர் சோலை ஆகிய ஆறு படைவீடுகள் பற்றிப் பாடியுள்ளார். முருக வழிபாட்டுக்கு ஆற்றுப்படுத்தும் முறையும் இங்கு குறிப்பிடற்பாலது. முருகனை அன்புடன் அடியார்கள் வழிபடும் சிறப்பும் கூறப்படுவது சிறப்பம்சமாகும். அருணகிரிநாதர் திருப்புகழில் முருக வழிபாட்டின் சிறப்பினைப் போற்றியுள்ளார். கந்தரனுபூதி, கந்தரலங்காரம் கந்தரந்தாதி திருவகுப்பு ஆகியனவும் முருக வழிபாட்டின் சிறப்பைக் கூறுவன. கந்தஷஷ்டி கவசம், ஷண்முக கவசம் போன்றவையும் அடியார்கள் முருக வழிபாட்டினை மேற்கொள்ள உதவுகின்றன. குமாரதந்திரம் முருக வழிபாட்டின் முறைமைகளைக் கூறும். வடமொழியில் உள்ள இதிகாச புராணங்களில் முருக வழிபாட்டின் மகத்துவம் கூறப்பட்டுள்ளது. ஸ்கந்த புராணம் இவ்வரிசையில் குறிப்பிடத்தக்கது. கச்சியப்பரது கந்தபுராணம் முருக வழிபாட்டின் பெருமைக்குரிய சிறந்த இலக்கியமாகும். யாழ்ப்பாண கலாசாரம் கந்தபுராண கலாசாரம் எனக் கூறுமளவுக்கு முருக வழிபாடு சிறப்பாக யாழ்ப்பாணத்தில் மக்களது வாழ்வியலோடு பின்னிப் பிணைந்துள்ளது.

இந்தியாவில் முருகவழிபாடு நாடெங்கும் பரந்து விளங்கியமைக்கு அங்கு எழுந்துள்ள திருக்கோயில்களே சான்று. கந்தகோட்டம், சிக்கல், மருதமலை குன்றத்தூர், மயிலம், திருமலை, வடபழநி, திருப்பூர், வல்லகோட்டை, வயலூர் போன்றவை முருக வழிபாட்டின் மகத்துவத்துக்குச் சான்றுபகர்வன. தமிழ்நாட்டில் இவ்வழிபாடு சிறப்படைந்துள்ளது போல் துளுநாடு, கேரளம், டெல்லி, ஹரியானா போன்ற இடங்களிலும் முருகனுக்குரிய ஆலயங்களில் முருகவழிபாடு மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடற்பாலது. அது போன்று இலங்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமத் திருத்தலம் முருக வழிபாட்டின் பெருமையை உலகெங்கணும் எடுத்துக் கூறுகின்றது. நல்லூர் கந்தசாமி கோயில் தொண்டமானாறு செல்வசந்நிதி கோவில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், மற்றும் மட்டக்களப்பில் மண்டூர் கந்தசுவாமி கோவில், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு எல்லையில் அமைந்துள்ள வெருகல் சித்திரவேலாயுதர் கோவில் மற்றும் மட்டக்களப்பில் உள்ள திருப்படைக் கோயில்கள் திருகோணமலை முத்துக்குமாரசுவாமி கோவில் ஆகியவை மக்களது முருக வழிபாட்டிற்கு வழிவகுத்து வருகின்றன. இன்றையநிலையில் புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள தமிழர்கள் உலகம் முழுதும் முருக வழிபாடு பரவி சிறக்க வழிவகுத்து வருகின்றனர்.

இவ்வகையில் எமது சமய மரபில் இறைவழிபாடு மகத்துவம் மிக்கதாகும். பன்னெடுங் காலமாக மக்களது வாழ்வியலை ஆன்மீக நிலையில் வளப்படுத்தி வந்துள்ளது பெரும்பாலும் உலகியல் வாழ்க்கைக்குரிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ள மக்கள் நித்திய நியமக் கடமையாகிய இறைவழிபாட்டுநேரங்கள் விரத காலங்கள், புண்ணிய காலங்கள், மகோற்சவ காலங்கள், பஞ்சம், பிணி முதலிய கஷ்டங்களுக்கு ஏதுவான காலங்களில் அவரவரது நோக்கங்களுக்கு உகந்தனவாய் பக்திநலம் பயக்கும் இறைவழிபாட்டிற்குரிய தோத்திரங்களை மனப்பக்குவத்துடன் படித்து பக்தி சிரத்தையுடன் இறை வழிபாட்டில் ஈடுபடின் அவர்களுக்கு வேண்டிய சித்திகளும் நல்வாழ்வும் இம்மை மறுமை இன்பங்களும் கைகூடும் என்பது சமய மரபில் காலந்தோறும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வரும் நம்பிக்கையாகும். இறை நம்பிக்கையே இறை வழிபாட்டிற்குரிய மூலாதாரமாகும் என மனதிற் கொண்டு இல்லங்களிலும் ஆலயங்களிலும் இறை வழிபாட்டில் ஈடுபட்டு வாழ்வில் நலம் பெறுவோமாக!

பேராசிரியர் இலக்கிய கலாநிதி
ப.கோபாலகிருஷ்ண ஐயர்,
வாழ்நாள் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராண மகிமை

வியாச முனிவரின் மைந்தனாகிய சூதமுனிவரால் வடமொழியிலே பாடப்பெற்ற சிறந்த பதினெண் புராணங்களை மகாபுராணங்கள் எனச் சிறப்பித்துக் கூறுவர். இப்பதினெண் புராணங்களில் ஒன்றாகிய 'காந்தம்' என்னும் புராணத்தின் சில இரகசியப்பகுதியில் சொல்லப்பெற்றதை, ஆறு காண்டங்களாக வகுத்து அழகு தமிழிலே 10,345 செய்யுள்களிலே "கந்தபுராணம்" என்ற நூல் வடிவமாக நமக்குத் தந்தவர் கச்சியப்பசிவாசாரி சுவாமிகளாவார்.

புராணம் என்பதற்குப் பழமையான வரலாறு என்று பொருள். புராதனம் என்பதே புராணம் என மருவியது என்பர். வேதங்களிலே கூறப்பட்ட அரிய தத்துவக் கருத்துக்களை உருவகித்து, யாவரும் புரியக்கூடிய வகையில் கதைவடிவில் விரித்துக்கூற வந்தவையே புராணங்கள்.

கருணையே வடிவான முருகவேளின் பெருமையைக் "கந்தபுராணம்" எடுத்துக் கூறுகிறது. ஞான பண்டிதனான முருகன், 'மும் மலங்களாகிய சூரன், சிங்கன், தாரகன் ஆகியோரைக் கொன்று ஆன்மாக்களாகிய தேவர்களைப் பந்தத்திலிருந்து விடுவித்தார்' என்பதே கந்த புராணத்தின் உட்பொருளாகும். கந்தபுராணம் உற்பத்திக் காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம் மற்றும் தக்ஷ காண்டம் என ஆறு பெரும்பகுதிகளைக் கொண்டுள்ளது.

கந்த புராணத்தின் தோற்றத்தைச் சற்று நோக்குவோமாயின் அதன் மகிமையை நாமும் உணர்ந்து பக்தி சிரத்தையுடன் அதனைப் படிக்கத் தோன்றும்.

அண்டரும் புகழும் தொண்டை நன்னாட்டின் காஞ்சி மாநகரில் கச்சியந்தலத்திலே ஆதிசைவர் திருமரபில் வந்த காளத்திய சிவாச்சாரியாருக்கும் அவர் மனைவிக்கும் அருட்குழந்தையாக வாய்த்த கச்சியப்ப சிவாச்சாரியாருக்குக் கல்வியும் ஞானமும் ஒருங்கே கைவரப்பெற்ற வேளையிலே, ஒருநாள் முருகப்பெருமான் அன்னாரின் கனவிலே தோன்றி "நமது சரித்திரத்தைக் "கந்தபுராணம்" என்ற பெயரில் தமிழிலே காப்பியமாகப் பாடக் கடவாய்" என்று கட்டளையிட்டுக் காப்புப் பாடலாகத் "திகடசக்கர......." என அடியும் எடுத்துக் கொடுத்தருளினார். கனவு தெளிந்த கச்சியப்பர் கண்விழித்தெழுந்து கந்தன் கருணையை நினைந்து நினைந்து உருகிக் கண்ணீர் மல்கி நீராடி நீறணிந்து தாம் நித்திய பூசை வழிபாடு செய்யும் குமரகோட்டம் சென்று வடிவேல் முருகனை வழிபட்டுக் கந்தபுராணம் பாடத்தொடங்கினார்.

தினமும் நூறுபாடல்வரை பாடிவிட்டு ஏட்டையும் எழுத்தாணியையும் குமரகோட்டத்து இறைவனடியில் வைத்துவிட்டுத் திருக்கதவைத் திருக்காப்பிட்டு வீடு செல்வாராம். மறுநாட் காலையில் மீண்டும் வந்து ஏட்டை எடுத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கும் போது ஏட்டில் ஆங்காங்கே சில இடங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்குமாம். இதனைக் காணும் கச்சியப்பர் முருகன் ஆடலை வியந்து மேலும் பக்தி சிரத்தையுடனும் கவனத்துடனும் நூலை இயற்றி நிறைவேற்றினார்.

நூலை அரங்கேற்றும் வேளையிலும் மேலும் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. "திகடசக்கரச் செம்முகம் ஐந்துளான்" எனவரும் காப்புப் பாடலைக் கச்சியப்பர் படித்து விட்டுத் திகடசக்கரம் என்பதைத் திகழ் + தசம் + கரம் எனச் சந்தி பிரித்துப் பொருள்கூற முற்பட்டபோது, அவைப் புலவர் ஒருவர் எழுந்து "திகழ் + தசம் என்பது- திகடசம் எனப் புணர்வதற்குத் தொல்காப்பியத்திலே விதியில்லையே" என்று ஆட்சேபித்தார். அதற்குக் கச்சியப்பர் "இது என் வாக்கன்று: அந்த எழில் வேல் முருகனே எனக்கு எடுத்துக் கொடுத்த அடி" என்று சமாதானம் சொன்னார். அவைப் புலவர் விட்டுக் கொடுக்கவில்லை. "அப்படியாயின் அந்த முருகனே இந்த அவைக்கு வந்து விளக்கம் தரட்டும்: அதுவரை இதனை அரங்கேற்ற விடேன்" என்று கடுமையாக எதிர்த்தார்.

அவை கலைந்து கவலையோடு திரும்பிய கச்சியப்பர் கண் துயின்ற வேளை கந்தவேள் கனவிலே தோன்றி, "அப்பனே நீ வருந்தற்க, சோழ தேசத்திலே 'வீரசோழியம்' என்றோர் இலக்கண நூல் இருக்கிறது. திகழ் + தசம் என்பது திகடசம் எனப் புணர்வதற்கு அதிலே சந்திப் படலத்தில் பதினெட்டாம் செய்யுளில் விதியுள்ளது. சோழதேசத்துப் புலவன் ஒருவன் நாளை அதனை அவைக்குக் கொண்டுவந்து விளக்குவான்" எனக் கூறி மறைந்தார்.

அங்ஙனமே மறுநாள் அரங்கு கூடியவேளை 'வீரசோழியம்' என்ற இலக்கண நூலைக் கையிலேந்திய வண்ணம் அவையிற் புகுந்த புலவரொருவர் சந்தேகத்தை விளக்கிவிட்டுக் கச்சியப்பர் கையில் அந்த இலக்கண நூலைக் கொடுத்துவிட்டு மறைந்தருளினார். அவையோர் இது ஆறுமுகன் ஆடலே என உய்த்தறிந்து உரிய மரியாதையுடன் நூலை அரங்கேற்றி வைத்தனர்.

*எனவே கந்தபுராண நூலாக்கத்தில், தொடக்கத்தில் அடியெடுத்துக் கொடுத்தும், அன்றாடம் பிரதி சீர்பார்த்தும், அரங்கேறும் வேளையில் மேற்படி அற்புதம் காட்டியும் தனது ஈடுபாட்டை முருகனே நேரடியாகக் காட்டியமை இந்நூலின் மகிமைக்கும் புனிதத்துக்கும் நற்சான்றாகும்.*

இத்தகைய பெருமை மிக்க கந்தபுராணம் ஈழத்தில் புகுந்த காலத்தை ஆய்ந்தவர்கள் அது சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பானது எனக் கண்டறிந்தனர். வட இலங்கையில் ஆரியச் சக்கரவர்த்திகளின் தலைமையில் தமிழ் இராஜ்ஜியம் நிலவிய கால கட்டத்தில் தமிழர் சமய கலாச்சார விடயங்கள் மிக உன்னத நிலையில் இருந்தன. 5ம் சிங்கைச் செகராசசேகரன் காலத்திலிருந்து நல்லூர் இராசதானிச் சூழலிலே தமிழ்ச் சங்கமும் நூலகமொன்றும் இயங்கி வந்தமைக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றுகள் உள்ளன. இத் தமிழ்ச்சங்கப் புலவர்கள் தமிழகத்தில் கந்த புராணம் செல்வாக்குப் பெற்றிருந்தமையை அறிந்து அதன் ஏட்டுப் பிரதியொன்றை அரசின் உதவியுடன் இலங்கைக்கு வரவழைத்து இங்கு கந்தபுராணத்தைப் பரப்பியிருக்கலாம் என எண்ண இடமுண்டு.

கந்தபுராணத்தின் மகிமையினாலேயே யாழ்ப்பாணத்தில் சைவமும் தமிழும் தொய்வு எதுவுமின்றித் தொடர்ந்து தழைத்தோங்கி வந்தது எனலாம். இதனை உறுதிப்படுத்துமாப் போல் நாவலர் தனது குறிப்பு ஒன்றிலே "கிறிஸ்து மதம் எத்தேசத்தினும் பரவினும் பரவலாம். யாழ்ப்பாணத்தில உள்ளபடி பரவாது என்று பாதிரிமார்கள் அந்தரங்கத்திற் புலம்புகிறார்கள்" என்று கூறியுள்ளார்.

கந்தபுராணம் படித்துப் பொருள் சொல்லும் முறையின் உச்சக் காலம் நாவலர் காலமாகும். அக்காலத்தில் படன விதிமுறைப்படியே படித்துப் பயன் உரைப்பர். அதாவது செய்யுளை ஒருவர் முழுமையாக உரிய இராகத்தல் படிப்பார். பின்னர் செய்யுள் வரிகளைப் பொருட்செறிவுள்ள கூறுகளாகப் பிரித்துப் படிப்பர். அப்போது பயன் சொல்பவர் அதே இராகத்தில் அதே சுருதியில் அக்கூறுகளுக்குப் பொருள் விரிப்பார். பிற்காலத்தில் விருத்தப் பாக்களுக்குரிய இராகம் அறிந்தவர் அருகி வந்தமையால் இவ்விதிமுறை பெரிதும் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

திருகோணமலை நகரிலே அருள்மிகு முத்துக்குமாரசுவாமி ஆலயத்திலும் வில்லூன்றிக் கந்தன் ஆலயத்திலும் தொன்றுதொட்டுக் கந்தபுராண முற்றோதல் நடைபெற்று வந்தது. ஆனி உத்தரத்தில் தொடங்கும் படிப்புத் தொடர்ச்சியாகப் படிக்கப்பட்டுப் பெரும்பாலும் ஆவணிக்கடைசி ஞாயிறு வரையில் நிறைவேற்றி வைக்கப்படும். புராணபடலம் பூர்த்தியாகும் தினத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டு வந்தது. இது போன்று நிலாவெளி, குச்சவெளி, திரியாய், மூதூர், தம்பலகமம் போன்ற பகுதிகளிலும் முற்காலத்தில் கந்தபுராண முற்றோதல் நடைபெற்றதாக முதியோர்கள் சொல்லக் கேட்டதுண்டு. அக்காலத்தில் ஆலய குருக்களாக விளங்கியவர்கள் கந்தபுராணத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டதனால் தாமே முன்னின்று ஊரவர்களை வழிநடத்தி இம்முற்றோதலை ஆலயங்களில் நிறைவேற்றிவைத்தனர்.

தற்சமயம் திருகோணமலையில் அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோயிலில் மாத்திரம் இம்முற்றோதல் நடைபெற்று வருகிறது. இடைக்காலத்தில் சில ஆண்டுகளாகத் தடைப்பட்ட இப்படிப்பினைச் சைவப்புலவர் பண்டிதர் இ.வடிவேல் அவர்கள் முன்னின்று தொடங்கித் தனது தலைமையின் கீழ் மற்றும் திருவாளர்கள் கனகசபை, சு.தர்மலிங்கம், குலவீரசிங்கம், கெஜரெத்தினம், தியாகராஜா, பரமகுரு, கணேசலிங்கநாதன், சித்திரவேலாயுதன் போன்றோரின் பங்களிப்புடன் நடாத்தி வந்தார். இவ்வாறு முற்றோதல் புத்துயிர் அளிக்கப்பட்ட நாள் முதல் முற்றோதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்த்தி தினத்தை 'ஆவணிக் கடைசி ஞாயிறு' என்ற வழமையைத் தவிர்த்து 'ஆவணி மூல நட்சத்திரம்' அமையும் நாளுக்கு மாற்றிவைக்கும்படி திரு கெஜரெத்தினம் அவர்கள் பரிந்துரைக்கப் பண்டிதர் வடிவேல் ஐயா அவர்களும் இணங்கிக்கொண்டார். அதன் பிரகாரம் இவ்ஆலயத்தில் வருடந்தோறும் ஆனி மாத உத்தர நட்சத்தில் முற்றோதல் ஆரம்பித்து ஆவணி மூலநட்சத்திர தினத்தில் நிறைவு பெறும். மாலைத் திருவிழாவின் போது சுவாமி வீதி வலம் வரும்வேளை 10,345 பாடல்களை உள்ளடக்கிய பண்டைய ஏட்டுப் பிரதியையும் இன்றைய அச்சுப் பிரதிகளையும் ஓதுவார்கள் பக்திசிரத்தையுடன் சுமந்து வருவார்கள்.

காலப்போக்கில் திருவாளர்கள் கனகசபை, தியாகராஜா மற்றும் பண்டிதர் வடிவேல் ஐயா ஆகியோர் காலமாகிவிட்டார்கள். திருவாளர்கள் கெஜரெத்தினம், கணேசலிங்கநாதன், ஆகியோர் யாழ்ப்பாணம் சென்றுவிட்டார்கள். எனினும் முருகன் பணிதொடரவேண்டிய நியதிப்படி திருவாளர்கள் குலவீரசிங்கம், தர்மலிங்கம், சித்திரவேலாயுதன், பரமகுரு ஆகியோருடன் வைத்தியக் கலாநிதி குகேந்திரன், வங்கி முகாமையாளர்கள் சிவேந்திரன் மற்றும் உதயசங்கர், சி.கிருபானந்தன், கி.இராசரெத்தினம், மா.விஜயராஜா, செ.விபுணசேகரம், நா.இராாமசாமி, வ.வேலாயுதபிள்ளை, செ.மகேந்திரன், ந.சுந்தரலிங்கம், சா.உருத்திரபசுபதி ஆகியோர்களும் வேறு சிலரும் காலத்துக்குக் காலம் ஓதுவார் குழுவில் சேர்ந்து இவ்வாலயத்தில் கந்தபுராண படனம் தடையின்றி நடைபெற உதவிவருகிறார்கள். இவர்களுள் திருவாளர்கள் சு.தர்மலிங்கம் *(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோத்தர்)* மற்றும் குலவீரசிங்கம் *(இளைப்பாறிய துறைமுக அதிகாரசபை உத்தியோத்தர்* ஆகிய இருவருமே தொடச்சியாக இம்முற்றோதலுக்கு இணைப்பாளர்களாகப் பெருமளவு சேவை செய்து இம்முற்றோதலில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அதற்கு முன் 30,40 வருடங்களாக ஆலடி விநாயகர் தேவஸ்தானத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமிக் குருக்கள் அவர்களால் இவ் ஆலயத்தில் கந்தபுராணம் படிக்கப்பட்டு வந்தது. தான் சிறுபராயமாக இருந்தபோது தனது தாய்வழிப் பேரனாரான கணபதிப்பிள்ளைக் குருக்களினால் இப்படிப்பு நடாத்தப்பட்டு வந்ததாகத் தனக்குத் தெரிந்தவரையில் முத்துக்குமாரசாமி கோயிலில் கந்தபுராண முற்றோதல் 100 அல்லது 125 வருடங்களுக்கு மேலாக நடைபெற்றுவருவதாகக் கூறலாம் என முத்துக்குமார சுவாமிக் குருக்கள் ஐயா அவர்கள் 1994ல் எனக்குத் தெரிவித்தார். மேலே சொல்லப்பட்ட கணபதிப்பிள்ளை (சைவக் குருக்கள்) அவர்களினாலே இன்றும் இவ்வாலயததில் காணப்படும் தேர்முட்டி நிறுவப்பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கது.

இது தவிர இவ் ஆலயத்தில் கந்தசட்டி விரத காலத்தின்போது கந்தபுராணத்தின் யுத்தகாண்டப்பகுதியில் வரும் 'சூரபன்மன் வதைப்படலம்' படிக்கப்பட்டு வருகிறது. அநேகமான ஆலயங்களில் கந்தபுராண முற்றோதல் நடைபெறாவிடினும், கந்தசட்டி காலத்தில் சூரபன்மன் வதைப்படலம் படிக்கப்பட்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே பெயர் குறிப்படப்பட்ட திரு.கெஜரெத்தினம் என்பவர் சூரபன்மன் வதைப்படலத்தில் வரும் 507பாடல்களையும் அதற்கப்பால் மீடசிப்படலம் வரை வரும் 63 பாடல்களையும் மனனம் செய்து வைத்திருப்பதனால் பாடல்களைப் படிப்பவர்கள் சொற்பிழை விட்டாலோ அல்லது வரிகளைப் பொருட்செறிவுள்ள கூறுகளாகப் பிரித்துப் படிக்கும்போது தவறாகப் பிரித்தாலோ தனது கையில் புத்தகம் இல்லாமலே தானே அப் பாடல்களை மீண்டும் பிழையின்றிப் படித்துப் பாடற் கூறுகளையும் பொருட்செறிவுள்ளதாகச் சரிவரப் பிரித்துப் படித்து காட்டி விரிவுரை செய்து புதியவர்களை ஊக்குவித்து வழிகாட்டி வந்தார். இவர் நிலாவெளியில் வாழ்ந்த காலப்பகுதியில் நிலாவெளி சித்திவிநாயகர் ஆலயத்தில் 1950ம் ஆண்டு தொடக்கம் பிரதம குருவாகப் பணியாற்றிய பருத்தித்துறை ம. சண்முகக்குருக்கள் ஐயா (*ஆலடி விநாயகர் தேவஸ்தானத்தைச் சேர்ந்த அமரர் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமிக் குருக்கள் அவர்களின் உறவினர்*) கந்தசஷ்டி விரத காலத்தின்போது சூரபன்மன்வதைப்படலத்துக்குப் பயன்சொல்லும்போது உடனிருந்து செய்யுள்களைப் படிக்கும்போதே அவருடைய விரிவுரையைச் செவிமடுத்துவந்தபின் தானும் சுமார் 50 - 60 வருடங்களாக விரிவுரை செய்து வந்ததனால் மேற்படி 570 பாடல்களும் தனக்கு மனனமாகிவிட்டது என்பார்.

இக்கட்டுரையின் முற்பகுதியில் குறிப்பட்டதுபோல் கந்தபுராண உட்பொருள் யுத்த காண்டத்தில் வரும் பிரதான படலமான சூரபன்மன் வதைப்படலத்திலேயே பின்னப்பட்டுள்ளது. ஆணவத்தின் மொத்த உருவமாகச் சூரனைச் சித்திரித்து, அவனது ஆணவத்தடிப்பை ஆறுமுகப் பெருமான் ஞானசக்தி வேலால் அறுத்தது மட்டுமன்றி அவனுக்கு அருள் புரிந்தமையும் காட்டப்படுகிறது.

இராமாயணத்திலே இன்னல் செய் இராவணன் கொல்லப்பட்டுத் தர்மம் நிலைநாட்டப்பட்டது. மகாபாரதத்தில் பாண்டவருக்குத் துன்பம் கொடுத்து வந்த துரியோதனனாதியோர் கொல்லப்பட்டுத் தர்மம் நிலைநாட்டப்பட்டது. ஆனால், இராவணனும் போற்றபடவில்லை. துரியோதனனும் துதிக்கப்படவில்லை. இதற்கு மாறாக கந்தபுராணத்திலே தேவர்களைச் சிறைபிடித்துத் துன்புறுத்திய சூரனது உடல் அழிக்கப்பட்டு அவனது உயிருக்குச் சேவலும் மயிலும் என வேற்றுருக்கள் அளிக்கப்பட்டு அவன் ஆறுமுகப் பெருமானால் ஆட்கொள்ளப்பட்டான். முருகனை வணங்குவோர் அவனோடு பிணைந்த சேவலும் மயிலுமாயிருக்கும் புத்துயிர் பெற்ற சூரபன்மாவையும் வணங்கத்தக்க நிலையில் சூரபன்மாவுக்கு முருகன் பேரருள் கொடுத்திருக்கிறார்.பெருந்தீமைகள் பல புரிந்தவர் கூட குமரக் கடவுளின் திருவருட் கடாட்சம் பெற்றால் அவர்கள் தூயவராகி வீடுபேறடைவர் என்பது சூரசருக்கத்தினால் அறியக்கிடக்கிறது. இதனைக் கச்சியப்பரே வெகு சுர்சிதமாகக் கூறுகிறார்.

"தீயவை புரிந்தா ரேனும் குமரவேடிரு முனுற்றாற்
றூயவராகி மேலைத் தொல்கதி யடைவ ரென்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர் இந்நாட்செய்த
மாயையின் மகனு மன்றோ வரம்பிலா அருள் பெற்றுய்ந்தான்"

இத்துணைச் சிறப்பு வாய்ந்த கந்தபுராணத்தை நம்மில் எத்தனை பேர் படித்தறிந்தோம்? படித்தறிந்திராவிடினும் ஆலயங்களிலே படிப்பு நிகழும் போதாவது கேட்டறிய முனைபவர் எத்தனை பேர்?

இந்நூலாசிரியர் கச்சியப்பசிவாசாரியார் அவர்கள் நூலை நிறைவேற்றி வைத்து இறுதிப் பாடலுக்கு முதல் பாடலாகிய (10,344 வது) பாடலிலே இந்நூலை ஓதுவாரும், ஆராய்வாரும், பிழையறக் கற்றவர்களும், கற்க முயல்பவர்களும் கசிந்து கேட்டவரும் முத்திப் பேற்றினை அடைவார்கள் என்ற பொருள்படப் பின்வருமாறு பாடியுள்ளார்.

" வற்றா அருள் சேர் குமரேசன் வண்காதை தன்னைச்
சொற்றாரும், ஆராய்ந்திடுவாரும் துகளுறாமே
கற்றாருங் கற்பான் முயல்வாரும் *கசிந்து கேட்டல்*
*உற்றாரும்* வீடுநெறிப் பாலின் உறுவர் அன்றே"

எனவே காலத்தாலும் சீலத்தாலும் முற்பட்டு ஞாலத்தோரால் போற்றப்படும் மெய்ஞ்ஞான ஒளி நிறைந்த மாபெரும் நூலாம் கந்த புராணத்தை எஞ்ஞான்றும் எல்லோரும் அன்புடன் ஓதி எல்லா நலனும் பெறுவோமாக.

"ஆறிரு தடந்தோள் வாழ்க, அறுமுகம் வாழ்க, வெற்பைக்
கூறு செய்தனிவேல் வாழ்க, **குக்குடம்* வாழ்க, செவ்வேள்
ஏறிய **மஞ்ஞை* வாழ்க, யானை தன் அணங்கும் வாழ்க,
மாறிலா வள்ளி வாழ்க, வாழ்க சீரடியாரெல்லாம்."

[ **குக்குடம் = சேவல்* **மஞ்ஞை = மயில்* ]

*ஏற்கனவே மேலே குறிப்பிடப்பட்டது போல சூரனது உடல் இரு கூறாகப் பிளக்கப்பட்டு அவனது உயிருக்குச் சேவலும் மயிலும் என வேற்றுருக்கள் அளிக்கப்பட்டு அவன் ஆறுமுகப் பெருமானால் ஆட்கொள்ளப்பட்டபேரருளால் பன்னிரு தோளும் ஆறுமுகங்களும் வேலும் வள்ளி தெய்வானையும் சீரடியார்களும் வாழ்த்தப்படும் இப்பாடல் மூலம் முருகனோடு பிணைந்த (குக்குடம்) சேவலும் (மஞ்ஞை) மயிலும் வாழ்த்தப்படுகின்றமை இங்கு நோக்கற்பாலதாகும்.*

கச்சியப்பசிவாச்சாரியார் திருவடி வாழ்க

திரு.கெ.சித்திரவேலாயுதன்
ஓய்வு நிலை அதிபர்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் இசை வளர்க்கும் முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம்

தேனினும் இனிய செந்தமிழை இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழாகவே நம் முன்னோர்கள் போற்றி வந்துள்ளனர். எல்லாக் கலைகளும் சமுதாய விருட்சத்தின் பக்கவேர்கள் என்றால் இசை ஆணிவேராக இருக்கின்றது. படிப்பை (இயல்) பாட்டாகச் சொல்லிக் கொடுத்தவர்கள் நம்முன்னோர்கள். படித்தல் என்றால் பாடுதல் என்று பொருள்.

"அமுது பொங்கித் ததும்பும் நற்கிதம் படிப்பான்" என்று பாரதியாரும் "படிக்கின்றநிலை பழனித் திருநாமம்" என்று அருணகிரியாரும் "தேன் படிக்கும் அமுதா நின் திருப்பாட்டை தினந்தோறும் நான் படிக்கும் போது நாவொன்றோ நானறியேன்" என்று வள்ளலாரும் கூறுவதில் இருந்து படிப்பு பாட்டாக சொல்லிக் கொடுக்கப்பட்டதென்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

இலக்கியங்கள் இசையோடு கற்பிக்கும் போது அதன் சுவையும் பொருளும் மாணவர் மனதில் நன்கு பதியும் என்பது கருதியே ஆசிரியர்கள் தற்போது கற்பித்து வருவது கண்கூடு.

இறைவனை அடைய நாதோபாசனை மார்க்கமே மிகச் சிறந்தது. இனிமையானது. எளிமையானது. இசை ஞானம் ஏற்படுவதற்கு இசையைப் பாடவும், கேட்கவும், அனுபவிக்கவும் பயிற்சி பெறவேண்டும். இசைக்கலை ஒருவனுக்கு நல்ல பண்பாட்டையும் பக்குவத்தையும் கொடுக்கிறது என்று சொல்லலாம். இசை என்பது நல்ல சாஸ்திரீயமான இசையைக் குறிக்கும். அதற்குத் தான் மனிதனைப் பண்படுத்தும் குணம் இருக்கும். கேட்கும் ஓசை எல்லாம் இசையாகி விடாது.

இக்காலத்தில் பலவித ஓசைகளை உண்டாக்கி விரசமான த்வனிகளை உண்டாக்குகிறார்கள். இந்த ஓசைகள் இளைஞர்களின் உள்ளத்தில் விகற்பத்தையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்துகிறது.

கீழைத்தேய, மேலைத்தேய சாஸ்திரிய சங்கீதம் ஸ்வரங்கள் காதுக்கும், மனதுக்கும் இன்பத்தையும், அமைதியையும் கொடுக்கும் தன்மை வாய்ந்தவை.

நல்ல சுருதி சுத்தமான இசை மனதை லயப்படுத்துகிறது. மனதை ஒருமுகப்படுத்த இசையை விட வல்லமையான கருவி வேறெதுவும் இல்லை. இயந்திரமயமான இன்றைய வாழ்வில் இளைஞர்கள் கலையார்வம் குன்றிவிட்டது. எமது கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும் பிரதிபலிப்பதுவுமான இவ்வாறு கலைகளின் பால் இளம் சந்ததியினரை நாட்டம் கொள்ளச் செய்வதுடன், அதில் ஈடுபாடு கொண்டு பயிற்சி பெறச் செய்வது இன்றைய தலைமுறையினரின் தலையாய கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய நன்நோக்கோடு கலைவல்லாளர்கள் சிலர் தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் சிந்தனையின் வெளிப்பாட்டில் உருவாகியதே அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான இசை நடன கலாலயம்.

தக்ஷிண கைலாயம் என்னும் சிறப்புப் பெயரோடு கோவிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த திருக்கோணேஸ்வரத்தையும், வீதிகள் தோறும் பல கோவில்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதாய் அடிக்கொரு லிங்கம் இருப்பதாய் உணர்ந்து சிவபூமி எனத் திருமூலரால் சிறப்பித்துக் கூறப்பட்ட திருத்தலமே திருகோணமலை என்னும் பதியாகும். இயற்கை எழில் கொஞ்சும் நகராகவும், முப்புறமும் கடலால் சூழப்பட்ட திருத்தலமாகவும் விளங்கும் இத்திருநகரில் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் சிறப்புற்று விளங்குவது எல்லோருக்கும் தெரிந்ததே.

வீணைக் கொடியோனாகிய இராவணன் இறைவனை ஏற்றிப்பாடிய சாமகானம் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கும் மலை எம் திருகோணமலை. நாதமும், கீதமும் ஒன்றிணைந்து நர்த்தனமாடும் சிவபூமி. இச்சிவபூமியிலே பண் சுமந்த பாடல்களும் நயம் மிகுந்த இராகங்களும் இன்னிசையும், இசையொலியும், தாளஜாதிகளின் சங்கமத்துடன் இன்றுவரை ஒலித்துக் கொண்டு தான் இருக்கின்றன.

இத்தனை சிறப்புவாய்ந்த இம்மண்ணிலே இளம்பிராயத்தினரை விருப்போடு ஈடுபடுத்தி அவர்களுக்கு ஒரு பிரகாசமான எதிர்காலத்தை ஏற்படுத்தும் நோக்குடன் 2000ம் ஆண்டு, ஞானசம்பந்தப் பெருமான் பூம்பாவையை உயிர்ப்பித்த தைப்பூசத் திருநாளிலே முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்ட அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான இசை, நடன கலாலயம் 15 வருடங்களைக் கடந்து ஆல் போல் தழைத்துப் பல விழுதுகளைத் தாங்கிப் பெருமையுடன் தலைநிமிர்ந்து நிற்கின்றது, என்பது மனதிற்கு பெருநிறைவைத் தரும் விடயமாகும். திருகோணமலை வாழ் மக்களின் அபிமானத்தை பெற்று வளர்ந்து வரும் கலாலயத்தின் கலைப்பயணத்தையும் அதன் வளர்ச்சியையும் உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

பாடல் பெற்ற திருத்தலமாம் கோணமலை நாதனின் ஆசியுடனும், ஸ்ரீபத்ரகாளி அம்பாளின் கருணையுடனும், அருள்மிகு முத்துக்குமரனின் அனுசரணையுடனும் எமது கலாலயம் 15 ஆண்டுகளை நிறைவு செய்து 16ம் ஆண்டை நோக்கி வீறுநடை போடும் பருவமங்கையாகத் திகழ்கின்றது. ஒவ்வொரு வருடமும் தைப்பூசத்திற்கும், விஜயதசமிக்கும் கூடும் புதிய மாணவர்களின் வருகையால் கலாலயம் புதிய மெருகுடனும், கலகலப்புடனும் தன் கலைப்பயணத்தை நோக்கி நடைபயில்கின்றது.

➢ வாய்ப்பாட்டு, வீணை, வயலின், புல்லாங்குழல், ஹார்மோனியம், தவில், நாதஸ்வரம், பண்ணிசை மட்டுமன்றி பரதத்திலும் மாணவர் கணிசமான வளர்ச்சியைக் கண்டுள்ளனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நமது கலாலயத்தில் மட்டுமே பண்ணிசை கற்கை நெறியில் அறிமுறை, செயன்முறை இரண்டும் சீராகக் கற்பிக்கப்படுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இளம் தலைமுறைக்கு இலவசமாக இசை, நடனக் கலைகளை பயிற்றுவிக்கும் முகமாக கலாலய இயக்குனர் திருமதி. விஜயகுமாரி தவசிலிங்கம் அவர்களின் தலைமையிலும், வழிகாட்டலிலும் இக்கலைகளில் சிறந்த ஆசிரியர்களின் கூட்டுறவால் பல மாணவிகளைத் தன்னகத்தே கொண்டு அவர்தம் பெறு பேறுகளினால் பெருமிதம் கொண்டு நிற்கின்றது.

பரீட்சைக்கு தோற்றுவது மட்டுமன்றி பல கலைநிகழ்ச்சிகளையும் அரங்கேற்றியவர்கள் நம் கலாலய மாணவச் செல்வங்கள்.

இத்தருணத்தில் கடந்த 15 ஆண்டுகளில் நம் கலாலயம் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கும் வேளையில் முதன் முதல் நிகழ்ச்சியாக 2001 ஆம் ஆண்டு மாணவர்கள் பத்திரகாளி அம்பாளின் பூங்காவனத் திருவிழாவின் போது ஆமந்திரிகை (பல்லியம்) நிகழ்ச்சியை மேடையேற்றி மக்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்றமையும் அதனைத் தொடர்ந்து ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இந்து சமயப் பெருவிழாவில் பங்குபற்றி சிறப்பித்தமையும் மனதிற்கு இதந்தரும் இனிய நிகழ்வுகளாகும்.

திருகோணமலையில் மட்டுமன்றி வடக்கு, கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு வவுனியாவில் நடாத்திய இலக்கிய விழாவிலும் எமது கலாலயத்தினர் பல்லிய வாத்திய நிகழ்வை நடத்தியது மட்டுமன்றி திருகோணமலை கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற மனித உரிமைகள் தின விழாவில் தனி வயலினிசை வழங்கியும் பெருமை சேர்த்தார்கள்.

- ஏழிசையாய், இசைப்பயனாய் மிளிரும் அருள்மிகு முத்துக்குமாரசுவாமியின் பூங்காவனத் திருவிழாவில் திருமுறைப் பண்ணிசையை முறைப்படி இசைத்தும், பல இசைமாலைகள் தொடுத்தும் தனி ஆவர்த்தன இசை வழங்கியும் சிறப்பிக்கின்றமை களிப்புடன் நினைவு கூரத்தக்க விடயங்களாகும். இன்றும் இந்நிகழ்வுகள் தொடருகின்றன.

- நம் கலாலயத்தினர் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி கோவில் மகோற்சவ காலங்களில் பஞ்ச புராணம், நவசந்திப் பண்கள், ஊஞ்சல், எச்சரிக்கை லாலி, பராக்கு, தோச்சிந்து போன்றவற்றைப் பாடியும் பஜனை செய்தும் வருகின்றனர். கோயில்களில் பொதுவாக நவசந்திப் பண்கள் பெரியவர்கள் பாடுவது வழக்கம். இவ்வழக்கத்தை மாற்றி இளம்மாணவர்கள் நவசந்திப் பண்பாடும் வழக்கத்தை எமது கலாலயம் ஆரம்பித்து வைத்ததனால், இளம் ஆண்பிள்ளைகள் இவற்றைப் பாடுவது பாராட்டிற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இது மட்டுமல்ல நித்திய பூஜை முடிந்ததும் முத்துக்குமாரரை பள்ளியறையில் விட்டு திருவனந்தல் பாடுகிறார்கள் நம் சிறார்கள்.

- மகோற்சவ காலங்களில் ஈசானமூலையில் நூற்றுக்கணக்கான கலைமகள் முன்பள்ளிச் சின்னஞ்சிறு குழந்தைகள் ஒன்று சேர்ந்து ஒருமித்த குரலில் பண்பொருந்த தேவாரம்இ புராணம் ஓதுவது காதிற்கும் மனதிற்கும் இதம் தரும் நிகழ்வாகும்.

- தமிழ், சிங்கள நல்லுறவைப் பேணும் கலாச்சார நிகழ்வான நாத, நர்த்தன சங்கம விழாவில் எமது மாணவர் கர்நாடக இசையையும், சிங்கள மாணவர் ஹிந்துஸ்தானி இசையையும் இணைந்து வாசித்தமை பாராட்டிற்குரியதுடன் இசைக்கு மொழி இல்லை என்பதையும் உணர்த்தி நிற்கின்றது.

- பாடசாலையில் இன்னியத்தில் பங்கு பெறும் மாணவர்களுக்கு நாதஸ்வரம், ஹார்மோனியம், புல்லாங்குழல் ஆகிய வாத்தியங்களில் இசைப்பயிற்சிகளை கலாலயம் இன்று வரை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

- மாணவர்கள் திருகேதீஸ்வரம், மடு தேவாலயம் ஆகியவற்றிற்கு ஒரு களப் பயணம் மேற்கொண்டு அனுபவங்களைப் பெற்றுக் கொண்டார்கள். படிப்போடு, பக்தியும் வாழ்விற்குத் தேவை என்பதை இக்களப் பயணம் அவர்களுக்கு உணர்த்தி நிற்கிறது.

- களப்பயணங்களின் வரிசையிலே மட்டக்களப்பு விபுலானந்தா நுண்கலைக் கல்லூரிக்குச் சென்று பார்வையிட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். கல்லூரியின் சகல துறைகளையும் பார்வையிட்டு அங்கு நின்றுலாவி அமர்ந்த ஆனந்தானுபவம் எமது மாணவச் செல்வங்கட்கு கிடைத்த பெரும் பேறெனச் சொல்லலாம்.

- 2001 முதல் வடஇலங்கை சங்கீத சபைப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியெய்திய மாணவர்கள் ஏராளம். கடந்த வருடம் (2015) சுமார் 250 மாணவர்கள் கலாலயத்தின் மூலம் வாய்ப்பாட்டு, வாத்தியம், பண்ணிசை, பரதம் ஆகிய பல்வேறு துறைகளிலும் பரீட்சைக்குத் தோற்றி சிறந்த பெறுபேறுகளை தந்து கலாலயத்தைப் பெருமைப்படுத்தியுள்ளார்கள்.

- நோர்வேஜியன் தூதரகத்தால் நடாத்தப்பட்ட 100 கலைஞர்கள் சங்கமிக்கும் சாஸ்திரிய சங்கீத வாத்திய ப்ருந்தாவில் 50 சிங்கள கலைஞர்களும், 50 தமிழ் கலைஞர்களும் பங்குபற்றினார்கள். தமிழ் கலைஞர்கள் கொழும்பு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலையைச் சேர்ந்தவர்கள். இதில் திருகோணமலை சார்பில் கலாலய மாணவர்கள் வயலின், வீணை ஆகியவற்றை இசைத்து கலாலயத்திற்கும், திருகோணமலைக்கும் பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கொழும்பில் நடைபெறும் தியாகராஜ சுவாமிகளின் ஆராதனையின் போதும் பஞ்சரத்னம் பாடும் வழக்கத்தையும் கலாலயம் தொடர்ந்து ஈடுபட்டு வருவதும் போற்றுதற்குரியது.

- தற்போது கலாலயத்தில் கற்ற மாணவிகள் பல்கலைக்கழக படிப்பை முடித்து வந்து எமது கலாலயத்தில் ஆசிரியர்களாகப் பணிபுரிவது பெருமைக்குரியது. கலாலயம் என்னும் பெரு விருட்சத்தை தாங்கும் விழுதுகளாக எமது மாணவர்களே இருப்பது கலாலயத்தின் சிறப்பை எமக்கு உணர்த்தி நிற்கின்றதென்றால் மிகையாகாது. இவ்விழுதுகள் கலாலயத்தை என்றும் தாங்கி நிற்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எல்லோருக்கும் முத்துக்குமாரசுவாமியின் அருட்கடாட்சம் என்றும் நிலைத்து நிற்கும்.

ஒவ்வொரு துறைக்கும் ஆசிரியப் பெருந்தகைகள் பயிற்சி வழங்கினாலும், பரீட்சை சமயங்களில் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை அவர்களது பாடாந்தரங்களைத் தனது மேற்பார்வையில் கண்காணித்துத் தேவையான பயிற்சிகள் கொடுக்கும் கலாலய நிர்வாகி திருமதி. விஜயகுமாரி தவசிலிங்கம் அவர்களின் சேவை அளவிட முடியாத அளப்பரும் சேவையாகும். திருகோணமலை சமூகத்திற்கு அவர் ஒரு வரப்பிரசாதம். கலாலயத்தின் சேவையை உணர்ந்து அதன் உயர்விற்கு என்றும் துணை நிற்க வேண்டியது திருகோணமலைப் பெருமக்களின் தலையாய கடமையாகும்.

முத்தமிழிசை வளர்க்கும் முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான இசை, நடன கலாலயம் மென்மேலும் வளர்ச்சி கண்டு பல இசை, நடன கலைஞர்களையும், சுவைஞர்களையும் உருவாக்குவதற்கு எல்லாம் வல்ல இறைவன் திருவருட் கடாட்சத்தை நல்க வேண்டும் இறைவன் திருவருள் என்றும் துணை நிற்கும் என்பது எமது அசைக்க முடியாத நம்பிக்கை.

வாழ்க கலாலயம்! வாழ்க முத்தமிழிசை!

திருமதி. தேவிகா ராணி முருகுப்பிள்ளை
உபதலைவர்
இசை, நடன கலாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்த புராணமும் சைவ சித்தாந்தமும்

சமயம், செம்மையான மனித வாழ்கைக்கு உரிய நெறியை வகுத்துத் தருகின்றது. மக்கள், நயத்தக்க நாகரிகத்துடன், பண்பாடாக வாழ்வாங்கு வாழச் சமயம் தான் உறுதுணையாக விளங்கி வருகின்றது. சமயத்தை விலக்கி வைத்து மனிதர்கள் வாழத்தலைப்பட்ட போதெல்லாம், விலங்கு வாழ்கை வாழ்ந்தமையை வரலாறு காட்டுகின்றது. மனிதன் மனிதனாக வாழ்வதற்கும் அத்தகைய சீரிய ஆன்மீக வாழ்வின் பயனாக தெய்வீகத்தை அடைவதற்கும் மனிதனுக்கு வழிகாட்டுவது சமயம். எனவேதான் சமயம் ஒரு வாழ்க்கை நெறி எனும் கருத்து அதிமுக்கியத்துவம் வாயந்ததாக விளங்குகின்றது. சமயம் உலகியல் வாழ்கையை நெறிபடுத்துகின்றது. ஆன்மீக வாழ்க்கையை உறுதிப்படுத்துகின்றது. இந்த வகையில் சைவ சமயம் தொன்மையும் சிறப்பும் வாய்ந்த சமய நெறியாக திகழ்கின்றது.

சைவ சமயத்தின் தத்துவங்களையும் அவற்றின் செயற்பாடுகளையும் பல்வேறு கருத்துக்களையும் அவை தெட்டத் தெளிவாக உணர்த்தும் மனித நிறை வாழ்வின் நெறியையும் பல நூல்கள் நமக்கு தந்துள்ளன. அவற்றில் கச்சியப்ப சிவாச்சாரியார் இயற்றிய கந்த புராணம் மிகச் சிறந்ததாக விளங்குகின்றது. சைவசித்தாந்தப் பொருளும் இலக்கியச் சுவையும் இறையுணர்வும் கந்தபுராணத்தில் நன்கு செறிந்திருத்தலே சிறப்பு. காரணம், கந்த புராணத்தில் இல்லாதது எந்தப் புராணத்திலும் இல்லை என்பது கற்றோர் முடிவு.

சைவசித்தாந்தம் உணர்த்துகின்ற முப்பொருள் உண்மையை நிலைநாட்டியும் அவற்றின் இலக்கணம், சைவ சாதனம், பயன் ஆகியவற்றின் தாற்பரியங்களை, கற்றோரும் மற்றோரும் நன்கு விளங்கி கொள்ளும் வண்ணம் எடுத்து கூறியும் இருப்பதால் கந்தபுராணம் சைவ சித்தாந்த இலக்கிய, இலக்கண நூல் என்பது புலனாகிறது.

கந்த புராண அடிப்படையில் எழுந்த வாழ்கை நெறியும் முறையும், கந்தபுராண கலாசாரம் ஆயிற்று. கந்தபுராண கலாசாரம் இலங்கை சைவத் தமிழ் மக்களின் தனித்துவம் மிக்க கலாசாரம் ஆகும். அந்நிய ஐரோப்பிய ஆட்சியாளரின் காலப்பகுதியில் கந்தபுராண கலாசாரம் மங்கி மறைய இருந்தபோது, அதன் மறு மலர்ச்சிக்காக உழைத்து வெற்றி கண்டவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஆவார். கந்த புராணம் காட்டும் வாழ்வியல் உண்மைகளை அறிந்து வாழ்வில் மேற்கொள்பவருக்கு எந்தக் கேடும் அனுகாது என்பது நாவலர் கண்ட உண்மை. அவ்வாறு கந்தபுராண கலாசாரத்தை பேணுவதில் சிரத்தை அற்றவர்கள் வாழ்கையில் வேதனைகளையும், அமைதியற்ற நிலைமைகளையும் தவிர்த்துக் கொள்வது முடியாத காரியமாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணங்கள் பதினெட்டு. இப்பதினெண் புராணங்களையும், முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் முதலில் திருநந்தி தேவருக்கு உபதேசித்தார். வேதத்தை ஓதியும், உணராதிருந்தவர்கள் பலர்; மெய்ப்பொருள் இதுதான் என்றும் கூறும் துணிவு பிறவாதிருந்தவர்கள் பலர்; வேதத்தை ஓதாமல் இருந்தவர்கள் மேலும் பலர். அத்தகையோர் பயன் பெறும் பொருட்டே இப்பதினென் புராணங்களும் எழுதப்பட்டன. இவற்றுள் பத்து, சிவபுராணங்கள். அச்சிவபுராணங்களுள் ஒன்று கந்த புராணம். அது சுப்பிரமணிய கடவுளின் மான்மியத்தை உணர்த்தும் புராணமாகும். வடமொழியில் அது எழுதப்பட்டது. சகல வேதாந்த சித்தாந்தங்களின் சாரத்தை உள்ளடக்கியதாகவும் ஐம்பது காண்டங்களால் புனையப்பட்டதாகவும் இம் மூல நூல் உள்ளது.

வடமொழிக் கந்த புராணத்துச் சங்கர சங்கிதை பன்னிரண்டு காண்டமுடையது. அவற்றுள் சிவ ரகசிய காண்டம் என்பது சம்பவ காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தக்ஷ காண்டம், உபதேச காண்டம் என ஏழு காண்டங்களையும் கொண்டுள்ளது. அவற்றுள் முதல் ஆறு காண்டங்களையும் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் கந்த புராணம் எனும் பெயரில் தமிழில் அருளிச் செய்தார். உற்பத்தி காண்டம், அசுர காண்டம் மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தட்ச காண்டம் எனும் ஆறு காண்டங்களையும் பத்தாயிரத்து முந்நூற்று நாற்பத்தாறு விருத்தப்பாக்களையும் கொண்டு தமிழில் பெருநூலாக விளங்குகின்றது. பல பெருமைகளையும் சிறப்புக்களையும் கொண்டிலங்கும் இந்நூலில் கச்சியப்பர், சைவ சித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களின் இயல்புகளையும், இலக்கணங்களையும் காப்பிய மாந்தர்களிலும், கதையிலும் வைத்து ஆங்காங்கே தெளிவாக விளக்கியுள்ளமை போற்றுதற்குரியது. வாழ்கை விழுமியங்களை ஆணித்தரமாக எடுத்துக் கூறி மனிதகுல வாழ்விற்கும், ஈடேற்றத்திற்கும் வழிகாட்டியமை கச்சியப்பர், மக்கள் யாவர்கும் காலத்தினால் செய்த மாபெரும் உதவி அது. ஞாலத்தின் மாணப் பெரிது.

செய்நன்றி மறத்தல் ஆகாது கச்சியப்பருக்கு காட்டும் நன்றி, கந்தபுராணத்தைப் படித்து அதன்படி ஒழுகுவது தான். கந்தபுராண கலாச்சாரத்தை நாம் பேணுவதன் மூலம் செய்நன்றியறிதலையும் ஓம்பியவர்கள் ஆவோம். கந்தபுராண காவியமும், நன்றி மறத்தலால் ஏற்படும் பெரும் கேட்டையும், அழிவு அனர்த்தங்களையும் எடுத்துக் காட்டுகிறது அல்லவா?

சிவபெருமான் வேறு முருகன் வேறு என்று எண்ணுதல் பெருந்தவறு. சிவனும் முருகனும் ஒருவரே என்பதை கந்த புராணம் உணர்த்துகின்றது.

சூரபன்மன் தனக்கு பெருவாழ்வும், பேறும், பெரு வளமும் தந்த முழுமுதற் கடவுளாகிய சிவனை மறந்தான். அதனால் அவ்வளவற்றையும் இழந்தான். சிவனும் முருகனும் ஒன்று என்பதை மறுத்தான். அதனால் கெட்டான். தேவர்களும் சிவநிந்தை புரிந்த தக்கன் முதலியோருடன் கூடி குலாவி மகிழ்ந்தார்கள். பாவத்தை சம்பாதித்துக் கொண்டார்கள். தேவர்கள் நூற்றெட்டு யுகங்கள் சூரன் முதலியோரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்புறுத்தபடுவதற்கு முதல் ஆகிவிட்டது. கூடாத கூட்டத்தினருடன் கூடி திரிவதால் ஏற்படும் துயர்கள் பற்றி கந்தபுராணம் எப்பவோ கூறி விட்டது.

கந்தபுராணம் முருகனின் தோற்றம் பற்றி கூறுகின்றது. முருகன் தோற்றத்திற்கு காரணம் என்ன?

"ஒருதிரு முருகன் வந்தாங்கு
உதித்தனன் உலக முய்ய"

எனும் பாடலடியின்படி, இந்த உலகத்தை உய்விப்பதற்காக முருகன் உதித்தான் என்று கொள்ள வேண்டும்.

உலகம் உய்விக்கபட வேண்டும் என்றால், உலகில் பழுது ஏற்பட்டுவிட்டது என்பது பொருள். இயந்திரம் பழுதுபட்டால் தான், சீர் செய்ய முற்படுவர். உலகம் பழுதாய்ப் போகுமிடத்து அதனை செவ்வை செய்து உய்விக்க வேண்டிய தேவை ஒன்று ஏற்பட்டது. அந்த தேவையை பூர்த்தி செய்யவே முருகன் தோன்றினான்.

யார் இந்த முருகன்? வேறு யாருமில்லை சிவம் ஆகிய பதி தான். பதி சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள்களுள் ஒன்று. அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய் பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பு – தான் பதியாகிய சிவம். அந்த பதியாகிய சிவம் சோதி பிழம்பதோர் மேனியாகக் கருணைகூர் முகங்களாறுங், கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே ஒரு திருமுருகனாக உதித்தனன்.

அநாதியாய் உள்ள பதார்த்தங்கள் அல்லது பொருட்கள் பதி, பசு, பாசம் எனும் மூன்றுமாம். பதி ஒன்று தான். இந்த அடிப்படையில் தான் ஒருவனே தேவன் என்கிறார் சைவ சித்தாந்த மூலவர், திருமூலர். பசுக்கள் எண்ணில்லாதன. பசுக்களை உயிர்கள் என்றும் ஆன்மாக்கள் என்றும் கூறுவர். பாசத்தில் நின்று நீங்கியவர் உயிர்களோடு இயல்பாகவே கட்டுண்டவர். பதியாகிய ஒருவரே சுதந்திரர். அவர் பேரறிவும், பேராற்றலும் நிறைந்தவர். சிவபெருமானே அப்பரமபதி. பிறரெல்லாம் பசுக்கள். அதனால் சிவபெருமானை பசுபதி என்பர். காலத்தினாலே வரையறுக்கப்படாதவர்; தொடக்கமும் முடிவும் அற்றவர்; பழமைக்கு பழமையாய் புதுமைக்கு புதுமையாய் விளங்குபவர். தத்துவ சமூகமாயும் தத்துவாதீதமுமாயும் விளங்குபவர் சிவபெருமான். மனம் வாக்குகளுக்கு அதீதராய், ஊர், பெயர், குணம், குறி, செயல், வரவு, போக்கு, ஒப்பு என்பன இல்லாதவராய், உருவம், அருவம், அருவுருவம், கடந்தவராய் உள்ளவர் சிவபெருமானே. எனினும் உயிர்களில் பதிந்துள்ள பாசத்தை அறுத்து ஒழிக்கும் பொருட்டு, தமது அருட்சக்தியைக் கொண்டு ஐந்தொழில் நடாத்துபவர் சிவபெருமான். இது அவர் உயிர்கள் மீது கொண்டுள்ள அளப்பெருங் கருணையினால் ஆகும்.

"எவ்வெவ் வடிவமாய், எவ்வெவ் வண்ணமாய், எவ்வெப் பெயர் கொண்டு எவ்வெத் தெய்வத்தை எவ்வெவர் வழிபடினும், அவ்வவ் வடிவமாய், அவ்வவ் வண்ணமாய், அவ்வப் பெயர் கொண்டு, அவ்வவ் தெய்வத்தைத் தமது சக்தியால் அதிட்டித்து நின்று, அவ்வவர் வழிபாடு கண்டு அதனையங்கீகரித்து அநுக்கிரகிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானே. எள்ளும் எண்ணெயும் போன்றும். சேண்டியும் ஒலியும் போன்றும். மலரும், மணமும் போன்றும் பிரபஞ்சமெங்கும் ஏகமாய் நீக்கமற வியாபிப்பர்." (கந்தபுராண நவநீதம் - ஸ்ரீகாசி வாசி சி.செந்திநாதையர் பக். 52)

"யாதொரு பொருளை யாவ ரிறைஞ்சனு மது போய் முக்க
ணாதியை யடையு மம்மா தாம் வருவர் வங்கது போலத் தொல்லை
வேதம துரைக்க நின்ற வியன்புக ழனைத்து மேலா
நாதனை யணுகு மெல்லா நதிகளும் கடல் சென்றென்ன."

- கந்தபுராணம்

"யாதொரு தெய்வங் கொண்டீரத் தெய்வமாகி யாங்கே,
மாதொரு பாகனார் தாம் வருவர் மற்ற தெய்வங்கள்
வேதனைபடு மிறக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யு.
மாதலானிவை யிலாத னறிந்தருள் செய்வ னன்றே."

எனும் சிவஞான சித்தியார் பாடலுடன் நோக்கற்பாலது.

நால்வகை யோனிகளுள் ஒரு யோனி வாய்ப்பட்டுப் பிறப்பவை யாவும் பசுக்கள் ஆகும். மனிதர்கள் யாவரும் பசுக்களே. அப்படிப் பிறத்தல் இல்லாதது பதிப் பொருள் ஆகும். முருகன். சிவனின் நெற்றிக்கண்ணிலிருந்து உதித்தவன். எனவே முருகனும் பதியாகிய சிவனே. முருகன் ஞானத்தின் திருவுரு அன்றோ. தம்மை நோக்கி வழிபடும் அடியார்களுக்கு ஞான வடிவினராய் சிவபெருமான் வெளிப்பட்டருளுவர் என்ற உண்மையை கந்தபுராணம் தெளிவாகக் கூறுகிறது.

விநாயகர். வைரவர். வீரபத்திரர். சுப்பிரமணியர் என்னும் மூர்த்தங்கள் உலகில் நீதி கெட்டு அநீதி தலைதூக்கிய போது துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனத்தின் பொருட்டு சிவபெருமான் மேற்கொண்ட மூர்த்தங்கள் என்பது உணரப்படவேண்டியது.

"முந்தொரு காலத்தின் மூவுல கந்தன்னில்
வந்திடு முயிர்செய்த வல்வினை யதனாலே
அந்தமில் மறையெல்லா மடிதலை தடுமாறிச்
சிந்திட முனிவோருந் தேவரு மருளுற்றார்."

ஒரு காலத்தில் உலகில், உலக வாழ்க்கையில் அறம் புறமானது அடி தலை மாறியது; சீர் கெட்டது. ஒழுக்கம் சரிந்தது. எனவே உலகத்தை மீளவும் சீராக்கி உய்விக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. பரமபதிக்கு கருணை உண்டாக முருக தோற்றம் நடந்தது. கந்தபுராணம் தோன்றியது. கந்தபுராணத்தின் அருமையை அறிந்து அதனை உச்சி மேல் கொள்ள வைத்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான். இன்று மீண்டும் கந்தபுராணம் தேவைப்படுகிறது. நமது வாழ்வு சீர்பெற கந்த புராண கலாச்சாரத்தைக் கைக்கொண்டு உய்வு பெறுவோமாக.

ஆக்கியோன்:
குமாரசுவாமி சோமசுந்தரம் எம். ஏ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்கள் எப்படி இருக்க வேண்டும்

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது முதுமொழி. மக்கள் குடியிருக்கும் இடத்தில் கோயில் இருப்பது மிக முக்கியம். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று." இப்போ பார்க்கும் இடம் எல்லாம் கோயில்களைக் கட்டுகிறார்கள். அவற்றைப் பாதுகாப்பார் இல்லை. பொது மக்களுக்கு கோயில்கள் பாரமாய் இருக்கும் இடங்களும் உண்டு. தேவையான இடங்களில் கோயில் கட்டுவது அவசியம் அவற்றை நல்ல முறையில் நடத்துவதே முக்கியம்.

கோயில்கள் மக்களுக்கு பக்தியையும் அறிவையும் அருளையும் வளர்க்க வேண்டும் அதனால் மக்கள் உயர்வடைய வேண்டும். அவர்களின் வாழ்வு சிறக்க வேண்டும். கோயில்களில் நடக்கும் பூசை வழிபாடுகள் விழாக்கள் சமய நிகழ்ச்சிகள் எல்லாம் மக்களை மேல் நிலைக்குக் கொண்டு வரவேண்டும்.

மக்களின் பலர் கோயிலுக்கென்றால் தாராளமாகக் கொடுப்பார்கள். அவற்றை கோயில் நிர்வாகம் வாங்கி கோயிலுக்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் சமூகத்தில்உள்ள பாடசாலைகள் தொண்டு நிறுவனங்கள் வளர்ச்சி பெற்று முன்னேறுவதற்கும் உதவி செய்ய வேண்டும். வறிய பிள்ளைகளின் படிப்புக்கு உதவி செய்து கல்வியை வளர்க்க வேண்டும்.

கோயில்களில் பூசைகள் விழாக்கள் நடந்தால் போதாது திருமுறை ஓதல் புராணப் படிப்பு, சமய பிரசங்கம், சமய வகுப்புகள், அறநெறிப் பாடசாலை, வாசிகசாலை, நூல் நிலையம் எல்லாம் நடைபெற வேண்டும். பக்கத்தில் வாசிகசாலையும் சமய புத்தக விற்பனை நிலையமும் இருக்க வேண்டும்.

கோயில் வழிபாட்டுக்கு வெளியூரில் இருந்து வரும் அன்பர்கள் தங்க மடம் ஒன்று எல்லா வசதிகளுடனும் அவசியம் இருக்க வேண்டும். வறிய மக்களுக்கு கல்வி உதவியோடு வைத்திய உதவிகளும் செய்ய வேண்டும்.

தமிழையும் சைவத்தையும் கட்டிக் காத்த ஆறுமுக நாவலர் பெருமான் மனிதப் பிறவியின் நோக்கம் கடவுளை அறிந்து கடவுளை வழிபட்டு கடவுளை அடைதலே ஆகும் என்று அருளியுள்ளார். வண்ணார் பண்ணை சிவன் கோயிலில் வெள்ளிக்கிழமை தோறும் சமயப்பிரசங்கத்தை தொடக்கி வைத்து நடத்தி வந்தவர் ஆறுமுக நாவலர் பெருமான் அவர்கள்.

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் ஆலயங்களில் அன்னதானப் பணி மிகப்பெரிய தொண்டு. ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்று உலகம் முழுவதும் சென்று இந்து சமயத்தின் சிறப்பினை எல்லாச் சமயங்களுக்கும் போதித்த சுவாமி விவேகானந்தர் அருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் சுற்றாடல் புனிதமாக இருக்க வேண்டும். புனிதம் தெய்வத்தன்மைக்கு அடுத்தது கோயில் வீதியில் பக்கத்தில் இருப்போர் மாமிச போசனங்களை விலக்கி இருத்தல் நல்லது. அம்மா என அலற ஆருயிரைக் கொன்ற

இம்மானுடரெல்லாம் இன்புற்றிருக்கின்றார்
அம்மா எனுஞ் சத்தம் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்மாநிரய மெனில் புசித்தவர்கள் என் சொல்லுவதே

இதைப் படித்த பின்பாவது எம்மக்கள் நல்ல முடிவுக்கு வர அருள் புரிய வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

கற்றதனால் ஆய பயன் என் கொல்வால் அறிவன்
நற்றாள் தொழார் எனின்

மெய்யுணர்வினை உடையவர் கடவுள் அவருடைய நல்ல திருவடிகளைத் தொடராமல் இருந்தால் நூல்களைக் கற்றதனால் என்ன பயனுண்டாகும்.

உலகிலுள்ள எல்லாத் தேசத்தவர்களாலும் எல்லா மதத்தவர்களாலும் ஏகமனதாக ஏற்றுக் கொண்ட நூல் திருக்குறள் ஆகும். திருக்குறள் அநேகமாக எல்லாப் பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

சமயநூல்களையும் சமய ஒழுக்கங்களையும் சமய அறிவுரைகளையும் சமயத்தை வளர்த்த மகாஞானிகள் பேரறிவானர்கள் மக்கள் ஈடேற கடவுளை அடைய வேண்டி பல சமயங்களையும் அவற்றுக்கான வழிவகைகளையும் மக்களிடையே பரப்பி வந்தார்கள். இவ்வகையில் பல சமயங்கள் நடைமுறையில் உள்ளன.

மதவாதிகள் தங்கள் மதந்தான் சிறந்தது என்று பிரசாரம் செய்கின்றனர். எல்லா மதங்களும் மக்களை ஒரே இறைவனிடம் தான் சேர்ப்பிக்கின்றன. நாட்டில் உள்ள பல ஆறுகளும் ஒரே சமுத்திரத்தை தான் சென்றடைகின்றன.

மதங்களை வளர்க்க வழிபட ஆலயங்கள் தான் சிறந்தவை என்றும் அவைதான் ஏற்ற இடம் என்றும் எல்லா மதவாதிகளும் ஏற்று பல பெரிய ஆலயங்களை எல்லாம் உருவாக்கி வருகின்றன. அவற்றில் பூசை வழிபாடுகளை விழாக்களை நடத்தி வருகின்றனர். எல்லோருக்கும் கடவுள் ஒருவர்தான் என்ற சம நோக்குடையவர்கள் எல்லாக் கோயில்களையும் மதித்து வணங்குவர். எனது சமயம் தான் பெரியது எனது கோயில் தான் சிறந்தது என்ற போட்டிக்கு இடமில்லை. கோயில் நிர்வாகிகள் ஏற்றுக்கொண்டால் எல்லோரும் எல்லாக் கோயில்களுக்கும் போகலாம் வழிபடலாம் அப்போது எல்லாக் கோயில்களிலும் ஒரே கடவுள் தான் இருந்து மக்களுக்கு அருள் புரிகிறார் என்பது தெளிவாகும்.

இப்போது சாதிப் போர், சமயப் போர், தேசப்போர், அரசியல் போர் எனப் பல வகைப் போர்கள் உருவாகி நாட்டுமக்கள் அழிவுப் பாதையில் நடைபோடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு சமாதானம் சமரசம் ஒற்றுமை எல்லாம் மலையேறி விட்டன. ஆலயங்களை நல்ல முறையில் நடத்தி மக்களிடையே ஒற்றுமை சமாதானம் பொறுமை அன்பு இவற்றை ஆலயங்களின் மூலம் வளர்த்தால் நாடு சுவர்க்கமாகக் காட்சி அளிக்கும்.

நாட்டில் அரசியலும் சமாதானமும் சமூகமும் எல்லாம் சுயநலம் போட்டி பொறாமையால் அழிந்து கொண்டிருக்கிறது. "ஒற்றுமை இல்லாக்குடி ஒருமிக்கக் கெடும்" என்பது பழமொழி.

மகான்கள் காலத்துக் காலம் தோன்றி வாழ்ந்து வழிகாட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் காட்டிய வழியில் நாமும் நடந்து இறையடி சேர்வோமாக.

வெளிநாட்டவர்கள் ஆளவந்து எங்கள் மதங்களையும் மாற்றி கோவில்களையும் அழித்து தங்கள் கோயில்களை நாடெங்கும் கட்டி நாட்டு வளங்களையும் சுரண்டிக் கொண்டு போய் விட்டார்கள்.

நீதி மொழிகள்

கடவுளை நம்பினோர் கைவிடப்படார்
எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
அரனை மறவேல்
தெய்வம் இகழேல்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று
சிவத்தைப் பேணில் தவத்திற்கழகு
நோன்பென்பது கொன்று தின்னாமை
வைகல் தோறும் தெய்வம் தொழு
கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்
தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்
சிவாயநம என்று சிந்தித்து இருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை
அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால் இன்பநிலை தானே வந்து எய்தும் காண் பராபரமே
சேவை செய் அல்லது செத்து மடி என்றார் மகாத்மாகாந்தி அடிகள்

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
ஆனந்தம்

திரு.பொ.கந்தையா
(காந்தி ஐயா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகோற்சவ கால நவசந்தி வழிபாடு

ஆலயங்களில் நடைபெற்று வரும் நித்திய, நைமித்திய வழிபாடுகளில் மகோற்சவ காலங்களில் நடைபெறும் வழிபாடுகள் தனித்துவமும், சிறப்பும் வாய்ந்தவை. இவற்றுள் முக்கியமானது கொடியேற்ற உற்சவம். ஒவ்வொரு விசேட உற்சவங்களிலும் (திருவிழாக்கள்) சமயத் தத்துவங்களும், புராண வரலாறுகளும் அடங்கியுள்ளன. மகோற்சவ காலங்களில் ஆலயத்தில் திம்பமாயுள்ள மூலமூர்த்தியை கும்பத்திலும், ஸ்தம்பத்திலும் ஆவாகனம் செய்து வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

பதி, பசு, பாசம் எனப்படும் இறைவன், ஆன்மா, பற்றுக்கள் என்னும் மூன்றினையும் உணர்த்துவது மகோற்சவக் கொடிஸ்தம்பம். மந்திரபூர்வமான கிரியைகளினால் ஸ்தம்பம் இறைவனாகப் பாவனை செய்யப்படுகின்றது. சகலபோகங்களையும் அனுபவிக்கும் ஆன்மாவாகப் பாவனை செய்யப்படுவது கொடிச்சீலை. அந்த ஆன்மாவை விடாமல் பற்றி நிற்கும் பாசமாகப் (பற்றுக்கள்) பாவனை செய்யப்படுவது தர்ப்பைக் கயிறு. இந்தத் தத்துவத்தை விளக்குவது மகோற்சவகாலக் கொடிஸ்தம்பம். இறைவனை ஆன்மா சார்ந்திருக்க விரும்புகின்றது. இந்த ஆன்மாவை விடாமல் பற்றித் தொடருகின்றது பாசம். ஆகம சாஸ்திரங்களில் வேறு தத்துவ விளக்கங்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இவ்வாறே மூலமூர்த்தி யாகசாலையிலுள்ள கும்பத்தில் ஆவாகனம் செய்யப்பட்டு, திம்பம், கும்பம், ஸ்தம்பம் ஆகிய மூன்று இடங்களிலும் பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. மூலமூர்த்திக்கும், கும்பத்துக்கும், ஸ்தம்பத்துக்கும் மந்திரபூர்வமாக செய்யப்படும் யாகாதி கிரியைகளினாலும், பூசைகளினாலும் பிரவாகிக்கும் தெய்வீகப் பிரபையோடும், அருளோடும் உற்சவமூர்த்தியானது சகல ஆன்மாக்களுக்கும் அருள்பாலிக்கத் திருவுளங்கொண்டு திருவுலாவுக்கு எழுந்தருளுகின்றார். இதனை நாம் திருவிழா என்கிறோம். திரு உலா என்பது திருவிழாவாக மருவி வழங்கி வருகின்றது.

அரசனொருவன் திக்விஜயத்துக்கு வரும்போது அங்கேயுள்ள சிற்றரசர்கள், மந்திரிகள், பிரதானிகள், சேனைத் தலைவர்கள், காவலர்கள் யாவரும் தத்தமது கடமைகளைச் சரிவரச் செய்து அரசனை வரவேற்கப் பணியாற்றுவது போல ராஜதிரிவிக்கிரமனாகிய இறைவனுடைய திருவிழாவுக்குப் பணிபுரியக் காத்துநிற்கும் பிரம்மா முதல் ஈசானன் ஈறாகவுள்ள அதிகார தேவர்களுக்கும், இறைவனுக்கும் பிரீதியுண்டாகும்படியாக நடைபெறும் சுற்றுப்பலிப்பூஜை வழிபாடுகளை நவசந்தி வழிபாடு என்பர். வேத ஆகமங்களையும், தமிழ் வேதத்தையும் அனுசரித்துச் செய்யப்படும் நவசந்தி வழிபாட்டினை 'அகோரசிவாச்சாரியார் பத்ததி" விளக்கிக் கூறுகின்றது. எல்லா ஆலயங்களும் இந்த பத்ததியைக் கடைப்பிடித்து வருகின்றன. கிழக்கு நோக்கிய ஆலயங்களுக்கு இது அப்படியே பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோவில் வடக்கு நோக்கிய ஆலயமாதலால் திசைமாற்றத்திற்கேற்ப சுற்றுப்பலிப் பூஜையாகிய நவசந்தி வழிபாடுகளைச் செய்ய வேண்டியிருக்கின்றது. பூகோளரீதியில் திசைகள் மாற்றமடையாது அமைந்திருப்பதால் அந்தந்த திசைக்குரிய அதிகாரத் தேவுகளுக்கும் உற்சவ மூர்த்திக்கும் பொருந்தும் வகையில் பத்ததிகளில் கூறப்பட்டுள்ளபடி பூஜை வழிபாடுகள் செய்து வேதமும், பண்களும் ஓதப்பட்டு, நிருத்த, கீத, வாத்தியங்கள் நிகழ்த்தப்படவேண்டும். ஆதலால் திருக்கோணமலை முத்துக்குமாரசுவாமி கோயிலுக்குரிய நவசந்தி முறைகளையும், பண்களையும் முறைப்படுத்தி இங்கே தரப்பட்டிருக்கின்றது.

அகோரசிவாச்சாரியார் பத்ததியிற் கூறப்பட்டுள்ளபடியே ஸ்தம்பத்தில் பாடவேண்டிய பண்களையும் ஏனைய சந்தியில் பாடவேண்டிய பண்களையும் தந்து அவ்வப் பண்களிற்கு ஓதவேண்டிய தேவாரங்கள் மூன்றினை எடுத்துக் காட்டாக இங்கே தரப்பட்டிருக்கின்றது. திருமுறைகளைப் பயில ஆர்வமுள்ளவர்களுக்கும் இது உபயோகமாயிருக்கும். நவசந்திகளில் தேவாரங்களை விண்ணப்பம் செய்ய விரும்பும் அன்பர்கள் அடங்கன் முறையிலிருந்து உரிய பண்களுக்குத் தாம் விரும்பும் வேறு தேவாரங்களையும் தெரிந்தெடுத்து ஓதலாம்.

**சைவப்புலவர் பண்டிதர்.இ.வடிவேலு**

**குறிப்பு:-** முருகன் ஆலயத்தில் கொடித்தம்பத்தில் கணபதி தாளம் - பண் - தக்கராகம், மயூரதாளம் - பண்- இந்தளம் என்னும் இரண்டுமே பாடவேண்டும்.

**நவசந்திகளில் பாடவேண்டிய பண்கள்**

**திருச்சிற்றம்பலம்**

**கொடிஸ்தம்பம் - கணபதி தாளம் பண்: தக்கராகம் (காம்போதி)**

01. மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக்காவுளான்
சடையும் பிறையும் சாம்பற் பூச்சும் கீழ்
உடையும் கொண்ட உருவம் என்கொலோ.

(சம்பந்தர்)

02. பூவார் கொன்றைப் புரிபுன் சடையீசா
காவாயென நின்று ஏத்தும் காழியார்
மேவார்புரம் மூன்று அட்டார் அவர்போலும்
பாவார் இன்சொல் பயிலும் பரமரே.

(சம்பந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்சடை சுற்றி முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடம் சூழ
அவரிடமும் பலி தேர்வார்
அணிவளர் கோலமெல்லாம் செய்து பாச்சிலாச்
சிராமத்து உறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர் மாண்பே. (சம்பந்தர்)

**கொடிஸ்தம்பம் - ரிஸபதாளம் அல்லது** **பண்- காந்தார பஞ்சமம்**

**மூஷிக தாளம்** **(கேதாரகௌரி)**

01. துஞ்சலும் துஞ்சலில்லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகமற்று அடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே. (சம்பந்தர்)

02. இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமாறு ஈவதொன்றெமக்கு இல்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை (சம்பந்தர்)

03. ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர்
அந்தணர் பிரியாத சிற்றம்பலம்
நாடினாயிடமாய் நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய் மறையொடு பல் கீதமும்
பல்சடைப் பனி கால் கதிர் வெண்திங்கள்
சூடினாய் அருளாய் சுருங்க எம் தொல்வினையே.

(சம்பந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொடிஸ்தம்பம் - சிம்மதாளம் பண் - நட்டபாடை (கம்பீரநாட்டை)**

01. வண்டார் குழல் அரிவையொடும் பிரியாவகை பாகம்
பெண்தான் மிக ஆனால் பிறைச் சென்னிப் பெருமானூர்
தண்டாமரை மலராளுறை தவளம் நெடு மாடம்
விண்தாங்குவ போலும் மிகு வேணுபுரம் அதுவே. (சம்பந்தர்)

02. பண்ணும் பதமேழும் பல ஓசைத் தமிழ் அவையும்
உள் நின்றதோர் சுவையும் உறு தாளத்தொலி பலவும்
மண்ணும் புனல் உயிரும் வரு காற்றும் சுடர் மூன்றும்
விண்ணும் முழுதானானிடம் வீழிம் மிழலையேன். (சம்பந்தர்)

03. அங்கமும் வேதமும் ஓதும் நாவார்
அந் தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாட வீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாா்
செங்கயலார் புனல் செல்வ மல்கும்
சீர்கொள் செங்காட்டம் குடியதனுள்
கங்குல் விளங்கெரி ஏந்தி ஆடும்
கணபதீச்சரம் காமுறவே. (சம்பந்தர்)

**கொடிஸ்தம்பம் - மயூரதாளம் பண் - இந்தளம் (மாயாமாளவகௌளை)**

01. ஏடுமலி கொன்றையர இந்து இளவன்னி
மாடவல செஞ்சடையெம் மைந்தனிடம் என்பார்
கோடுமலி ஞாழல் குரவேறு சுரபுன்னை
நாடுமலி வாசமது வீசிய நள்ளாறே.

(சம்பந்தர்)

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணை தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்
அத்தா உனக்காளாயின் அல்லேன் எனலாமே. (சுந்தரர்)

02. ஓதியாரும் அறிவாரில்லை ஓதி உலகெலாம்
சோதியாய் நிறைந்தான் சுடர்ச் சோதியுள் சோதியான்
வேதியாகி விண்ணாகி மண்ணோடெறி காற்றுமாய்
ஆதியாகி நின்றானும் ஐயாறுடை ஐயனே. (சம்பந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவசந்திகள்

**பிரமசந்தி - ஸ்தானம் - வடக்கு மத்தி** **பண் - மேகரஞ்சனி (மேகராகக்குறிஞ்சி) (நீலாம்பரி)**

01. நீறு சேர்வதோர் மேனியர் நேரிழை
கூறு சேர்தோர் கோலமாய்ப்
பாறு சேர்தலைக் கையர் பராய்த்துறை
ஆறு சேர் சடை அண்ணலே. (சம்பந்தர்)

02. கருத்தன் கடவுள் கனலேந்தி ஆடும்
நிருத்தன் சடைமேல் நிரம்பா மதியன்
திருத்தமடையார் திருப்பறிய லூரில்
விருத்தன் எனத் ,தகும் வீரட்டததானே. (சம்பந்தர்)

03. ஆறாடு சடைமுடியன் அனலாடு
மலர்க் கையன் இமயப்பாவை
கூறாடு திருவுருவன் கூத்தாடும்
குணமுடையோன் குளிரும் கோயில்
சேறாடு செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு
சிவந்த வண்டு
வேறாய உருவாகிச் செவ்வழி நற்
பண்பாடும் மிழலையாமே. (சம்பந்தர்)

**குபேர சந்தி - ஸ்தானம் - வடக்கு பூர்வம் பண் - தக்கராகம் (காம்போதி)**

01. முந்தி நின்ற வினைகள் அவைபோக
சிந்தி நெஞ்சே சிவனார் திருப்புன் கூர்
அந்தம் இல்லா அடிகள் அவர் போலும்
கந்தம் மல்கு கமழ் புன்சடையாரே. (சம்பந்தர்)

02. வைத்தனன் தனக்கே தலையும் என்னாவும்
நெஞ்சமும் வஞ்சம் ஒன்றன்றி
உய்த்தனன் தனக்கே திருவடிக்கு அடிமை
உரைத்தக்கால் உவமனே ஒக்கும்
பைத்த பாம்பார்த்தோர் கோவணத் தோடு
பாச்சிலாச் சிரமத்தெம் பரமர்
பித்தரே ஒத்தார் நச்சிலர் ஆகில்
இவரலாது இல்லையோ பிரானார். (சுந்தரர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. மருவார் குழலி மாதோர் பாகமாய்த்
திருவார் செம்பொன் பள்ளி மேவிய
கருவார் கண்டத்து ஈசன் கழல்களை
மருவா தவர்மேல் மன்னும் பாவமே. (சம்பந்தர்)

**ஈசானசந்தி -ஸ்தானம் - வடகிழக்கு** **பண் - சாளரபாணி (சதாரி) (பந்துவராகி)**

01. மருந்தவை மந்திரம் மறுமை நன்னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடும் அவர்நாமமே சிந்தைசெய் நன்னெஞ்சே
பொருந்து தண் புறவினில் கொன்றை பொன்சொரிதர துன்றுபைம்பூம்
செருந்தி செம்பொன் மலர் திருநெல்வேலியுறை செல்வர்தாமே.
(சம்பந்தர்)

02. எந்தமது சிந்தை பிரியாத பெருமானென
இறைஞ்சி இமையோர்
வந்து துதி செய்ய வளர் தூபமொடு
தீபமலி வாய்மை அதனால்
அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள்
செய்ய அமர்கின்ற அழகன்
கந்தமலி குந்தள நன்மாதினொடு
மேவுபதி சண்பை நகரே. (சம்பந்தர்)

03. வேயனைய தோளுமையோர் பாகமது வாக
விடையேறி சடைமேல்
தூயமதி சூடி சுடுகாட்டில் நடமாடி
மலைதன்னை வினவில்
வாய் கலசமாக வழிபாடு செய்யும் வேடன்
மலராகு நயனம்
காய் கணையினால் இடந்து ஈசனடி கூடு
காளத்தி மலையே. (சம்பந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்திர சந்தி - ஸ்தானம் - கிழக்கு பண் - காந்தாரம் (நவரோஜ்)**

01. பாடிளம் பூதத்தினானும் பவளச் செவ்வாய் வண்ணத்தானும்
கூடிள மென்முலையாளைக் கூடிய கோலத்தினானும்
ஓடிள வெண்பிறையானும் ஒளிதிகழ் சூலத்தினானும்
ஆடிளம் பாம்பசைத்தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே.

(நாவுக்கரசர்)

02. மாதர் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்
போதோடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாது சுவடுபடாமல் ஐயாற டைகின்ற போது
காதன் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்.

(நாவுக்கரசர்)

03. கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்து தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே.

(நாவுக்கரசர்)

**அக்கினிசந்தி - ஸ்தானம் - தென்கிழக்கு பண் - கொல்லி (நவரோஜ்)**

01. மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்ல.ஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

(சம்பந்தர்)

02. நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாது ஒருபோதும் இருந்தறியேன்
வஞ்சம் இதுவொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்துமிடீா
அஞ்சேலும் என்னீர் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே.

(அப்பர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. மருந்து வேண்டிலிவை மந்திரங்களிவை
புரிந்து கேட்கப்படும் புண்ணியங்களிவை
திருந்து தேவன் குடித் தேவர் தேவெய்திய
அருந்தவத்தோர் தொழும் அடிகள் வேடங்களே. (சம்பந்தர்)

**இமயசந்தி – ஸ்தானம் - தெற்கு பண் - கௌசிகம் (பைரவி)**

01. வீடலால வாயிலாய் விழுமியோர்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலி நீள் கடிமதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே (சம்பந்தர்)

02. வானைக்காவில் வெண்மதி மல்கு புல்கு வார்சடை
தேனைக்காவில் இன்மொழி தேவிபாகம் ஆயினான்
ஆனைக்காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க்கு ஏதும் ஏதமில்லையே. (சம்பந்தர்)

03. இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாமம் நமச்சிவாயவே (சம்பந்தர்)

**நிருசந்தி - ஸ்தானம் - தென்மேற்கு பண் - நட்டபாடை(கம்பீரநாட்டை)**

01. உண்ணாமலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித் திரள் மழலை முழவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவாவண்ணம் அறுமே. (சம்பந்தர்)

02. நத்தார்படை ஞானன்பசு ஏறின்னனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார் எலும் பணிவான் திருக் கேதீஸ்வரத்தானே. (சம்பந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. கொன்றுசெய்த கொடுமையாற் பலசொல்லவே
நின்றபாவம் வினைகள் தாம் பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்
கன்றினோடு பிடிசூழ் தண் கழுக்குன்றே. (சுந்தரர்)

**வருணசந்தி - ஸ்தானம் - மேற்கு பண்- சீகாமரம் (நாதநாம்க்ரியா)**

01. கண்காட்டும் நுதலானும் கனல்காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டும் கொடியானே. (சம்பந்தர்)

02. கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாக
பாதத்தை தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே. (சம்பந்தர்)

03. பிழையுள்ளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலம் என்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயிலுள்ளாயோ என்ன
உழையுடையாய் உள்ளிருந்து உள்ளோம் போகீர் என்றானே.
(சுந்தரர்)

**வாயுசந்தி - ஸ்தானம் - வடமேற்கு பண் - தக்கேசி (காம்போதி)**

01. ஞானத் திரளாய் நின்ற பெருமான் நல்ல அடியார்மேல்
ஊனத் திரளை நீக்கும் அதுவும் உண்மைப் பொருள்போலும்
ஏனத்திரளோடு இளமான் கரடி இழியும் இரவின்கண்
ஆனைத்திரள் வந்து அணையும் சாரல் அண்ணாமலையாரே.
(சம்பந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. வானநாடனே வழித்துணை மருந்தே
மாசிலா மணியே மறைப்பொருளே
ஏனமா எயிறு ஆமையும்
ஈடுதாங்கிய மார்புடையானே
தேன் நெய் பால் தயிர் ஆட்டுகந்தானே
தேவனே திரு ஆவடுதுறையுள்
ஆனையே எனை அஞ்சலென்று அருளாய்
ஆர் எனக்குறவு அமரர்கள் ஏறே. (சுந்தரர்)

03. பூவார் மலர்கொண்டு அடியார் தொழுவார்
புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று
மூவர்க்கு அருள் செய்தார்
தூமாமழை நின்று அதிர வெருவித்
தொறுவின் நிரையோடு
ஆமான் பிணைவந்து அணையும் சாரல்
அண்ணாமலையாரே. (சம்பந்தர்)

**திருச்சிற்றம்பலம்**

## கொடிக்கவி

### (கொடியேற்றத்திற்கு ஆயத்தமானதும் பாடப்படுவது)

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே யிடம் ஒன்று மேலிடில் ஒன்று
ஒளிக்கும் எனினும் இருள் அடராதுள் ளுயிர்க்குயிராம்
தெளிக்கும் அறிவு திகழ்ந்துள்ள தேனுந் திரிமலத்தே
குளிக்கும் உயிர் அருள் கூடும் படி கொடி கட்டினனே.

பொருளாம் பொருளேது போதேது கண்ணேது
இருளாம் வெளியேது இரவேது – அருளாளா
நீபுரவா வையமெல்லாம் நீ அறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி.

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா துணர்வரிய தன்மையனை – நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கும் அருள் நல்கக் கொடி

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக்கொடி

- உமாபதி சிவாச்சாரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ முத்துக்குமார சுவாமி திருப்பள்ளியெழுச்சி

ராகம் : பூபாளம்

01. பார் எங்கும் பானுவின் பொன்னொளி பரவியதே
ஆர்வமுடன் அலைகளும் அஞ்சலி செய்தனவே
கூர்இருளும் விலகியதே குருகுகளும் இயம்பினவே
ஊர்எல்லாம் உய்ந்திட முத்துக்குமார கண்மலர்வாய்

02. அருணனின் வரவுகண்டு அம்புஜங்கள் மலர்ந்தனவே
கருமை விலகியது காசினியும் விழிந்ததுவே
கருவண்டு துதிபாட கானக்குயில் கூவினவே
அருமை நிறைந்த அழகேதிருக் கண்மலர்வாய்

03. செங்கதிரோன் செவ்வொளியில் சிவந்தது மலைமுகடு
கங்குல் அகன்றிட கவின்மலர்கள் கண்விழிக்க
தெங்கம் பொழில்சூழ் திருக்கோண மலையுறையும்
கங்கை சுமந்த கனலேதிருக் கண்மலர்வாய்

04. வங்கம் மலிகடலில் வரிசங்கம் நின்றூத
மங்கலமேளம் நாதஸ்வரம் குழல்யாழும் ஒலித்தனவே
பங்கஜப்பத மலர்கள் காண பக்தரும் கூடினரே
அங்கயற்கண்ணி அருந்தவமே திருப்பள்ளி எழுந்தருளாயே

05. வெண்மல்லி மருக்கொழுந்து பவளமல்லி சண்பகமென
எண்ணிலா மலர்வகைகள் எங்கும் நிறைந்தனவே
வெண்ணீறும் பன்னீரும் சந்தனமும் சவ்வாதும்
எண்ணிலா நறும்பொருட்கள் வந்தனவே திருப்பள்ளிஎழுக

06. வற்றாத மாவலியாள் மாணிக்கமணி விளக்கேற்றி
வெற்பதாங் கோகர்ணம் வலம்வந்து வாயில் நின்று
பற்றகல நின்பதம் பரவி நிற்கின்றாள்
செற்றார் திறலழிக்கும் செவ்வேளே திருப்பள்ளிஎழுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. வண்டாார் குழலியர் நின்வாயில் கோலமிட்டார்
கண்டார் வியந்திடக் கவின்தொடையல் கொண்டுவந்தார்
பண்டாரமே! பழத்திற்கு பாரெல்லாம் பவனி வந்த
தண்டாயுதனே! தவமே திருப்பள்ளி எழுவாய்

8. நெய்தல் மருதங் குறிஞ்சிமுல்லை பாலையென
ஐவகை நிலமும் அமைவாக வீற்றிருந்தழகு
செய்யும் திருக்கோண மலைமேவு தமிழே
தெய்வானை வள்ளிலோலா திருப்பள்ளி எழுவாய்

9. அந்தரத்தோரும் நின்சுந்தர முகமலர் கண்டுய்ய
வந்தனர் பல்வகை வரிசைகளுஞ் சுமந்து
கந்தங் கமழும் பூஞ்கோலைவளர் கதிரே
மந்தகாச முகமாறும் ஒளிபெறவே கண்மலர்வாய்

10. உருவாகி அருவாகி அருவுருவுமான அறிவே
மருவினிய தேவியர் மனங்களிக்கும் மயில்வீரா
குருவாகி அருணகிரி குறைதீர்த்த குகனே
அருள் பொழியும் அறுமுகனே கண்மலர்வாய்

11. மலைமுகட்டில் முகில்கள்கூட மழையென மயில்களாட
அலைகளும் முழவுகொட்ட அம்புஜம் அகலேந்த
மலைவீடு பலகொண்ட மால்மருகா முருகா
கலையாவும் பயிற்றுங் கந்தாதிருப் பள்ளிஎழுவாய்

12. வேதியர் சுப்பிரபாதஞ்சொல்ல விருப்பொடு அடியவர்
ஏதிலாநின் புகழ் இன்தமிழில் எடுத்தியம்ப
சோதியே சுடரே சொக்கேசர் புதல்வா
கோதிலா வள்ளிகுஞ்சரியோடும் திருப்பள்ளி எழுவாய்

செல்வி. மணிமேகலாதேவி கார்த்திகேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்
## திருச்சிற்றம்பலம்
## தேவாரம்

திருஞானசம்பந்தர்

பண்: புறநீர்மை

ராகம்: பூபாளம்

நிரைகழ லரவம் சிலம்பொலி யலம்பு
நிமலர் நீறணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு
மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடலோத நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

## திருவாசகம்

மாணிக்கவாசகர்

பண்:முல்லை
ராகம்: மோகனம்

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடு உனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே.

## திருவிசைப்பா

கருவூர்த்தேவர்

பண்: பஞ்சமம்
ராகம்: ஆஹிரி

என்னையுன் பாத பங்கயம் பணிவித்து
என்பெலாம் உருக நீ எளிவந்து
உன்னையென்பால் வைத்து எங்கும் எஞ்ஞான்றும்
ஒழிவற நிறைந்த ஒண்சுடரே
முன்னையென் பாசம் முழுவதும் அகல
முகத்தலை அகத்தமர்ந் தெனக்கே
கன்னலும் பாலும் தேனும் ஆரமுதும்
கனியுமாய் இனிமையாயினையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சேந்தனார்

பண்: பஞ்சமம்
ராகம்: ஆஹிரி

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழலொலி விண்ணளவும் சென்று விம்மி
மிகு திருவாரூரின்
மழவிடையார்க்கு வழிவழி ஆளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடியாரொடும் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சேக்கிழார்

பண்: செந்துருத்தி
ராகம்: மத்தியமாவதி

அந்நகரில் அமர்ந்தகண் இனிது மேவி
ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழம் தன்னில்
மன்னு **திருக்கோணமலை** மகிழ்ந்த செங்கண்
மழவிடையார் தமைப் போற்றி வணங்கிப் பாடிச்
சென்மதி புனைமாட மாதோட்டத்தில்
**திருக்கேதீச்சரத்து** அண்ணல் செய்ய பாதம்
உன்னிமிகப் பணிந்தேத்தி அன்ப ரோடும்
உலவாத கிழிபெற்றார் உவகை யுற்றார்.

கச்சியப்ப சுவாமிகள்

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன்மா மயிலாய் போற்றி
முன்னிய கருணை ஆறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக் கருணை வாரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள் இருக்கு மாமணியே போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

அருணகிரிநாதர்

விலைக்கு மேனியி லணிக்கோவை மேகலை
தரித்த ஆடையு மணிப்பூணு மாகவெ
மினுக்கு மாதர்க ளிடக்காம மூழ்கியே மயலூறி
மிகுந்த காமிய னெனப்பாரு ளோரெதிர்
நகைக்க வேயுட வெடுத்தேவி யாகுல
வெறுப்ப தாகியே உழைத்தேவி டாய்படு கொடியேனைக்
கலக்க மாகவே மலக் கூடி லேமிகு
பிணிக் குளாகியே தவிக்காம லேயுணை
கவிக்குளாய் சொலிக்கடைத் தேற வேசெய்யும் ஒருவாழ்வே.

கதிக்கு நாயக உனைத்தேடியே புகழ்
உரைக்கு நாயெனை அருட்பார்வை யாகவே
கழற்கு ளாகவே சிறப்பானதாயருள் தர வேணும்;
மலைக்கு நாயக சிவக்காமி நாயகர்
திருக்குமாரென முகத்தாறு தேசிக
வடிப்பமாதொரு குறப்பாவை யாள்மகிழ் தருவேளே –
வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்திய மாமுனி இடைக்காடர் கீரனும்
வகுத்த பாவுறு பொருட்கோல மாய்வரு முருகோனே;

நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
**திருக்கொ ணாமலை** தலத்தாறு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிபாடு பூதியில் வருவோனே –
நிகழ்த்து மேழ்பவ கடற்சூறை யாகவே
யெடுத்த வேல்கொடு பொடித்தூள தாயெறி
நினைத்த காரிய மனுக்கூல மேபுரி பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

## வாழ்த்து

மல்குக வேத வேள்வி
வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்களெங்கும்
பரவுக அறங்களின்பம்
நல்குக உயிர்கட்கெல்லாம்
நான்மறைச் சைவமோங்கி
புல்குக உலகமெலாம்
புரவலன் செங்கோல் வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை முத்துக்குமாரசுவாமி
திருப் பொன்னூஞ்சல்

ஆக்கியோன்:

திரு. த. சரவணமுத்துப்பிள்ளை அவர்கள்

காப்பு

விரிகடல்சூழ் தென்னிலங்கைக் கரையின் மேய
வீங்குபுகழ் திருக்கோணா சலத்தில் வாழும்
கரியவனும் நான்முகனும் தேடிக் காணா
கண்ணுதலோன் திரு முத்துக் குமாரன் மீது
பெருமகிழ்லி லன்புமிகுந் தூஞ்சல் பாடப்
பேணுபவர்க் கருளுஞ் சுரந்தே துன்பம் நீக்குங்
கரடமத கரிமுகங் கொண்டுள்ள வெங்கள்
கணபதிதன் இரு சரணங் காப்பதாமே.

சீர்பூத்த திருமணி மண்டபத்தினூடே
செம்பவளக் கால் முத்தங் கயிறதாக
ஏர்பூத்த வயிரமணிப் பலகை பூட்டி
இருபுறமும் தேவியர்கள் இனிது மேவப்
பார்பூத்த பல்லுயிரு மினிது வாழ
மண்ணவரும் விண்ணவரும் பாடி யாடக்
சூர்பூத்த வேல்கொடு வெஞ் சூர்முற் கீண்ட
கோணைமுத்துக் குமாரரே ஆடீரூஞ்சல்.

சோதி நவரத்தினமணி மகுடமின்னச்
சுடர்கொள் நவமணிக் குழைகள் துலங்கி மின்ன
ஏதமிலா வன்பர்களுக் கின்பமூட்டும்
இலங்கிலை வேலொன்கரத்தி லினிது மேலும்
பீதகப் பன் மணிகளொடு மதாணி யாடப்
பேணுபவர் முகமதனிற் களிநின்றாடக்
கோதை பசும் பட்டினுடன் பாங்கராடக்
கோணைமுத்துக் குமாரரே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்டரளக் கவிகை நிழல் பரந்து மேவ
மெல்லியலார் இருமருங்குங் கவரி வீசத்
தண்டளவத் தாமநறு வாசம் வீசத்
தகைமை செறி மறைவர்கள் வேத மோதப்
பண்டமுவி மாகதர்கள் கீதம் பாடப்
பரத நாட்டியமாதர் நடன மாடக்
கொண்டறவழ் நறைமலர்ப் பூஞ்சோலை சூழ்ந்த
கோணைமுத்துக் குமாரரே ஆடீரூஞ்சல்.

திருமருவு திருக் கோணமலையில் வாழும்
சீரியநற் சண்முகமாஞ் செல்வப் பேரோன்
தருமமெனுந் துறையினிறை பொருளிறைக்குந்
தயாளகுண னியற்று திருக் கோயில் தன்னில்
பரவையெழு மோதையென அன்பரார்ப்பப்
பார்த்தவர்கள் கண்களித்துமன மகிழ்ச்சிகூர
குருவுமருவு சம்பந்தர் பதிகம் பெற்ற
கோணைமுத்துக் குமாரரே ஆடீரூஞ்சல்.

மரபுநெறி தவறாத மறையோர் மற்றோர்
மாதர்களும் மக்களும் மனமகிழ்ந்து நோக்க
கருமைசெறி யவர்விழி கண் மனத்தினோடுங்
கனகமணி சந்நிதிமுன் ஊஞ்சலாட
முருகவிழ் பூங் கழற்றேவி மார்கள் நோக்க
முகமதனில் புன்முறுவல் கனிந்து தோன்ற
குரைகடல் சூழ் ஈழவள நாட்டின் மேய
கோணைமுத்துக் குமாரரே ஆடீரூஞ்சல்.

மங்குல் படி சிகரநெடு மியம மாது
மறைநாலுந் தேடரிய கடவுள் தாமுந்
தங்குமெழிற் றுணைவியரோடு ஊஞ்சல் மீது
தனையனெழுந் தருளுமியல் மகிழ்ந்து நோக்கப்
பொங்குமதக் கரிமுகத்தோன் புளகமெய்தப்
புரந்தரனும் மாலயனும் போற்றி நிற்கக்
கொங்குலவு மிந்தத் தண்தாமத் திண்தோள்
கோணைமுத்துக் குமாரரே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தணமுஞ் சண்பகமு மடர்ந்தே யோங்குந்
தண்பொதியக் குறுமுனிக்குத் தமிழை யோதிக்
கந்தமெறி சோலைவளர் பழனி மேய
கருணைசெறி யறுமுகவா ஆடீரூஞ்சல்
பந்தமற உனையேத்தும் முனிவர் விண்ணோர்
பார்வாழச் சிங்கமுகத் தவுணன் றன்னைக்
குந்தமொடு முன்றடிந்து வாகை பூண்ட
கோணைமுத்துக் குமாரரே ஆடீரூஞ்சல்.

திங்களொடு கங்கை நறுங் கொன்றை சூடுஞ்
செஞ்சடையோன் றன்புதல்வா ஆடீரூஞ்சல்
சங்கமொடு சக்கரமுந் தாங்கி நின்ற
சலசலோசனன் மருகா ஆடீருஞ்சல்
பொங்கு புகழ் வேதமொரு நான்குமோதும்
போதனைமுன் றளை புரிந்தோ ஆடீருங்சல்
குங்குமமுஞ் சந்தணமும் கமழும் மார்ப
கோணைமுத்துக் குமாரரே ஆடீரூஞ்சல்.

செம்பதுமை தருமருகா ஆடீரூஞ்சல்
சிவகாமி பாலகரே ஆடீரூஞ்சல்
அம்பவள மணிவாயா ஆடீரூஞ்சல்
அருள்சுரக்குந் திருமுகத்தோ ஆடீருஞ்சல்
வெம்பிறவி தீர்ப்பவரே ஆடீரூஞ்சல்
விமலை தெய்வயானையொடு ஆடீரூஞ்சல்
கும்பமுனிக் குரைகுருவே ஆடீரூஞ்சல்
கோணைமுத்துக் குமாரரே ஆடீரூஞ்சல்.

ஆறுமுகத்தோடு கரமீராறும் வாழி
அசுரர்குலம் படப் பொருத வேலும் வாழி
வீறுகொள் எண்திக்கினுஞ் செல் மயிலும் வாழி
விருது நின்று கூவிடுமஞ் சேவல் வாழி
பேறுதரு மஞ்செழுத்து நீறும் வாழி
பெட்புலவு சடாட்சரமும் மறையும் வாழி
கூறு பெருமித வடிவா என்றும் வாழி
கோணைமுத்துக் குமாரரே வாழி வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணமலை புகழ் பரப்பி வாழி வாழி
கொள நல்ல பக்தி நெறி வாழி வாழி
ஞாலமெங்குஞ் சிறந்தோங்க வாழி வாழி
வடிவேலா முத்துக் குமரா வாழி வாழி
கானமயில் கொண்டவரே வாழி வாழி
பார்வதியின் பாலகனே வாழி வாழி
கோணைமுத்துக் குமாரரே வாழி வாழி
குறவள்ளி தெய்வானையுடன் வாழி வாழி

திருக்கோணமலை

# ஸ்ரீமுத்துக்குமார சுவாமி

**எச்சரிக்கை, பராக்கு, லாலி, மங்களம்**

## எச்சரிக்கை

01. அருவாய் அருவுருவாய் அருளுருவாய் வருமுருகா
திருமால் தரு மருகா முத்துக்குமரா எச்சரிக்கை

02. ஆதி யந்தமில்லாப் பரஞ் சோதி சிவனாரின்
ஆதி சக்தியான அறு முகவா எச்சரிக்கை

03. இகபோகமும் பரபோகமும் ஈவாய் எச்சரிக்கை
அகமேவினின் றாளும் அறுமுகவா எச்சரிக்கை

04. ஈடேறவே அடியார்க்கருள் ஈவாய் எச்சரிக்கை
பாடல்பெறு கோணைமுத்துக் குமரா எச்சரிக்கை

05. உன்பாதமே தஞ்சமென்று உருகும் அடியாரைக்
கண்பார்த்தருள் செய்யும் கந்த சுவாமி எச்சரிக்கை

06. ஊனாய் உயிர்க் குயிராய் உம்பர் கோனாகியுயர்ந்த
கோணேசம் மேவும் முத்துக் குமரா எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராக்கு

01. அருள்பெருகு முத்துக் குமரா பராக்கு
ஆனைமுகவற் கிளைய அரனே பராக்கு

02. வரமருளு வள்ளிமண வாளா பராக்கு
வந்தனைசெய் யடியார்துயர் தீர்ப்பாய் பராக்கு

03. அவுணர் குலம் அழிய வேல் விடுவாய் பராக்கு
ஆடுமயில் ஏறும் அறுமுகவா பராக்கு

04. சங்கரனுக் குபதேசம் அருள்வாய் பராக்கு
சங்கரியின் மைந்தனே குகனே பராக்கு

05. குன்றுதோ றாடிவரு குமரா பராக்கு
குறுமுனிக் கினிய தமிழ் கொடுத்தாய் பராக்கு

06. மங்கை தெய்வயானை மண மகிழ்வாய் பராக்கு
மால் மருக முருக சண்முகனே பராக்கு

## லாலி

01. லாலி லாலி லாலி லாலி லாலி
ஆலமுண்ட கண்ட சுத லாலி லாலி

02. ஆறுபடை வீடுடைய ஐயா லாலி
ஆறுமுக வேலவனே லாலி லாலி

03. சூரனுடல் கூறுபடச் செய்வாய் லாலி
சுத்த சத்துவப் பொருளே லாலி லாலி

04. வீர வடிவேல் முருகா லாலி லாலி
வெற்றி தரும் வித்தகனே லாலி லாலி

05. வள்ளி தெய்வயானை மணவாளா லாலி லாலி
அல்லல் களைந் தன்பர் துயர் தீர்ப்பாய் லாலி

06. கொள்ளை பகை நீறுபடச் செய்வாய் லாலி
கோணை முத்துக் குமாரரே லாலி லாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் ஜெய ஜெய
மங்களம் மங்களம்

01. கார்த்திகைப் பெண்களறுவர் கொங்கையமு துண்டுவளர்
கீர்த்திமிகு கார்த்திகேய மூர்த்தியுமை பாலகர்க்கு (மங்)

02. விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் வேதமோதும் வேதியர்க்கும்
கண்ணின்மணி யாயிருந்து கருணைபொழி கந்தனுக்கு (மங்)

03. சரவணத்துள்ளே வளர்ந்து சராசரத்துள்ளே நிறைந்து
அரன்தனக்கும் அயன்தனக்கும் அரும்பொருளுரைத்தவற்கு (மங்)

04. கோணைமுத்துக் குமரனடி கூடும் அடியார் தமக்கும்
தேனினு மினிய தமிழ்த் தெய்வ அடித் தாசருக்கும் (மங்)

**ஆக்கியோன்**
**ஞானசிரோன்மணி, பண்டிதர் இ.வடிவேல்**

## ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி கீர்த்தனை

**ராகம் - சிந்து பைரவி** **தாளம் - ஆதி**

பல்லவி

தங்கவேல் வெள்ளிமயில் சிவலிங்கம் கருவறையில்
தகைமையுடன் இணைந்திருக்கும் திருக்கோவிலொன்று கண்டேன் (தங்க)

அனுபல்லவி

வங்கமலி துறைவிளங்கும் திருக்கோண மலைப்பதியில்
வள்ளிதெய்வ யானைநாதன் முத்துகுமரன் கோவில்தானே (தங்க)

சரணம்

திங்கள்சூடி கனவில் வந்து செப்பியபடி சண்முகனார்
திருக்கோவில் அமைவிடமும் திரவியமும் கண்டறிந்து
மங்களமாய் வேல்மயில்லிங்கம் மாண்புடனே கருவறை வைத்து
மகாகும்பாபி டேகஞ்செய்து மக்கள்வணங்க வழிசெய்தாரே
சிங்காரமாய் அமைந்த ஸ்ரீ முத்துக்குமரன் கோவிற்பணி
சிறப்பாகத் தொடர்கின்றார் சண்முகபிள்ளை சந்ததியார் (தங்க)

**ஆக்கம்**
**செல்வி.மணிமேகலாதேவி கார்த்திகேசு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

திருச்சிற்றம்பலம்

01. முத்து நற்தாமம் பூமாலை தூக்கி
முளைக்குடம் தூபம் நற்தீபம் வைம்மின்
சக்தியும் சோமியும் பார்மகளும்
நாமகளோடு பல்லாண்டு இசைமின்
சித்தியும் கௌரியும் பார்வதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே.

02. பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற் திருச்சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகிரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம் நிலாமே
குனிமின் தொழுமின் எங்கோன் எங்கூத்தன்
தேவியும் தானும் வந்து எம்மை ஆளச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்து நாமே.

03. சுந்தர நீறணிந்தும் மெழுகித்
தூய பொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன் நல் வேலன் தாதை
எந்தரம் ஆள் உமையாள் கொழுநற்கு
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்து நாமே

04. காசணி மின்கள் உலக்கை எல்லாம்
காம்பணி மின்கள் கறை உரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசம் எல்லாம் புகழ்ந்தாடும் கச்சித்
திருவேகம்பன் செம்பொற் கோயில் பாடி
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்து நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. அறுகெடுப்பார் அயனும் அரியும்
அன்றி மற்று இந்திரனோடு அமரர்
நறுமுறு தேவர் கணங்கள் எல்லாம்
நம்மிற் பின்பல்லது எடுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம்பன் செம்பொற் கோயில் பாடி
முறுவல் செய் வாயினீர்முக்கணப்பற்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே.

06. உலக்கை பல ஓச்சுவார் பெரியோர்
உலகமெலாம் உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்து நாமே.

07. சூடகம் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்ப
தொண்டர் குழாம் எழுந்து ஆர்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடகமாமலை அன்ன கோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே.

08. வாள்தடங்கண் மடமங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்ப வன் கொங்கை பொங்கத்
தோள் திருமுண்டம் துதைந்திலங்கச்
சோத்தெம் பிரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண் மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யென்னும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே.

10. முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆட
சித்தம் சிவனொடும் ஆட ஆட
செங்கயற் கண்பனி ஆட ஆட
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொடு ஆட ஆட
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே.

11. மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந்து அம்பவளம் துடிப்ப
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெருமானைத் தேடிச்
சித்தம் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத்து ஆடினானுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே.

12. மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண்டு அருமை காட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித் தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்து நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. மின்னிடைச் செந்துவர் வாய்க் கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன் எம்ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே.

14. சங்கம் அரற்ற சிலம்பு ஒலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயிதழும் துடிப்பச்
சேயிழையீர் சிவலோகம் பாடிக்
கங்கை இரைப்ப அரா இரைக்கும்
கற்றைச் சடைமுடியான் கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச்சுண்ணம் இடித்து நாமே.

15. ஞானக் கரும்பின் தெளிவை பாகை
நாடற்கு அரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத்தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும்பேற வாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்து நாமே.

16. ஆவகை நாமும் வந்து அன்பர் தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலும் கண்டறியாச்
செம்மலர்ப பாதங்கள் காட்டும் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெருமான் புரம் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்து நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை ஏந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனகமான நஞ்சுண்டல் பாடிப்
பொற்திருச் சுண்ணம் இடித்துநாமே.

18. அயன்தலை கொண்டு செண்டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்று உரிபோர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடி நின்றாடி ஆடி
நாதற்குச் சுண்ணம் இடித்து நாமே.

19. வட்ட மலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியமும் பாடிச்
சிட்டர்கள் வாழும் தென்தில்லை பாடிச்
சிற்றம்பலத்து எங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கை மேல்
இட்டு நின்றாடும் அரவம் பாடி
ஈசற்கு சுண்ணம் இடித்து நாமே.

20. வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்
சோதியுமாய் இருள் ஆயினார்க்குத்
துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்கு
பாதியுமாய் முற்றும் ஆயினார்க்கு
பந்தமுமாய் வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமுமாய் ஆயினார்க்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே.

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசக சுவாமிகள்
(திருவாசகப் பகுதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்ச் சிந்து

சித்திர தேரில் வரும் முத்துக் குமாரனே
பக்தரைக் காக்க வந்தருள் - குமரனே
பக்தரைக் காக்க வந்தருள்
உத்தமி நாயகி வள்ளி தெய்வானையும்
பக்கமிருந்துனைப் பாடி மகிழ்ந்திட (சித்தி)

சிங்கார வேலனவன் சித்திரத் தேரிலே
செல்லும் பவணி காணுவோம் -தேரிலே
செல்லும் பவணி காணுவோம்
சங்கரன் நாரணன் ஐங்கர நாயகன்
இங்கிதமாவே கண்டு மகிழ்ந்திட (சித்தி)

சந்திர சூரியரும் வந்து வணங்கிட
கந்தனே தேரில் ஏறிவா – கருணைக்
கந்தனே தேரில் ஏறிவா
சந்தத முன்னடி வந்து வணங்கிடும்
உந்தனடியவர் கண்டு துதித்திட (சித்தி)

தேவாரப் பாடல்பெற்ற திருக்கோண மாமலையில்
மேவும் குமரா தெய்வமே – திருமலை
மேவும் குமரா தெய்வமே
பாமாலை பாடியும் பூமாலை சூடியும்
நவாரச் சேவிக்கும் நல்லடியார் தொழ (சித்தி)

பாரினில் கேடெல்லாம் வேரோடழிந்திட
தேரினில் ஏறி வந்தருள் - கந்தனே
தேரினில் ஏறி வந்தருள்
சூரனுடலற வாரி சுவறிட
வேலை விடவல்ல வீரவடிவேலா (சித்தி)

வண்ணப் பூந்தேரதனை வானவர் சூழ்ந்துவர
மண்ணினைக் காக்க வந்திட்டாய் -அறுமுகவா
மண்ணினைக் காக்க வந்திட்டாய்
பண்ணிய பாவங்கள் மண்ணிலழிந்திட
புண்ணியமோங்கிட புத்தொழி வீசிட (சித்தி)

ஆக்கம்

ஞானசிரோன்மணி, பண்டிதர் இ.வடிவேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகலகலாவல்லி மாலை

வெண்தாமரைக்கு அன்றி நின்பதம் தாங்களன் வெள்ளை உள்ளத்
தண்தாமாரைக்குத் தகாது கொலோ சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான்பித்தாக உண்டாகும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகலகலாவல்லியே !

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும்பணியில் பணித்து அருள்வாய் பங்கய ஆசனத்தில்
கூடும் பசும் பொற்கொடியே கனதனக் குன்றும் ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே சகலகலாவல்லியே !

அளிக்கும் செழுந்தமிழ் தெள் அமுது ஆர்ந்து உன் அருட் கடலில்
குளிக்கும் படிக்கு என்று கூடும் கொலோ உளம் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவல் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாபமயிலே சகலகலாவல்லியே !

தூக்கும் பனுவல் துறை தோய்ந்த கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்து அருள்வாய் வடநூல் கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணை கடலே சகலாவல்லியே !

பஞ்சப்பு இதம்தரும் செய்ய பொற்பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே நெடுந்தாள் கமலத்து
அஞ்சத் துவசம் உணர்ந்தோன் செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசு ஒத்திருந்தாய் சகலகலாவல்லியே !

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும் யான்
எண்ணும் பொழுதுஎளிது எய்தநல்காய் எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகலகலாவல்லியே !

பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின் கடைக்கண் நல்காய் உளம் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ் தீம்பால் அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ஓதிமப் பேடே சகலகலாவல்லியே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமும் அவதானமும் கவி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அடிமைகொள்வாய் நளின் ஆசனம் சேர்
செல்விக்கு அரிது என்று ஒருகாலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகலகலாவல்லியே!

சொற்கும் பொருட்கும் உயிராம் மெஞ்ஞானத்தின் தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலம் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு அரசு அன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே சகலகலாவல்லியே !

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட அளவில் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகலகலாவல்லியே !

- குமரகுருபர சுவாமிகள்

**ஆன்மீகத்தின் ஆரம்பம்**

உள்ளத்தில் தர்ம சிந்தனைகள், தூய சிந்தனைகள், உயர்ந்த சிந்தனைகள், நன்மைக்கு அழைத்துச் செல்லும் சிந்தனைகள், தெய்வீக சிந்தனைகள், அருள் சிந்தனைகள் இருப்பது தான் ஆன்மீக வாழ்க்கையின் ஆரம்பம் அல்லது முதல்படி எனலாம்.

-ஆதிசங்கரர் இயற்றிய விவேக சூடாமணி
367 ஆம் சுலோகம்.

கடவுள் என்பதன் பொருள் என்ன? உன்னுள் செல் என்பதாகும். என்னுள் சென்றால் உன்னையே நீ உணர்வாய். மெய்மை அறிவாய். மெய் என்பது மேனி. உடம்பு உண்மை என பொருள்படும்.

- முதுமொழி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருக்கோணமலை**

ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி கோவில்

ஸ்ரீசண்முகப் பெருமான்

திருவூஞ்சல்

ஆக்கியோன் - சைவப்புலவர், பண்டிதர்

**இ.வடிவேலு** அவர்கள்

காப்பு

சித்திதரும் புத்திதரும் சிக்கல் மலமறுத்து
முத்திதரும் முன்னை வினைமுடிக்கும் - நித்தநித்தம்
அத்திமுக னைந்துகரத் தண்ணல் அடியிணையில்
பக்தியுடனே பணியு மவர்க்கு.

01. அங்கமொரு வேதவொலி யதிருங் கோயில்
அணிமணி மண்டபத்திடையே அடியார் சூழச்
சங்கொலியும் மங்கலநல் இசையுமோங்கச்
சரவணபவா என மந்திரமும் ஓதித்
திங்களொடு கங்கைமுடி சேருஞ் சென்னிச்
சிவனார் தம் விழியிலுதித் துலகமுய்ய
அங்கையினில் வேலேந்தி மயூரமேறிக்
கோணையமர் சண்முகரே ஆடீரூஞ்சல்

02. நீபமலர் மாலைநிறை மார்பன் நெஞ்சில்
நீங்காத அழகுடைய தாள்கள் காட்டித்
தீபமென ஆறிரண்டு விழிகளோடு
திகழ்கின்ற பன்னிருகை தன்னில் வேலும்
தாபதர்கள் வலியழிக்கும் படைகள் தாங்கித்
தன்னிகரில்லாத பெரு வடிவங்காட்டி
மாபாதகச் சூரனுடல் கூறு செய்து
கோணையமர் சண்முகரே ஆடீரூஞ்சல்

03. இந்திரனும் சந்திரனும் இமையோர் தாமும்
ஏடவிழும் கந்தமலர் சிந்தி வாழ்த்த
மந்திர நூல் வேதமொடு கீதமோதி
மாதவரும் மாலொடு நான்முகனும் வாழ்த்த
அந்தர துந்துபி முழங்க அமரர் வாழ்த்த
அரம்பையர்கள் கூடி நடனமாடி வாழ்த்தக்
கந்தருவர் கானமகிழ் கார்த்திகேயா
கோணையமர் சண்முகரே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. அண்டமொரு ஆயிரத்தெட் டதனை ஆண்ட
அதிதீர சூரனொடு சிங்கனெனும்
மண்டலங்கள் நடுங்க அமர் செய்யும் மாய
மாவீரர் சேனைபல மடியச் செய்து
விண்டுவொடு இந்திரனும் விரிஞ்சன் தானும்
வேதியரும் மாதவரும் விண்ணோரெல்லாம்
கொண்ட பெரும் சிறைமீட்ட குமரவேளே
கோணையமர் சண்முகரே ஆடீரூஞ்சல்.

05. கூர்வேலெறிந்து சூர் உரமும் கீண்டிக்
கொற்றமொடு வீரவடி வேலுந்தாங்கிப்
போர்வேகம் அழிய வரும் சூரன்தன்னைப்
பொன்மயிலும் சேவலுமாய் ஏற்று நல்ல
கார்மேகக் குழற் தெய்வ யானையோடுங்
கனிமொழியாள் வள்ளி கடிமணமும் காட்டிச்
சீர்மேவும் அடியவர்க்கு அருளும் செவ்வேள்
கோணையமர் சண்முகரே ஆடீரூஞ்சல்.

06. வேதநெறி தழைத்தோங்க வித்தையோங்க
வேள்வியொடு விழவு நல்வினையும் ஓங்க
மாதவத்தோர் மனமோங்க மறையோர் ஓங்க
மைந்தர்களும் மங்கையரும் மகிழ்ந்து பொங்கப்
பூதலத்திற் பொன்னோங்கப் பொருளுமோங்கப்
புனிதமுறு சைவநெறி பொலிந்து பொங்க
ஏதமிலா அருளோங்க இன்பமோங்கக்
கோணயாமர் சண்முகரே ஆடீரூஞ்சல்.

07. கந்தம் மலியும் கடப்ப மாலையாடக்
கன்னியர்கள் இருமருங்கும் கவின்பெற்றாடச்
சுந்தரஞ்சேர் வைரமணிப் பூணுமாடச்
சொல்லரிய பொற்கலைகள் துளங்கியாடச்
சந்தணமும் குங்குமமும் தரித்த மேனி
தங்கமணி அணிகளொடு தழைந்தேயாடச்
செந்தமிழும் சிவநெறியும் சீர்பெற்றாடக்
கோணையமர் சண்முகரே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. பரங்குன்றில் உறைபவரே ஆடீரூஞ்சல்
பார்வதியாள் பாலகரே ஆடீரூஞ்சல்
தரங்கமெறி செந்தூரும் தணிகை வெற்பும்
தண்மதிதோய் ஏரகமும் பழனிக் குன்றும்
அரங்கமென ஆடிவரும் அழகு வேலா
அச்சுதனின் மருகோனே ஆடீரூஞ்சல்
கரங்கூப்பித் தொழுமடியார்க் கருளும் கந்தா
கோணையமர் சண்முகரே ஆடீரூஞ்சல்.

09. ஆதிபராபரப் பொருளே ஆடீரூஞ்சல்
அஞ்சலென அருள் தருவோய் ஆடீரூஞ்சல்
சோதிவடிவானரே ஆடீரூஞ்சல்
சுருதி முடிவானவரே ஆடீரூஞ்சல்
வேதியர்க்கோர் வேதியனே ஆடீரூஞ்சல்
வினைதீர்க்கும் வித்தகனே ஆடீரூஞ்சல்
கோதிலாக் குணக்குன்றே ஆடீரூஞ்சல்
கோணையமர் சண்முகரே ஆடீரூஞ்சல்.

10. ஆறெழுத்து மந்திரமும் அறமும் வாழி
அஞ்சலென அருள்புரியும் வேலும் வாழி
கூறுபுகழ்க் குக்குடமும் மயிலும் வாழி
குஞ்சரநற் கோதையொடு வள்ளி வாழி
மாறுபடா ஆறுமுக வள்ளல் வாழி
மழைவாழி மனித குலம் அனைத்தும் வாழி
பேறுதரும் அந்தணரும் ஆவும் வாழி
கோணையமர் சண்முகரே வாழி வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரிக்கை

01. சிவனார் திரு விழியில் அறு சுடராய் உருவாகிப்
பவநோயற வரு சண்முக பரனே எச்சரிக்கை

02. மகவானொடு முனிவர் தேவர் மிகுவெஞ்சிறை மீழ
முகமாறொடு மயில் மேல் வரு முருகா எச்சரிக்கை

03. பண்ணொன்றிய மொழியாளுமை பாலா எச்சரிக்கை
கண்மூன்றுடைக் கடவுள் தரு கந்தா எச்சரிக்கை

04. மன்னும் பல மாயம் புரி சூரன் உடல் மாளப்
பின்னஞ்செய வரு சண்முக தேவ எச்சரிக்கை

05. சென்றங்கெதிர் சமரேபுரி சிங்கன்னொடு சூரன்
பொன்றும்படி வேலை விடு வேலா எச்சரிக்கை

06. குன்றம் ஏறி குமரா சண்முகவா எச்சரிக்கை
இன்றுன்னடியார்கள் துயர் தீர்ப்பாய் எச்சரிக்கை

## பராக்கு

01. வங்கமலி கின்ற கடல் சூழ திருக்கோண
மலையாளி பால முருகேசா பராக்கு

02. சங்கினொடு சக்கரமும் தாங்கியருள் செய்யும்
சாரங்கபாணி மருகோனே பராக்கு

03. ஐந்துகரனுக்கிளைய ஐயா பராக்கு
அருணகிரி யார்க்கருளும் அரனே பராக்கு

04. முந்து தமிழ்மாலைபுனை முதல்வா பராக்கு
முகமாறு முடைய அறுமுகவா பராக்கு

05. வந்தவினை தீர்த்தருளும் வள்ளல் பராக்கு
வள்ளி தெய்வானை மணவாளா பராக்கு

06. குந்தமொடு வேல் குலிகம் கொண்டாய் பராக்கு
குமர குருபர முருக சண்முக பராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாலி

01. லாலி லாலி லாலி லாலி லாலி
மால் மருக சண்முகவ லாலி லாலி

02. கோல மயில் வாகனனே லாலி லாலி
குஞ்சரிதன் நாயகரே லாலி லாலி

03. வீரவடி வேலவனே லாலி லாலி
சூரனுடல் கூறுபடச் செய்வாய் லாலி

04. ஆரணங்கள் ஓதும் பொருளானாய் லாலி
அந்தணர் தம் சிந்தையனே லாலி லாலி

05. தேவர் சிறை மீட்டவரே லாலி லாலி
திவ்ய முகமாறுடையாய் லாலி லாலி

06. மேவும் அடியார்கள் துயர் தீர்ப்பாய் லாலி
சேவற் கொடிச் சண்முகரே லாலி லாலி

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம்

01. ஆறுபடை வீடுடைய ஆறுமுக வேலவற்கும்
மாறுபடு சூரனுல் கூறுபடச் செய்தவற்கும் (மங்)

02. பண்ணின் மொழிப் பாவை வள்ளி தெய்வயானை பாகருக்கும்
கண்ணின் மணியாயிருந்து கருணைபுரி சண்முகற்கு (மங்)

03. சந்ததமுன் சன்னிதியில் வந்து வழிபாடு செய்யும்
கந்தனடியார்களுக்கும் கார்த்திகேய தாசருக்கும் (மங்)

04. ஆரணங்கள் ஓதியுயர் ஆகமங்கள் பேணி அருள்
சீரணங்கு சேவடிக்குச் சேவைசெய்யும் யாவருக்கும் (மங்)

**ஆக்கியோன்**
**சைவப்புலவர் பண்டிதர், இ.வடிவேல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை
## அருள்மிகு முத்துக்குமாரசுவாமி
## திருப்பள்ளியெழுச்சி

ஆக்கம்: சைவப்புலவர், பண்டிதர் இ.வடிவேல்

01. சரவணபவ ஓம் சற்குருநாதா
சரணம் சரணம் சண்முகநாத
பரம கருணாகர பசுபதி பாலா
பார்பதியாள் மகிழ் பால குமாரா
அரவணையான் திரு மால் மருகோனே
ஐங்கரனுக் கிளைய அருள் முருகோனே
திருமலையமர் திரு முத்துக் குமரோனே
அறுமுகனே பள்ளி எழுந்தருளாயே

02. பகலவன் வந்தனன் பார்மகள் வந்தாள்
மலர்மகள் வந்தனள் கலைமகள் வந்தனள்
மகபதி வந்தனன் மாதுமை வந்தாள்
மாதவர் வந்தனர் மானிடர் வந்தனர்
முகமதியாறுடை முருகோனே உனது
முண்டக மலரடி தொழுதிட வந்தார்
அகவிரு ளகற்றிடும் அறுமுக ஜோதியே
அருளொளியே பள்ளி எழுந்தருளாயே.

03. மாமயில் அகவின மாங்குயில் கூவின
பூவைகள் இயம்பின பொற்கோழி கூவின
காவினில் மதுவுண்ணும் வண்டுகள் அரற்றின
ஆவினம் எழுந்தன ஆர்த்தன எவையும்
பாவினில் உன்புகழ் பாடினர் அடியார்
பனிமலர் ஏந்தியே தொழுதிட வந்தார்
மூவிரு முகமுடை முத்துக்குமாரரே
முழுமுதலே பள்ளி எழுந்தருளாயே.

04. அண்டமும் பிண்டமும் அனைத்திலும் நிறைந்தாய்
அகிலமெல்லா மொரு நொடியினில் அளந்தாய்
எண்டிசைத் தேவரும் ஏத்திட நின்றாய்
ஈசனுக்கே உபதேசமும் செய்தாய்
மிண்டுமனத் தவுணர் சூரொடு மாளவே
மண்டு சமரதனில் வேலினை விடுத்தாய்
அண்டர்கள் யாவரும் போற்றிட வந்தாய்
ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. தொண்டர்கள் கைமலர் கூப்பினர் ஒருபால்
தூமலர் தூவியே தொழுதனர் ஒருபால்
வண்டுறை மாமலர்க் கண்ணிகள் ஏந்தியே
வனிதையர் வந்துணை வாழ்த்தினர் ஒருபால்
பண்டுயர் பண்ணினைக் கூட்டிப்
பாடினர் ஆடினர் கூடினர் ஒருபால்
கண்படு துயிலெழுந்து இன்னருள் புரியக்
கலியுகனே பள்ளி எழுந்தருளாயே.

06. பாசவே ரறுத்திடும் பரஞ்சுடர் முதலே
பலபல எண்ணி நாம் பரிதவிக்கின்றோம்
ஆசைகளின் வலையில் அகப்பட்டு அழுந்தியே
அவனிவாழ்வு தனில் அல்லல் படாமல்
நேசமுடன் உனது அடியவரோ டெமை
நிலைபெற வைத்துநீ ஆண்டருள் புரிவாய்
தேசனே முத்துக் குமரனே திருமலை
வாசவனே பள்ளி எழுந்தருளாயே.

07. நெஞ்சினை உமக்கே இடமென வைத்தோம்
நின்னடிக்கே தலை சரணென வைத்தோம்
அஞ்சிடும் போதெல்லாம் அறுமுகனே என்று
அங்கமெல்லாம் உமக்கே அடைக்கலம் வைத்தோம்
பஞ்சினும் மெல்லடிப் பாவை நல்லாரொடும்
பள்ளிகொள் பன்னிரு கண்மலர் முகிழ்த்து
தஞ்சமென் றிங்குனைப் போற்றிட வந்தோம்
தயாபரனே பள்ளி எழுந்தருளாயே.

08. ஆதியும் அந்தமும் ஆனவன் நீயே
அமரர்கள் உண்டிடும் அமுதமும் நீயே
சோதியும் இருளும் சூனியம் நீயே
சொல்லுதற் கரிய தூயவன் நீயே
வேதமும் வேள்வியும் வித்தையும் நீயே
விண்ணொடு மண்முழு தானவன் நீயே
கோதிலாத முத்துக் குமரனும் நீயே
குருபரனே பள்ளி ஏழுந்தருளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. தென்பரங் குன்றொடு சீரலை வாயும்
திருவேரகத்தொடு திருத்தணி மலையும்
அன்பருளம் மகிழும் ஆவினன் குடியும்
அழகிய பழமுதிர் சோலை மலையும்
தென்கயி லாயமாம் திருக்கோண மலையும்
திருமலையமர் முத்துக் குமரன் கோவிலும்
உன்பதியாகிய கதிரை மலையும்
உறைபவரே பள்ளி எழுந்தருளாயே.

10. ஒப்புயர் வில்லாத ஒருவனே முருகா
ஓமெனும் பிரணவம் உணர்த்திய குமரா
இப்பிறப்பறுத்திடும் இறைவனே முருகா
இன்னருள் புரிந்திடும் எந்தையே குமரா
செப்பிடும் நால்வேதச் செல்வனே முருகா
சீரெலாம் தந்திடும் வேலனே குமரா
எய்ப்பினில் வைப்பென எங்களுக்கருளும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

## அபிசேகப் பலன்கள்

இறைவனுக்கு நிகழ்த்தப் பெறும் அபிசேகங்களால் வரும் இன்மை, மறுமைப் பலன்கள் மிகப் பலவாகும். அபிசேகப் பலன்களை கீழே காணலாம்.

| | |
|---|---|
| 01. பால் | - நீண்ட ஆயுள் |
| 02. தயிர் | - நன்மக்கட் பேறு |
| 03. நெய் | - வீடுபேறு நல்கும் |
| 04. தேன் | - குரல் இனிமை உண்டாகும் |
| 05. பஞ்சாமிர்தம் | - உடல் வலிமை உண்டாகும் |
| 06. இளநீர் | - போகம் வழங்கும் |
| 07. எலுமிச்சம்பழம் | - பகையை அழிக்கும் |
| 08. கரும்பின் சாறு | - நோய் நீக்கும் |
| 09. திருமஞ்சனப்பொடி | - கடன், நோய் நீக்கும் |
| 10. சந்தனத் தைலம் | - சுகம் தரும் |
| 11. திருநீறு | - போகம், மோட்சம் தரும் |
| 12. பன்னீர் கலந்த சந்தனம் | - திருமகள் கடாட்சம் நல்கும் |
| 13. சொர்ண அபிசேகம் | - வியாபாரம் துலங்கும் |
| 14. வலம்புரி சங்கம் அபிசேகம் | - நினைத்தவை நடக்கும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

01. ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙண்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எம்தோழி பரிசு ஏலோர் எம்பாவாய்.

02. பாசம் பரஞ்சோதிக்கென்பால் இராப்பகல் நாம்
பேசும்போது எப்போது இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையும் சிலவோ விளையாடி
ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குத்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பார்யாம் ஆர் ஏலோர் எம்பாவாய்.

03. முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்து எதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கு ஏலோர் எம்பாவாய்.

04. ஒள்நித்தில நகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் வல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்று அவமே காலத்தை போக்காதே
விண்ணுக்கு ஒரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்து உள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயில் ஏலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலுறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று
ஓலம் இடினும் இடினும் உணராய் உணராய் காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.

06. மானேநீ நென்னலை நாளை வந்து உங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்கு உன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடு ஏலோர் எம்பாவாய்.

07. அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற்கு அரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய் திறப்பாய்
தென்னா என்னமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுது என்று எல்லோமும்
சொன்னேம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
உன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசு ஏலோர் எம்பாவாய்.

08. கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழி ஈதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஓரவனை
ஏழை பங்காளனையே பாடு ஏலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே
உன்னைப் பிரானாக பெற்ற உன்சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவராவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கு எங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்.

10. பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றாரார் அயலார்
ஏது அவனைப் பாடும்பரிசு ஏலோர் எம்பாவாய்.

11. மெய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்து உன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்
செய்யா வெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தெழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமை ஏலோர் எம்பாவாய்.

12. ஆர்த்த பிறவி துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தநன் தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளை சிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல் மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்திடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடு ஏலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பெங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலப்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்க குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடு ஏலோர் எம்பாவாய்.

14. காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப்பொருள் பாடி அப்பொருளாமா பாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடு ஏலோர் எம்பாவாய்.

15. ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீர் ஒருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரைத் கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையர்க்கு இங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தான்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந்து ஆடு ஏலோர் எம்பாவாய்.

16. முன் இக்கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழை ஏலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. செங்கணவன் பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம் நம்பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தெம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட்கு ஆரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடு ஏலோர் எம்பாவாய்.

18. அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார் கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாகி அலியாகி பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்து ஆடு ஏலோர் எம்பாவாய்.

19. உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கு அப்பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எம்கண் மற்றொன்றும் காணற்க
இங்கு இப்பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்
எங்கழிலென் ஞாயிறு எமக்கு ஏலொர் எம்பாவாய்.

20. போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாமுய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடு ஏலோர் எம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி திருவனந்தல்

ராகம் : நீலாம்பரி தாளம் : கண்டசாபு

| | | | | |
|---|---|---|---|---|
| 01 | முப்புரமுங் | கடல்சூழ்ந்த | முதுநகராம் | கோகர்ணத்தில் |
| | அப்பன்முன் | மயிலோடு | ஆதிமூலத்தில் | அமர்ந்திருக்கும் |
| | செப்பரிய | தங்கவேலே | செல்வமுத்துக் | குமரா |
| | ஒப்பிலாநின் | தேவியரோடும் | அறிதுயில்கொள | எழுவாய் |
| 02 | கைப்போது | மலர்தூவி | கந்தா உன் | புகழ்பாடி |
| | முப்பழமொடு | நறும்பசும்பால் | முறையோடு | கொண்டுவந்தே |
| | எப்போதோ | அடியவரும் | இசைவாக | அழைத்தனரே |
| | இப்போதே | எழில்முருகா | அறிதுயில்கொள | எழுவாய் |
| 03 | தேன்கலந்து | பால் கலந்து | தெவிட்டாத | தீந்தமிழில் |
| | ஊனுருகி | உயிருருகி | உன்னைப்பாடி | வந்தோமே |
| | மானீன்ற | மயில்கலந்த | மணவாளா | மயில்வீரா |
| | வானீந்த | வல்லிபுணர் | வடிவழகே | எழுவாய் |
| 04 | ஏழிசை | வாத்தியங்கள் | இன்னிசை | இயம்பினவே |
| | ஏந்திழையார் | கவரிவீசி | எழில்மலர்கள் | தூவினரே |
| | மேழிச்செல்வம் | மிகுநகராம் | திருக்கோண | மலையுறையும் |
| | மேந்தலைமிகு | முத்துக்குமரா | அறிதுயில்கொள | எழுவாய் |
| 05 | குத்துவிளக் | கொளிரக் | குண்டுமல்லி | அலங்கரிக்கும் |
| | புத்தம்புது | மஞ்சமதில் | பூவையர் வள்ளி | குஞ்சரியோடு |
| | முத்துத்தாம | மார்பழகா | முத்தமிழே | முத்துக்குமரா |
| | உத்தமனே | உல்லாசனே | அறிதுயில்கொள | எழுவாய் |
| 06 | வண்ணத் | தமிழின் | வளமான | நுண்பொருளே |
| | பண்ணோடு | பாடல்தந்தோம் | பள்ளிகொள | எழுவாய் |
| | தண்ணென்ற | தாமரைபரப்பி | தங்கமஞ்சம் | அழைத்தோமே |
| | அண்ணலே | அரிவையரோடும் | அறிதுயில்கொள | எழுவாய் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 07 | சிங்காரமாய் | அலங்கரித்த | சித்திரச் | சிறுதேரில் |
| | கிங்கிணியென | மணியொலிக்க | கிளர்ந்து வரும் | மலர்மணமும் |
| | திங்கள்முக | அழகியர் | தேவியர் | இருவரொடும் |
| | சிங்கார | வேலவனே | அறிதுயில்கொள | எழுவாய் |
| 08 | பூரணையும் | தண்ணொளியை | பூமியெங்கும் | பொழிகிறதே |
| | புன்னகைவீசி | முல்லைமகள் | புதுமணம் | பரப்பினளே |
| | பூரணமாய்ப் | புவியெங்கும் | புனிதஅமைதி | பூத்திடவே |
| | புன்மைநீங்கி | அருள்பொலிய | புத்தமுதே | கண்வளர்வாய் |
| 09 | அரனாரின் | திருநுதற்கண் | அவதரித்த | அருட்கனலே |
| | சரவணத்துத் | தாமரையில் | தவழ்ந்தஸ்ரீ | சண்முகனே |
| | கரமீராறும் | முகமோராறும் | கவினுறவே | அன்னையவள் |
| | அரவணைப்பில் | ஓருருவான | கந்தா | கண்வளர்வாய் |
| 10 | சண்முகனார் | கனவில் வந்து | சாற்றியபடி | சகம்புகழ |
| | மண்மீது | திருக்கோண | மலையினிலே | கோவில்கொண்டு |
| | பண்ணிய | திருப்பணியும் | புண்ணியமாய் | துலங்கிடவே |
| | கண்ணியங் | கட்டிக்காக்கும் | கற்பகமே | கண்வளர்வாய் |
| 11 | சிந்தையெலாம் | நினதாக்கிச் | செப்பினோம் | திருவனந்தல் |
| | சிந்தை கனிந் | தருள்புரிவாய் | செல்வமுத்துக் | குமரா |
| | சிந்தாகுலந் | தீர்க்கும் | செந்தாமரைப் | பதனே |
| | சிந்தாமணிச் | சுடரே | செம்மலே | கண்வளராய் |
| 12 | கண்வளராய் | கண்வளராய் | கந்தா நீ | கண்வளராய் |
| | கண்வளராய் | கண்வளராய் | காங்கேயா | கண்வளராய் |
| | கண்வளராய் | கண்வளராய் | கடம்பா நீ | கண்வளராய் |
| | கண்வளராய் | கண்வளராய் | காத்திகேயா | கண்வளராய் |

ஆக்கம்:

செல்வி.மணிமேகலாதேவி கார்த்திகேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது பார்வையில் கலாலயமும் ஆலயமும் நினைத்துப் பார்த்ததில் நெகிழ்ந்தவை

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" "குருவில்லா வித்தை பாழ்" என்பன முதுமொழிகளாகும். இவ்வகையில் ஸ்ரீமுத்துக்குமார ஸ்வாமியின் பரிபூரண திருவருள் ஆசியும், கலைகளின் பிரதி வடிவமான குருநாதரின் நல்லாசியும் நிறைந்துள்ள இடமே எமது இசைநடன கலாலயம்.

கலாலயத்தில் எமது பாரம்பரிய கலைகளைப் பயிலும் நோக்கோடு மட்டுமே நாம் இரண்டாயிரம்களின் பின் உள் நுழைந்தோம். சிறுவயதுப் பருவம் இசையின் பாரம்பரியமோ ஆழமோ எமக்குப் புரியாத பருவம். ஆன்மீகப்பற்றும் விளங்காப் பருவம். ஆனால் இன்று இக்கலாலயத்திலேயே இசையினைப் பயின்று பின் பல்கலைக்கழகத்தில் கர்நாடக இசையினை பயின்று, எமது குருவின் வழிநடத்தலிலும் முத்துக்குமாரப்பெருமானின் அருட்துணையுடனும் எமது பங்களிப்பினை இசை நடன கலாலயத்திலும் ஆற்றி வருகிறோம்.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் முதுமொழியின் சாரத்தை கலாலயத்தில் கற்பிக்கும் போது முழுமையாக அறிந்து கொண்டோம். யாம் பெற்ற கலைகளை எதிர்கால சந்ததியான சிறுவர் சிறுமிகட்கு பயிற்றுவிக்கும் போது ஏற்படும் நல் அனுபவத்திற்கு அருள் தந்த முத்துக்குமாரனையும் எமது குருவையும் எண்ணி மனம் புளகாங்கிதமடையா நாளே இல்லை எனலாம்.

ஆங்கில வருட முதல் மாதத்திலேயே தைப்பூசத்திருநாளில் வீதியுலா வரும் கந்தப் பெருமான் கலாலயத்தின் மீது தமது கடைக்கண் பார்வையால் அருளை அள்ளி வீசி விடுவான்.

மாசிமாத சிவராத்திரி முருகன் கோயிலிலும் விசேடம். நான்கு ஜாம அபிடேகப் பூசைகள் இடம்பெறும். சிவராத்திரிக்கு ஒரு வாரத்திற்கு முன்னரேயே பஜனைப்பாடல் பயிற்சிகள் ஆரம்பித்து விடும். அனைத்து மாணவர்களும் ஒன்று சேர பயிற்சிகள் பெறும் நிகழ்வு தொடங்கி விடும். சிவராத்திரியன்று எமது பாரம்பரிய கலாச்சார உடையில் மாலை 5 மணிக்கு முத்துக்குமரன் ஆலயத்திற்கு வந்து விடுவோம். கலாலயச்சிறார்களும் அழகுக் கோலத்துடன் தமது பெற்றோர்களுடன் ஆலயத்தில் கூடி விடுவர். குருவின் வழிகாட்டலுடன் மாணவர்கள் வரிசையாக அமர்த்தப்பட்டு அவருடன் சேர்ந்து நாமும் பாட பிள்ளைகள் திரும்பப் பாடுவர். இந்நிகழ்வு நிச்சயமாக இறைவனை எட்டி அவனருள் எமக்கு கிட்டுவதற்கு ஏதுவாக அமைந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசிமாத மகோற்சவம் அதுவும் எமக்கு ஆனந்தம் தரும் விடயமே. இசைப்பணியுடன் கோயில் திருத்தொண்டும் சேர்ந்து செய்யும் சந்தர்ப்பம் கிடைக்கும் அரிய காலப்பகுதி. ஆரம்பத்திலேயே மாணவர்களுக்கு, "10 நாட்களும் திருவிழாவிற்கு நீங்கள் வந்து கடவுளை வணங்கிருள் பெறுங்கள். ஆண் பிள்ளைகள் வேட்டி சேட்டுடனும், பெண் பிள்ளைகள் நீளப்பாவாடை சட்டை, பூமாலையுடனும் வாருங்கள்" என்று எமக்கு எமது குரு வழங்கிய இசையுடனான வாழ்வியல் பாரம்பரியங்களை நாமும் எமது கலாலய சிறுவர்களுக்கு வழங்குவோம். அத்துடன் 10 நாட்களும் கலாலய முன் வாசலில் ஒவ்வொரு பிரிவினரும் ஒவ்வொரு நாட்களும் பொறுப்பெடுத்து நிறைகுடம் வைத்தல்,

பிரசாதம் வைத்தல், அர்ச்சனைப் பொருட்கள் கொண்டு வருதல், பிரசாதங்கள் பொதி செய்தல் போன்ற பொறுப்புக்கள் பகிர்ந்து பங்களிப்பினை நல்குவது ஒரு சிறப்பம்சமாகும். அதற்கு முன்னரே ஒவ்வொருவரும் தாம் விரும்பியபடி கடலை, அவல், தேங்காய், சர்க்கரை, பச்சரிசி, சாம்பிராணி, கற்பூரம் என்பன கொண்டு வந்து சேர்ப்பர். பெற்றோர்களும் ஆர்வத்துடன் நாம் கடலை தருகிறோம். "நான் அவல் செய்கிறேன்" என பொறுப்புக்களை முன்னின்று பொறுப்பெடுப்பர். இவ்வாறு குவிந்த பிரசாதப் பொருட்கள் தினமும் குறித்தவர்களால் நைவேத்தியமாக்கப்பட்டு சுவாமிக்கு பிரசாதமாக நிறைகுடத்துடன் வைக்கப்படும். வடக்கு ஈசான மூலையில் எமது கலாலய மாணவர் அனைவரும் ஒவ்வொரு நாளும் தேவார புராணம் பாடுவர். சுவாமி திருவீதியுலாவின் பின் கலாலய பெரிய மாணவர்களும், நாமும் பிரசாதங்களை கலாலய மாணவர்களுக்கும் ஆலயத்திற்கு வருகை தந்த அடியவர்களுக்கும் அவற்றை வழங்கும் போது மனம் நிறைவடைவதை உணர்வோம்.

வருடாந்த மகோற்சவத்தின்போது கொடியேற்றம், கொடியிறக்கம் போன்ற காலங்களில் நவசந்திப்பண் பாடும் வழக்கம் ஒரு மரபாகப் பேணப்பட்டு வருகிறது. நவசந்திப்பண்களை எமக்கு முறையாகப் பயிற்றுவித்து, அதற்கேற்ப தொடர்பயிற்சி தந்து, எமமைப் பாட வைக்கும் பெரும் பணியை எமது குரு வருடா வருடம் தொடர்ச்சியாகச் செய்து வருவது வழக்கம். நவசந்திப் பண் பாடுவதில் ஆண் மாணவர்கள் முன்நிற்பர். எனினும் பெண் பிள்ளைகளும் சளைக்காமல் கற்றுத் தேறுவர்.

தேர்த்திருவிழா அது எமக்குத் தனித்திருவிழா. தேர்ச்சிந்துப்பாடல், அன்னஊஞ்சல், எச்சரிக்கை, பராக்கு, லாலி, மங்களம் என்பன எமக்கு எமது குருவின் அயராத பயிற்சியால் மெருகேற்றப்பட்டிருக்கும். அதிகாலையே தோய்ந்து நாம் கோயிலிற்கு வந்துவிடுவோம். தேர் வடம் பிடிப்பதிலும் ஆர்வம். தேர் இருப்பிடத்திற்கு வருவதற்கு முன்பே எம்மை எமது குரு அழைத்து "வாசிகசாலைக்கு செல்லுங்கள். அன்னதானத்திற்கு தயாராகுங்கள்" என்பார் நாம் எமது ஆசிரிய தோழர்களுடன் ஸ்ரீமுத்துக்குமரனின் திருமுருகானந்த வாசிசசாலைக்கு விரைவோம். அங்கு சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டர்கள் எம்மை எதிர்பார்த்துக் காத்திருப்பர். விரைந்து சிறுபொதிகள் பண்ணுங்கள். அடியவர்கள் வீடு செல்லுமுன் தாமதமின்றிக் கொடுக்க வேண்டும் என்பதை அன்பின் கட்டளையாக முன்வைப்பர். நாம் நால்வர் நால்வராக ஒரு அமுதம் நிரம்பியுள்ள கிடாரங்களின் முன்னால் வட்டமாக நிற்போம். ஒருவர் பையைப் பிரித்து பிடிக்க மற்றவர் அமுதள்ளிப் போட இன்னொருவர் அதை வாங்கிக் கட்டி வெற்றுப் பெரிய பாத்திரங்களில் வைப்பர். அடியவர் கூட்டம் அலைமோதும். சளைக்காது புன்சிரிப்புடன் நாம் பரிமாறுவோம். முடிவில் ஏற்படும் திருப்தி வேறெப் பொழுதும் வருவதில்லை.

தீர்த்தோற்சவம் மிகவும் ரம்மியமானது. தீர்த்தம் என்றால் கடலில் தான் என்பது எமது எண்ணத்தில் பதிந்த விடயம் ஆனால் முத்துக்குமாரசுவாமி கோயிலில் தீர்த்தகேணியுண்டு, அதிலே தான் தீர்த்த உற்சவம் நடைபெறும் என்பதும் நம்பமுடியாததொன்று. நகர சூழலில் ஒரு கேணி அதில் நடைபெறும் விழா உற்சவம் வியப்பான ஒன்றல்லவா? திருகோணமலையில் ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி கோயிலில் மட்டும் தான் இக்கொடுப்பனவு உண்டு. நாம் எமது கலாலயக் குழுவினருடன் சேர்ந்து கேணிக்கு சென்று விடுவோம் அங்கு வரிசையாக உள்ள சிறிய நீளமான படி வரிசைகளில் எமது ஆண் பிள்ளைகள் போய் அமர்ந்து விடுவார்கள். உற்சவத்தின் பின் ஆலயத் தொண்டர்களால் பெரிய குழாய்கள் மூலம் மோட்டரில் தீர்த்த நீர் விசிறியடிக்கப்படும். நாமும் அதன் கீழ் நின்று நீராடி கலாலய நிறைகுடத்தடிக்கு செல்வோம்.

பூங்காவனம் எமது வாழ்வின் ஓர் திசை திருப்பும் நன்னாள் உயர்வு உத்வேகம் பெறும் நன்னாள். அதுவரை நாம் ஸ்ரீ முத்துக்குமாரனின் நிழலில் வளர்ந்து பெற்ற கலை ஞானத்தை இசை அஞ்சலியாக அவனுக்கே சமர்ப்பிக்கும் நன்னாள். எம்மை மேடையேறச் செய்யும் திருநாள். பூங்காவன நிகழ்ச்சிகளை எமது குருவானவர் ஏற்கனவே ஆரம்பித்து உயர்பயிற்சி கொடுத்திருப்பார்.

சென்ற வருடம் எமது குருநாதரின் அளப்பரும் தளராத முயற்சியால் அவரது நெறிப்படுத்தலுடனும் கோயில் திருவிழாவிற்கென வந்திருந்த தவில் நாதஸ்வர வித்துவான்களின் ஒத்துழைப்புடனும் எமது கலாலய மாணவர்கள் இருவர் தவிலும், இருவர் நாதஸ்வரமுமாக ஓர் இசை ஆராதனை வேள்வி நடத்தியமை உள்ளத்தை தொட்டு உணர்வித்தமையை சொல்ல வார்த்தைகளே இல்லை எனலாம்.

புரட்டாதி மாத விஜயதசமியும் குரு ஆசி பெறும் ஒரு நன்னாள். குருவை வணங்கி நாம் முதன் முதலில் இசை கற்கத் தொடங்கியதும் பின் குருவின் வழிகாட்டலுடன் எமது இசையறிவை படிப்படியாக வளர்த்து பல்கலைக்கழக பட்டப்படிப்பு வரை கொண்டு சென்றதும், தற்போது நாமே இசை ஆசிரிய மாணவர்களாக குருவின் கீழ் இருந்து புதிய மாணவர்களுக்கு இசை கற்பித்துக் கொடுக்கும் ஆற்றலை பெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்க விடயங்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாலய சரஸ்வதி பூசை தினத்தில் சகலகலாவல்லி மாலையுடன் எமது பூசை நிறைவுற்ற கையோடு ஸ்ரீ முத்துக்குமாரனின் வாசிகசாலையிலும் படம் வைத்து 3நாட்கள் பூசை நடைபெறும். அங்கும் நாமே சகலகலாவல்லிமாலை பாடுவோம். இவ்வழக்கம் இன்று வரை தொடர்கின்றது. இவ்வகையில் குமரன் ஆலயமும் கலாலயமும் ஒன்றித்து நின்று செயற்படும் பண்பு முறையை நாம் வேறெங்கும் கண்டதில்லை. 'அவனன்றி ஓரணுவும் அசையா' தென்பதற்கேற்ப எல்லாம் கந்தனருளே

ஐப்பசி பிறந்தால் கந்தசஷ்டிப்பெருவிழா. குருவின் வழிகாட்டலுடன் ஆசிரிய மாணவர்களாகிய நாமும் பெரிய பிரிவு மாணவர்களும் சேர்ந்து கந்தனின் சஷ்டிவிரத அடியார்களுக்கான விபூதி, குங்கும, சந்தன பிரசாதங்களை சிறு பைகளில் போட்டு ஒட்டுவோம். கந்தப்பெருமானின் பூரண கிருபா கடாட்சம் பூலோக மாந்தர்களுக்கு கிடைக்கும் நன்னாள். இவ்விரத நாளில் நாமும் சிறு பங்களிப்பு சேவை செய்ய எமது குரு மூலம் குமரன் நல்லருள் புரிந்துள்ளான். கலாலயத்தில் நாமும், வேறு பெரிய மாணவர்களும் ஒன்று சேர்ந்து 1000ற்கும் மேற்பட்ட விபூதி, குங்கும, சந்தன பிரசாதங்களை சிறிய பொலித்தீன் பைகளில் விட்டு ஒட்டுவோம். கலாலயம் வந்த பின்னர் தாம் கந்தன் விரதமே பிடிக்கத் தொடங்கினோம். எம்மிற் சிலர் உபவாசமிருந்தும் வேண்டுதல் செய்வர்.

பாறணைப்பூசைக்கு முன்னாள் இரவு எமது குருவின் துணையுடன் கோயிலின் உட்பிரகாரத்தில் அமர்ந்து அன்னதானத்திற்குரிய காய்கறிகளை நறுக்கிக் கொடுப்போம். பாறணையன்று மாகேஸ்வரபூசை நடைபெறும்: இதில் நாமும் பங்குபற்றுவது மறக்க முடியாததொன்றாகும். அடியவர்களுக்கு மண்டபத்தின் இருமருங்கும் நீளத்திற்கு இலைபோட்டு அமுது பரிமாறுதல் அலாதி ஆனந்தமே. “பிள்ளை, கொஞ்சம் சோறு வையும், பிள்ளை கறி கொண்டு வாரும். தங்கச்சி தண்ணீர் தாரும்' என அடியவர்களின் குரல் கேட்ட திசையெல்லாம் சுழன்று சேவை செய்வதென்பது 'நாம் கொடுத்து வைத்தவர்கள்' என்பதை சுட்டி நிற்கின்றது.

கார்த்திகை விளக்கீடு மக்களுக்குப் புற ஒளியை மட்டுமன்றி அவர்கள் உள்ளத்திலும் ஒளியேற்றும் தீபத்திருநாள். நாமும் எமது கலாலய மாணவர்களும் மாலை 5மணிக்கு முன்னரே கலாச்சார ஆடைகளுடன் கோயிலில் ஒன்று கூடுவோம். கலாலய மாணவர்கள் ஒவ்வொருவரும் சிட்டி, எண்ணெய் , திரியுடன் வந்து சேர்வர். நாமும் பெரிய பிரிவு மாணவர்களும் கூட்டமாக கோயிலுக்குள் செல்வோம். பல அடுக்குள்ள பெரிய குத்துவிளக்குகளினுள் திரியிட்டு எண்ணை விட்டு ஒவ்வொரு அடுக்கிலும் எல்லா விளக்கு முகங்களையும் ஏற்றுவோம். அவற்றை வரிசையாக வைத்தும், உள் வீதியை சுற்றி சிட்டிகளையும் சிறிய குத்து விளக்குகளையும் ஏற்றி வரிசையாக அடுக்குவோம். ஏனைய ஆண், பெண் மாணவர்கள் கலாலய முற்பக்க சுவரின் பூக்கம்பிகளிடையே தீபங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசையாக ஏற்றி அடுக்குவர் கோயிலின் உள்ளும், முன் வெளிப்பக்கமும் தீப ஒளியில் பிரகாசித்து வைபவத்தை அலங்கரித்து நிற்பதைக் காணக் கண் கோடி வேண்டும்.

மார்கழி திருவெம்பாவையைக் கூட நாம் கைதவறவிடுவதில்லை. குரு திருவெம்பாவை பாடல் பயிற்சிகள் தந்து திருக்கோணேஸ்வரர் ஆலயம், பத்திரகாளியம்மன் கோயில், முத்துக்குமரன் கோயிலிலும் பாடவைப்பார். இது நாம் பெற்ற பெரும் பேறு.

இவ்வாறான கோயிற் தொண்டுகள் வேறு எவருக்குமே கிடைப்பதில்லை. கலாலயத்தில் பயிலும் ஒவ்வொரு மாணவர்களும் கொடுத்து வைத்தவர்களே. குருவருளும், திருவருளும் ஒன்று கூடி இசைக்கலையை மட்டுமன்றி ஆலய தொண்டாற்றும் கலையையும் எமக்குப் போதித்துள்ளன. நாமும் எமது குருவின் பாதம் பணிந்தும், குமரனின் திருப்பாதம் சரணடைந்தும் இப்பணிகள் மேலும் மேலும் தொடர வேண்டும் என்றும் எம்மை போன்றே பல மாணவர்கள் இன்னும் இசைக்கலை கற்று உயர வேண்டும் என்றும் வேண்டி தொடர்ந்தும் எமது பங்களிப்புகள் ஆலயத்திற்கும், கலாலயத்திற்கும் செய்ய வேண்டி இறைவனை அவனருளாலே அவன் தாள் பணிந்து வேண்டுகின்றோம்.

எம் கடன் பணி செய்து கிடைப்பதே

நெகிழும் நெஞ்சங்கள்

01. திருமதி.நீருஜா கல்வியல் கல்லூரி நுண்கலைப் பிரிவு
02. திருமதி.புகழினி புவிராஸ் B.F.A, கிழக்கு பல்கலைக்கழகம்
03. செல்வி.ஜனனி விஜயகுமார் B.F.A கிழக்கு பல்கலைக்கழகம்
04. செல்வி.நிஜாநிஷா தாமோதரம்பிள்ளை B.F.A, கிழக்குப் பல்கலைக்கழகம்
05. செல்வி.நிவாஷினி சக்திவேல் தமிழ்நாடு அரசு இசைப்பல்கலைக்கழகம் (சென்னை) 1ம் வருடம்

சாவு வருவதற்கு முன்பே ஒரு கோழை பல தடவைகள் செத்து விடுகிறான்.
- ஷேக்ஸ்பியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்பு மிக்க முருகன் ஆலயங்கள்

முருகப் பெருமானை நாம் வேலவனாக, பழனி ஆண்டவராக, ஆறுமுகனாக, சுப்பிரமணியராக வள்ளி தேவயானையுடன் கூடியவராகவே கண்டு வழிபட்டுள்ளோம்.

ஆனால் முருகன் சில ஆலயங்களில் வித்தியாசமான ரூபத்திலெல்லாம் காட்சியளிக்கின்றார். அப்படிப்பட்ட ஆலயங்களை அறியப் பலருக்கும் ஆவலாக இருக்கும். அவற்றுள் நான் அறிந்தவற்றை முடிந்தவரை தருகின்றேன்.

சேலம் மாவட்டத்தில் கபிலர் மலைக்கோவிலின் கருவறையானது குடவரையாக அமைக்கப்பட்டுள்ளது. இங்கே முருகன், பாலமுருகனாக கிழக்கு முகமாக நின்ற கோலத்தின் காட்சி தருகிறார். மூலவருக்கு வலப்புறம் சுயம்பு இருப்பதைக் காணலாம். உற்சவரோ நாகாபரணத்துடன் காட்சியளிக்கிறார்.

நெல்லை மாவட்டம் வள்ளியூரில் குடைவரைக் கோவிலில் வள்ளி தேவயானையுடன் முருகன் கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார்.

மதுராந்தகம் மாவட்டத்திலுள்ள குமாரவாடி ஸ்ரீ அழகேஸ்வரப் பெருமாள் கோயிலில் முருகப் பெருமான் கல் திருமேனியாக யோக நிலையில் உட்கார்ந்திருக்கும் நிலையில் காட்சியளிக்கின்றார்.

நெய்வேலிக்கு அருகில் உள்ள வில்லுடையான் பட்டியில் முருகன் வில்லேந்தி விரிசடையுடன் வள்ளி தேவயானையுடன் ஒரு முகத்துடன் கிழக்கு நோக்கி காட்சி தருகின்றார். வேறு எங்கும் காண முடியாத நிலையில் முருகனின் மூலத் திருமேனி சிவலிங்க வடிவில் கீழே ஆவுடை வடிவமாக அரை அடி உயரத்தில் காட்சியளிக்கின்றார்.

கழுகுமலை எனப்படும் கழுகாசலத்தில் மேற்கு நோக்கிய சந்நிதியில் ஒரு முகம் ஆறுகரங்களுடன் மயில் மீது இடது காலை மடக்கி வைத்து வலது காலைத் தொங்க விட்ட நிலையில் கழுகாசலமூர்த்தி காட்சி தருகின்றார். **குடவரைக் கோவில்களில் பின்பக்கம்பிரகாரம் கிடையாது.**

உத்திர மேரூர் கோவிலில் பாலசுப்ரமண்யர் ஆறு அடி உயரத்தில் உருத்திராட்சம் அணிந்து கையில் நாகாபரணம் பூண்டு சடை முடியுடன் காதுகளில் குண்டலம் தரித்து சாய்வாக, சிவ பூஜை செய்யும் கோலத்தில் காட்சி தருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரம் சிவகாமி அம்மையின் கோயிலுக்கு வடபாகத்தே பாண்டிய நாயகம் என்னும் கோயிலில் ஆறுமுகப் பெருமான் மயில் மீது கிழக்கு நோக்கி வள்ளி தெய்வயானையுடன் காட்சி தருகிறார். இக்கோவில் யானைகளாலும் யாழிகளாலும் இழுக்கப்படும் தேர்வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள முருகனுக்குரிய மிகப்பெரிய அழகிய சந்நிதி இதுவே. அவிநாசி அவிநாசியப்பர் கோயிலில் செந்தில் நாதன் சந்நிதி அறுகோண அமைப்பில் உள்ளது.

கனடா நாட்டில் டொரோண்டோ நகரில் ரிச்மண்ட ஹிலஸ் மலைக் கோயிலில் 8 அடி உயரமுள்ள முருகப் பெருமான் காட்சி தருகிறார்.

முருகப் பெருமான் அழகன், குன்றிருக்குமிடமெல்லாம் அவன் வீற்றிருந்து அருள்பவன். அவனை வழிபடுவதால் சகல பாவங்கள் வினைகள் ஒழியும் அவனை மனமுருகி வழிபட்டு யாம் வேண்டும் வரம் பெற்று நல்வாழ்வு வாழ்வோம்.

சுபமஸ்துசிவாச்சார்யமணி
சிவஸ்ரீ வ.சிவகுமாரக்குருக்கள்
73, கஸ்கிசன் வீதி
திருக்கோணமலை

**நமக்கு தேவையான கல்வி :**
நல்ல பண்புகளை உருவாக்குகின்ற, மனவலிமையை வளர்க்கின்ற, அறிவை வளம் பெறச் செய்கின்ற தன்னம்பிக்கையை ஊட்டுகின்ற கல்வியே நமக்கு தேவை.

-சுவாமி விவேகானந்தர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கங்கா ஸ்நானம்

ஒரு சமயம் பரமசிவனும் பார்வதியும் ஹரிஸ்துவாரைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தனர்.
நூற்றுக்கணக்கானவர்கள் கங்கையில் ஸ்நானம் செய்வதும் பிறகு வீடு திரும்புவதுமாக இருந்தனர்.

அவர்களைப் பார்த்ததும், பார்வதி பரமசிவனைப் பார்த்து "பிரபுவே! கங்கையில் ஸநானம் செய்வதால் எல்லாப் பாவங்களும் போகும் என்பார்களே. ஆனால் இவர்களுடைய பாவங்களோ, கஸ்டங்களோ மறைந்ததாக தெரியவில்லையே? என்று கேட்டாள். "இவர்கள் கங்கையில் ஸ்நானம் செய்தால் அல்லவோ இவர்களுடைய பாவங்கள் தெளிவதற்கு! இவர்கள் எங்கே ஸ்நானம் செய்தார்கள்?" என்று பரமசிவன் கேட்டார்.

என்ன இப்படி சொல்கின்றீர்கள்? இவர்கள் உடலும் உடையும் கூட இன்னும் காயவில்லை.
ஸ்நானம் செய்யவில்லை என்று சொல்கின்றீர்கள்!

"இவர்கள் ஸ்நானம் செய்யவில்லை. கங்கை தண்ணீரில் உடம்பை நனைத்துக் கொண்டு வருகின்றார்கள். அதனால் தான் அவர்களுடைய பாவங்கள் போகவில்லை. நாளைக்கு ஒரு சோதனை செய்கின்றேன். அப்பொழுது நீயும் புரிந்துக் கொள்வாய்" என்றார் பரமசிவன்.

அன்று இரவு நல்ல மழை பெய்யவே கங்கைக்குச் செல்லும் பாதை ஒரே சேறாகிவிட்டது.
வழியிரல் ஒரு பள்ளம் வேறு இருந்தது. அடுத்த நாள் காலை பரமசிவன் ஒரு வயோதிப அந்தணர் வேடம் அணிந்து அந்த குழியில் விழுந்து கிடந்தார். மேலே ஏறமுடியாதவர் போல் தவித்தார். பார்வதி ஒரு இளம்பெண் வேடம் போட்டுக் கொண்டு குழியின் பக்கத்தில் உற்கார்ந்து கொண்டாள். அவள் என்ன செய்ய வேண்டும் என்று முன்கூட்டியே பரமசிவன் சொல்லிக் கொடுத்திருந்தார்.

"ஐயோ! என் வயதான கிழவர் குழியில் விழுந்து விட்டாரே! யாராவது கைகொடுத்து இவரை தூக்கி விடமாட்டிர்களா?" என்று பார்வதி கதறினாள்.

கங்கையில் முழுகிவிட்ட பலர் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். ஆனால் கிழவரை தூக்கிவிட வேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் வரவில்லை. "இந்த கிழவரைப் பற்றி எதற்காக இந்த யுவதி வேதனைப்படுகின்றாள்? கிழவன் செத்தால் சாகட்டுமே!" என்று பலர் நினைத்தனர்.
இந்த யுவதி நமக்கு கிடைத்தால் எப்படி இருக்கும் என்று சிலர் நினைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியில் சிலர் கிழவரைத் தூக்கிவிட முன் வந்தார்கள். ஆனால் பார்வதி அவர்களைப் பார்த்து "என் கணவர் ஒரு பாவமும் அறியாதவர் எனவே பாவமற்றவர்கள் தான் இவரைத் தொடலாம். பாபம் செய்தவர் இவரை தொட்டால் அவர்கள் சாம்பலாகி விடுவார்கள்"

என்று சொன்னாள். அப்படியானால் நான் இவரைத் தொட லாயக்கில்லை. நான் எத்தனையோ பாவம் செய்திருக்கின்றேன் என்று கூறி ஒவ்வொருவராக போய் விட்டார்கள்.அன்று முழுவதும் அப்படியே நடந்தது. ஒருவரும் அந்த அந்தணரைத் தூக்கிவிட முன் வரவில்லை

கடைசியில் ஒரு யுவன் கங்கையில் ஸ்நானம் செய்து விட்டு அந்த பக்கமாக வந்துக்கொண்டிருந்தான். அவனைப் பார்த்து பார்வதி "ஐயோ! வயதான கிழவர் குழியில் விழுந்து விட்டார். தாங்கள் கொஞ்சம் தூக்கி விடமாட்டிர்களா?" என்று கேட்டாள். "அதற்கென்ன இதோ தூக்கி விடுகின்றேன்" என்று யுவன் பக்கத்தில் சென்றான்.

"ஐயா! இவரைத் தொடாதீர்கள். நீங்கள் பாவமற்றவராக இருந்தால் தான் இவரைத் தொடலாம். இல்லாவிட்டால் பஸ்பமாக போய்விடுவீர்கள்" என்றாள் பார்வதி.

" நான் பாவமற்றவன் என்பதில் என்ன சந்தேகம்? இப்பொழுது தானே கங்கையில் ஸ்நானம்

செய்து என் பாவங்களை நீக்கி விட்டு வருகின்றேன்" என்று சொல்லி யுவன் கிழவரைத் தூக்கி விட்டான்.

உடனே பரமசிவனும் பார்வதியும் அவனுக்கு தரிசனம் தந்து அருள் புரிந்தனர். "கங்கையில் நம்பிக்கையோடு ஸ்நானம் செய்தால் தான் பாவங்கள் விலகும். தெரிந்ததா? என்றார் பரமசிவன் பார்வதியைப் பார்த்து.

சுவாமி கமலானந்தா

கடவுள் எங்கே இருக்கிறார். வெளிநாட்டிலா? உள்நாட்டிலா? தூணிலா? துரும்பிலா? கடவுள் எங்கும் இருக்கிறார். அவரைத் தேடி எங்கும் போகாது நமக்குள் கண்டு கொள்ளலாம்.

- சித்தர் வாக்கு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிந்து கொள்வோம்

சரவணப் பெருமான் - சங்கதிகள்

* அகரம், உகரம், மகரம் என்ற மூன்றும் சேர்ந்ததே பிரணவ மந்திரமாகிய ஓம் ஆகிறது.

* மு - என்னும் எழுத்து முகுந்தன்
ரு - என்னும் எழுத்து ருத்திரன்
க - என்னும் எழுத்து பிரம்மன்
ஆகவே முருகன் திருநாமத்தை சொல்லி நாம் வழிபடும் போது மும்மூர்த்திகளையும் வணங்கிய பலன் கிடைக்கின்றது.

* ஆறுமுகன்
ஆறுபருவ காலங்களை குறிப்பிட்டு காட்சி கொடுப்பவர் ஆறுமுகன்.

அவை

ஆறுமுகப் பெருமானின் 6 திருமுகங்களாகும். பன்னிரு மாதங்களையும் பன்னிரு கரங்கள் குறிக்கின்றன.

* முருகப்பெருமானின் மயில் சுத்த மாயை
அதன் வாயில் இருக்கின்ற பாம்பு அசுத்த மாயை
மயிலின் கால்களில் உள்ள பாம்பு பிரகிருதி மாயை என ஞான நூல்கள் குறிப்பிடுகின்றன.

* ஆறுமுகப் பெருமானின் திருக்கரங்களில் தவழும் ஈட்டி, கோடரி, கத்தி, வில், பாசம், அங்குசம், கொடி, வஜ்ரம், பாணம், மணி, தாமரை, ஆகியன பதினொரு ருத்திரர்களை (ஏகாதச ருத்ரர்கள்) குறிக்கின்றன.

* கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, ஆகாயம், பாதாளம், ஆகிய ஆறு திசைகளில் இருந்தும் வரும் பக்தர்களின் குறைகளை நிவர்த்தி செய்யவே ஆறுமுகம் கொண்டு முருகப்பெருமான் அருள் புரிவதாக புராணங்கள் குறிப்பிடுகின்றன.

### தைப்பூசச்சிறப்பு

எல்லா முருகன் ஆலயங்களிலும் தைப்பூச விழா சிறப்பாக நடைபெறும். இவற்றில் பழனியில் நடைபெறும் சிறப்பு அபிஷேக அலங்கார பூசைகளை கண்டு வழிபட்டால் நம் பாவங்கள் அனைத்தும் விலகி விடும். தைப்பூச நாளில் சுபகாரியங்கள் செய்தால் தம்பதிகள் வாழ்வில் எல்லா வளமும் பெற்று நலமுடன் வாழ்வர். பூசத்தன்று விரதமிருக்க வேண்டும். பழைய உணவுகளை உண்ணக்கூடாது பூசத்தன்று பூனை கூட பழையதை உண்ணாது என்பது பழமொழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவடி

முருகன் என்றதும் காவடியும் சேர்ந்து தான் எமது சிந்தனையில் உதிக்கும். காவடி எப்படி உருவானது? அகத்திய மாமுனிவரின் சீடரில் ஒருவன் இடும்பன். குரு சொல் மீறாதவன். முருகப்பெருமான் தனது சேனைகளின் தளபதியாக இடும்பனை நியமிக்க திருவுளங் கொண்டார். அகத்தியரின் மனதில் புகுந்து கைலிய சிகரங்களாகிய சிவ, சக்தி மலைகளை அங்கு எடுத்து வரப்பணித்தார். இடும்பனும் ஒரு கோலின் இரு முனைகளிலும் அம்மலைகளை கட்டி சுமந்து கொண்டு வரும் வழியில் களைப்பின் ஆற்றுகைக்காக பழனியில் அதனை இறக்கி வைத்தார். மீண்டும் களைப்பு நீங்கி அதனை தூக்க முயன்றபோது தூக்க முடியவில்லை. பார்த்தால் ஒரு சிறுவன் தன் சிறு பாதத்தால் அதனை அழுத்திக் கொண்டிருந்தான். அவனை விரட்டுவதற்கு முற்பட்ட போது சிறுவன் முருகனாகக் காட்சி கொடுத்தான். இடும்பனும் முருகா உன்பாதம் பட்டதால் இப்பொருள் காவடி என அழைக்கப்படும் எனக்கூறி வணங்கினான். அது முதல் கொண்டு மக்களும் காவடி எடுத்து முருகனை வழிபடுகிறார்கள்.

தொகுப்பு
திருமதி.வித்தியா கிருபானந்தன்

**சாதனை :**

வறுமையோ, வளமான வாழ்வோ எதுவாக இருந்தாலும் எவரொருவர் எந்த விதச் சூழ்நிலையையும் தனக்குச் சாதகமாக மாற்றி எதிர் கொள்கின்றாரோ அவரே வாழ்வில் சாதனை படைக்கிறார்.

வறுமையை வெல்வது வேறு, வாழ்க்கையை வெல்வது வேறு. நேர்மையற்ற முறையில் செல்வச் செழிப்பில் மிதப்பவர்கள் காலப்போக்கில் செல்வத்தை இழந்து மானத்தை இழந்து வாழ்வைத் தொலைக்கின்றார்கள். நேர்மையாக வறுமையுடன் வாழ்ந்த எவரும் வறுமையை தொலைத்ததாகச் சரித்திரம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோமாதா

தேவர்களும் அசுரர்களும் மந்தர மலையை மத்தாகக் கொண்டு வாசுகியைக் கயிறாக வைத்து அமிர்தம் வேண்டி, பாற்கடலைக் கடைந்த போது அதிலிருந்து நந்தா, ஸுபத்திரா, ஸுரபி, ஸுசீலா, பகுலா என்ற ஐந்து காமதேனுக்கள் உண்டாகின. அவைகளை முறையே ஜமதக்கினி முனிவர், பரத்துவாஜர், அஸிதர், கௌதமர் ஆகியோர் ஏற்றுக் கொண்டனர். பசுவிடம் இருந்து கிடைக்கும் கோமயம், கோசலம், கோரோசனை, கோக்ஷீரம், கோவின் தயிர், கோவின் நெய் ஆகியவை மிகப் பரிசுத்தமானவை.

கோமாதாவிலிருந்து வில்வமும், தாமரை விதையும் தோன்றின. கோஜலத்தில் இருந்து குக்கலு என்பது உண்டாயிற்று. நெய்யிலிருந்து அமிர்தம் உண்டானது. பாலிலிருந்து உலக பீஜம் உண்டானது. பசுவும், பிராமணனும் ஒரே இடத்தில் இருந்து உண்டானார்கள். பசுவிடம் 'விஸ்ரமும் பிராமணனிடம் மந்திரமும் அமைந்தன. ('விஸ் - சாதம்). மந்திரம் கூறி 'விஸை அக்கினியில் ஹோமம் செய்தால் அது தேவர்களுக்கு அமிர்தமாகும். தேவர்கள் உலகுக்கு மழையை அளிப்பார்கள். பசுவினிடம் ஆறு அங்கங்களில் வேதம் அமர்ந்துள்ளது. உமாதேவியும், பூதேவியுமே கோரூபம் எடுத்தனர். பசுவின் அங்கங்களில் அமர்ந்துள்ள சகல தேவதாதிகளின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 2 கொம்புகளின் அடியில் | - பிரம்மா, விஷ்ணு |
| 2 கொம்புகளின் நுனியில் | - ஸர்வ தீர்த்தங்கள் |
| 2 கொம்புகளுக்கு இடையே | - சதாசிவன் |
| நெற்றியில் | - கௌரீ தேவி |
| மூக்குத் தண்டில் | - ஷண்முகன் |
| 2 மூக்குத் துவாரங்களில் | - கம்பள அச்வதர நாகர்கள் |
| 2 காதுகளில் | - அச்வநீ தேவர்கள் |
| 2 கண்களில் | - சந்திர, சூரியர்கள் |
| பற்களில் | - வஸீக்கம் |
| நாக்கில் | - வருணன் |
| தொண்டயில் | - சரஸ்வதி |
| 2 கன்னங்களில் | - யமனும், யட்சகனும் |
| 2 உதடுகளில் | - 2 ஸந்தியைகள் |
| கழுத்தில் | - தேவேந்திரன் |
| தொண்டையில் | - ராட்சஸர்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பக்கங்களில் | - த்யெளர் தேவதை |
| 4 கால்களில் | - 4 பாதமுள்ள தர்மம் |
| குளம்பு நடுவில் | - கந்தர்வர் |
| குளம்பு நுனியில் | - நாகர்கள் |
| குளம்பு பின்புறத்தில் | - ராட்சஸர்கள் |
| முதுகில் | - ஏகாதசருத்ரர் |
| எல்லா சந்திகளிலும் | - வருணன் |
| பின்புறத்தில் | - பித்ரு தேவர்கள் |
| கன்னங்களில் | - மாநவர் |
| சாணி போடும் இடத்தில் | - லக்ஷ்மீதேவி |
| கோமூத்திரத்தில் | - கங்காதேவி |
| சாணியில் | - யமுனாதேவி |
| மயிர்கால்களில் | - 33 கோடி தேவர்கள் |
| வயிற்றில் | - மலை, காடு, நதிகளுடன் பூதேவி |
| 4 ஸ்தநங்களில் | - நான்கு கடல்கள் |
| வயிற்றினுள் | - கார்ஹபத்ய அக்நி |
| ஹிருதயத்தில் | - தக்ஷிணாக்நி |
| கழுத்தில் | - ஆஹவநீயாக்நி |
| கன்னத்தினுள்ளே | - ஸப்ய அக்நி |
| எலும்புகளில் | - மலைகள் |
| மஜ்ஜையில் | - யாகங்கள் |

ஆக்கம் :
திரு.வ.நடராசா
ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவமயம்

### 'அருவமும் உருவம் ஆகி'

மாதுமை அம்மாளுடன் கோணநாதர் உறையும் திருக்கோணமலையிலே குடிகொண்டிருக்கும் வள்ளி தெய்வயானை சமேத முத்துக்குமார சுவாமிக்கு கும்பாபிஷேகம் நடைபெறுவது 'கலியுகத்தில் தோன்றும் கவலையெல்லாம் அகற்ற கந்தப் பெருமான் வருவதாகவே மனம் ஆனந்தம் கொள்கின்றது. உண்மை என்னவென்றால்,

'நாயேனையும் இங்கு ஒரு பொருட்டாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆட்கொண்டாய் நின்னை உள்ள வண்ணம் அறிவு தந்தாய்'
(அபிராமி பட்டர்)

இதுதான் எனக்கு நடந்தது. முத்துக்குமார சுவாமி கோவிலுக்கு போகாத நாளே கிடையாது அவர் எப்படியும் என்னை தன்னகத்தே அழைத்து விடுவார் அங்கே போனால் ஒருவகை இறை அருளின் அதிர்வு உண்டாகும், பக்தி பெருகும், 'நீங்கள் என்ற நினைவு அகன்று... இறை பக்தன் என்ற உணர்வே பெருகி நிற்கும். அப்படி உங்களை ஆட்கொண்டு விடுவார் எம்பெருமான் முருகன். மாணிக்கவாசகர் திருவாசகத்தில் சொன்னது போலே 'தொல்லைகள் எல்லாம் நீங்கி சூழும் தளை நீக்கி அல்லல் அறுத்து ஆனந்தமே பெருகிவிடும்" இதற்குச் சான்று விழாக் காலங்களில் விசேடமாக கந்தசஷ்டிக்காலங்களில் கூடும் பக்தர்கள் வெள்ளம் ஒன்றே போதும். 'பக்தர்கள் வேண்டுவதை வேண்டியபடி கொடுக்கும் வேலன் அவன். திருக்குமரனின் திருவடிகளும், வேலும் வேதனை போக்கும். அமைதியே கூட்டும். நிம்மதி நாட்டும்.

நாயிற்கிடையாக கிடந்த அடியேனுக்கு தாயான தத்துவன் அவர் எனவே இத்தினத்தில் இத்திருப்பெரும் கருணை கொண்ட முருகனின் கோவிலை மேலும் அருளோங்கச் செய்ய காரணமாக இருக்கும் குருக்களை நாம் மறந்து விட முடியாது. அந்த வகையில், சிவபதம் அடைந்த அமரர்.சண்முகரத்தினம் குருக்கள் (சிவன் கோவில்) கந்தனை நம் கண்முன்னே கொண்டு வரும் மாண்புமிகு ராஜ ராஜேஸ்வரக்குருக்கள் இவர்களின் அர்ப்பணிப்பான பூஜையும், மந்திரங்களும் திருமுருகனை பக்தியாலே கட்டிப்போட்டு பக்தர்கள் கேட்டவற்றை பெற்றுத் தரும் முறைகளும், உள்ளத்தை உவகை பெருகச் செய்யும். மேலும் கோயிலை வழிநடத்திச் சென்ற அமரர்.மாண்புமிகு திரு.சிவானந்தம் ஐயா (அடியேனுக்கு வழிகாட்டி அவர்) மற்றும் தற்போது கணக்குப்பிள்ளையாக இருக்கும் திரு.பொன்னுத்துரை அவர்கள் அத்தோடு நிர்வாகப் பொறுப்பு வகிக்கும் திரு.தவசிலிங்கம். இவர்கள் சேவல்கொடியோனுக்கு செய்யும் சேவைகள் அளப்பரியது.

கலியுகத்தில் 'நம் கவலையெல்லாம் தீர்க்க 'எம்பெருமான் எழுந்தருளும் இத்தினத்தில் திருமுகனின் திருவருள் பெற்று உய்வோமாக.

"எல்லாம் உன்னுள் சாந்தி தருவாய்
சண்முகா, குருநாதா ஆ
சீவன் தான் சிவம் (யோகர் சுவாமிகள்)

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

நல்லாசிகளுடன்
முருக பக்தன்
செல்வரத்தினம் கணபதிப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிந்து கொள்வோம்
## கந்தபுராணச் சிறப்புக்கள்

### 01. கந்தப்புராணம் தோன்றிய வரலாறு

நைமிசாரண்ய வனத்தில் தவம் செய்த சில முனிவர்கள் சிவபெருமானின் அருளை முன்னிட்டு ஸத்ரயாகம் செய்யத் தொடங்கினர். இதனைக் கேள்வியுற்ற சூதமாமுனிவர் நைமிசாரண்ய யாகசாலைக்கு விரைந்தார்.

வேதவியாசரின் சீடரான, புராணங்களை சொல்லும் வல்லமை பெற்ற தவ சிரேஷ்டர் யாகசாலை வந்ததை கண்ணுற்ற முனிவர்கள் அவருக்கு தகுந்த ஆசனமிட்டு அவர் பாதம் தொழுது பூஜித்தனர். இவர்களின் உபசரிப்பினால்மனம் மகிழ்ந்து ஆசி வழங்கினார் சூதமாமுனிவர். நைமிசாரண்ய முனிவர்கள் அவரை நோக்கி முருகப் பெருமானின் உன்னத சரித்திரத்தை தமக்கு கூறியருள வேண்டுமென பணிந்து நின்றனர். அகமகிழந்த சூதமுனிவரும் "தவசீலர்களே சகல மங்களங்களையும்தரக்கூடிய பெருமான் சரித்திரத்தை கூறுகிறேன். ஒருமித்த மனத்தோடு கேட்டு மகிழுங்கள்" எனக் கூறியதோடு இதனைக் கேட்பவர்படிப்பவர் அனைவரும் சர்வ மங்களும் பெறுவது சத்தியம் எனக்கூறி கந்தபுராணத்தை கூறத் தொடங்கினார்.

### 02. "கந்தபுராணம்" என்றால்........

கந்தன் என்ற சொல்லுக்கு மூன்று பொருள்கள் உள.
"சத்ரூன் சோஷயதீதி ஸ்கந்த" என்று அமர கோசம் என்ற வடமொழி நிகண்டு கூறுகின்றது. பகைவருடைய ஆற்றலை வற்றச் செய்பவன் கந்தன். இராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய நூல்களில் பகைவர்களைக் கொன்றதாகத்தான் வரலாறுகள் கூறுகின்றன. கந்தபுராணத்தில் முருகவேள் பகைவனாகிய சூரபன்மனை வதைத்து விட்டதாக வரலாறு இல்லை. அவன் மயிலும் சேவலுமாக மாறி வாழ்வு பெற்றான்.

"தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றாற்.......
றூயவராகி மேலைத் தொல்கதி யடைவ ரென்கை - என கந்தபுராணத்தில் ஓர் பாடல் குறிப்பிடுகிறது.

சிங்கமுகன் - அம்பிகைக்குச் சிம்மவாகனமாகப் போந்தான்.
தாரகன் - ஐயனாருக்கு யானை வாகனமாகப் போந்தான்.

### 03. தகராலய ரகசியம்

முருகப் பெருமானுக்கு மந்திர மயில், இந்திர மயில், அசுர மயில், ஔஷத மயில், மணி மயில், ஆன்ம மயில் எனப் பலவகை மயில்கள் உண்டு. மந்திரங்களை முறையாக ஜெபித்து முருகனை வழிபட்டால் முருகப்பெருமான் பிரணவ சொரூபமான மயிலில் வந்து காட்சியளிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் காட்சியே குகரகசியம் என்றும், தகராலய ரகசியம் என்றும் கூறுவதுண்டு. பாம்பன் சுவாமிகளுக்கு முருகன் மயில் பாலகனாக வந்து அருள் புரிந்தார். இவர் பாடிய 'ஸ்ரீமத் குமாரசுவாமியம்' எனும் நூலில் பகை கடிதல் பகுதியில் 'மயிலே! முருகப்பெருமானை இப்போதே அழைத்து வருக என்னும் பொருளில் 'கொணர்தி உன் இறைவனையே' என்று பாடியுள்ளார். இந்நூலை பக்தியோடு படிப்பவர்கள் முருகன் அருளைப் பெற்று சிறப்புடன் வாழ்வர்.

முருகனுக்குரிய கோலங்கள் நிறைய உண்டு. அவை தெரியாவிட்டாலும் போடும் கோலம் ஒன்றில் 'ஓம் சரவணபவ" என்ற எழுத்துக்களை வரைந்தால் போதும். கந்தனின் கடாட்சம் இல்லத்தில் நிறைந்து விடும். வாரத்தில் செவ்வாய் சனியில் இக்கோலத்தை இட்டு வழிபட்டு வர அழகு, அறிவு, ஆரோக்கியம் அதிகரிக்கும்.

**04. காக்க காக்க.......**

வலது புறம் இருக்கும் வள்ளியின் கையில் தாமரை மலர். அது முருகனின் வலது கண் சூரியன் பார்வையில் எப்போதும் மலர்ந்தே இருக்குமாம். இடது புறம் தெய்வயானையின் கையில் நீலோத்பவ மலர். அது கந்தனின் இடது கண் சந்திரனின் பார்வை பட்டு எப்போதும் மலர்ந்தே இருக்குமாம். முருகனை வணங்குவோர் இரவுபகலாக காக்கப்படுவார்கள்.

**05. கொக்கறக்கோ விளக்கம்**

முருகன் என்ற நான்கெழுத்துப் பெயரில் மு - முகுந்தன் ரு - ருத்திரன் க - கமலன் (பிரம்மன்) ன் என்பது தமிழ் மொழியின் கடைசி எழுத்து தமிழ்க்கடவுளாகிய முருகனும் மும்மூர்த்திகளை உள்ளடக்கியவர் என்பதே தத்துவம். இறைவன் நாதவடிவமாக இருக்கிறார் என்பதை விளக்கும் வகையில் நாதத்தை முழங்கும் சேவற் கொடியை முருகன் வைத்திருக்கிறார். கொக்கு என்றால் சூரணியாக மாமரம், அறு என்றால் அறுத்த, கோ என்றால் அரசன் 'சூரனை வேரறுத்த அரசன்" என்பதே கொக்கரக்கோ வின் பொருளாகும். முருகனின் வாகனம் மயில் ஆகும். அதன் தோகை விரியும் போது அதன் முழு வடிவமைப்பு 'ஓ' என்ற பிரணவ சொரூபமாக உள்ளது. இதிலிருந்து 'ஓம்' என்பது பிறந்தது.

**06. திருக்கோயில் நிர்மாணம் :**

1. இ∴து நான்கு வகைப்படும்.
2. புதிதாக கட்டுதல் - ஆவர்த்தம்
3. இயற்கை அழிவினால் இழந்ததை திரும்பக் கட்டுதல் - அநாவர்த்தம்
4. காலப்போக்கில் ஏதேனும் சிதைவுற்றால் அதை எடுத்து திரும்பக் கட்டுதல் புனராவர்த்தம்
5. திருட்டுப் போன்ற அசுத்தத்தை நீக்குதல் - அந்தரிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07. கிருத்திகை விரத மகிமை

சப்த ரிஷிகளுக்கும் மேலான நிலையை நாரத முனிவர் கிருத்திகை விரதத்தை முறையாகப் பன்னிரண்டு ஆண்டுகள் நோற்றதால் தான் அடைந்தார்.

பிரம்மச்சாரியாகிய மறையவன் ஒருவன் மனுக்களின் முதல்வனாகப் பிறந்து முழு உலகையும் ஆண்டது இந்த கிருத்திகை விரதத்தால் தான்

பேறுகள் பல பெற்ற திரிசங்கு சக்கரவர்த்தி கூட அந்தணராக இருந்தவர் தான். கிருத்திகை விரத்தாலேயே விரும்பியவாறு உயர்ந்தார்.

தன்னாடு நகரங்களை இழந்து துன்புற்ற பகீரதன் என்பவன் வனத்திற்கு சென்று சுகர் என்ற முனிவரிடம் - தனது நிலையைக் கூறியபோது கிருத்திகை விரதம் பற்றிய உபதேசத்தைப் பெற்றான். விருப்பத்தோடு அதனைக் கடைப்பிடித்து வர பலமும் வரமும் கிட்டியது. பகைவரை வென்று இழந்த நாட்டை மீட்டான் இன்புற்று வாழ்ந்தான்

## 08. சுப்பிரமணிய தத்துவம்

| | | |
|---|---|---|
| வலக்கண் | - | சூரியன் |
| இடக்கண் | - | சந்திரன் |
| சக்தி | - | ஞானத்தை நல்குபவன் |
| வஸ்ரம் | - | காமம், குரோதம் முதலிய தீய குணங்களை அழிப்பவன். |
| அபயம் | - | உயிர்களுக்கு துன்பங்களைப் போக்கி உறுதுணையாக இருந்து காப்பவன். |
| வரதம் | - | கலியுகத்திலும் காத்து அருள் வழங்கும் வள்ளல் |
| வேலாயுதம் | - | ஞான சக்தியாக உள்ளது. முருகனின் ஆணைப்படி |
| அது தானாகவே | | அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தை உண்டு பண்ணும் தன்மைகொண்டது. |
| மயில் | - | உள்ளத்தில் இறைவனைச் சுமந்து கொண்டுள்ள பக்குவ ஆன்மா. இதன் தோகை பிரணவ வடிவை சித்தரிப்பது. |
| சேவல் | - | இறைவனின் வெற்றியையும் புகழையும் உலகறியச் செய்வது |
| தெய்வநாயகி | - | கிரியாசக்தி |
| வள்ளிநாயகி | - | இச்சாசக்தி |

ஆறு திருமேனிகளும் ஒன்றாகப் பொருந்தினவன் என்பது மற்றொரு பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. கந்து - யானை கட்டுந்தறி
கந்த என்ற பகுதியோடு ஆன் என்ற ஆண்பால் விகுதி புணரக் கந்தன் ஆயிற்று. ஆன்மாக்களுக்கு பற்றுக் கோடாக இருப்பவன் கந்தன்.

**10. புராணம் என்ற சொல் பழமை என்று பொருள்படும். புராதனம் என்ற சொல் புராணம் என மருவியது. புராணம் ஏன்?**

வைரத்தை சோதிப்பவனுக்கு பூதக்கண்ணாடி இன்றியமையாதது போல் வேதத்திலுள்ள நுண்ணிய பொருள்களை விரித்துக் காட்டுவது புராணம்

'சத்யம் வத' என்ற வேத வாக்கியத்தை விரித்துக் கூறுவது அரிச்சந்திர புராணம் ஆகும்.

'நன்றி கொன்றவன் விரைந்து அழிவான்' என்ற ஒரு பெரிய தருமத்தை விரித்து உணர்த்துவது கந்தபுராணம் எனவுணர்க.

சூரபன்மனுக்கு ஆயிரத்தெட்டு யுகங்கள் அரசு புரியும் ஆற்றலையும் வச்சிரயாக்கையையும் வேறு பல வரங்களையும் அள்ளி அள்ளி வழங்கிய வள்ளலாகிய சிவமூர்த்தியின் திருக்குமாரரான முருகப்பெருமானை எதிர்த்து அமராடினான். அவன் கொன்ற நன்றியே அவனைக் கொன்று விட்டது.

"ஒன்றொரு பயன்தனை உதவினோர் மனம்
கன்றிட ஒருவினை கருதிச் செய்வரேல்
புன்றொழி லவர்க்குமுன் புரிந்த நன்றியே
கொன்றிடும் அல்லது கூற்றும் வேண்டுமோ?"

நன்றி மறுத்தல், நன்றி கோறல் என்ற இந்த இரு பாவங்களும் உய்வு இல்லாத துயரத்தை நல்கும். நன்றி கொன்றவனுக்கு உய்வு இல்லை என்பதனை விரித்துக் கூறுவதே கந்தபுராணம் எனவுணர்க.

**இசை :**

இசை மூலம் இறைவன் அருளைப் பெறலாம். இசைப்பிரியன், நாதப் பிரம்மம் என்றெல்லாம் இறைவன் போற்றப்படுகின்றார். "ஓசை ஒலியெல்லாம் ஆனாய்" என்கிறார் அப்பர் சுவவாமிகள்.

அபிஷேகம், ஆராதனை, அர்ச்சனை மூலம் ஆண்டவன் அருளைப் பெறுவதை விட இசை மூலமும் அவன் நாமங்களைப் பாடுவதன் மூலமும் இறையருளை இலகுவில் பெற்று விடலாம். இராவணன் "சாம கானம்" பாடி தன் இசைப் புலமை மூலம் இறைவனின் இரக்கதிற்கு ஆளானதுடன், வரங்கள் பலவும் பெற்றான். இறைவனுக்கு அர்ச்சனை பாட்டேயாகும் என்பதற்கு இணங்க திருமுறைகளைக் காதலாகிக் கசிந்து பண்ணிசையோடு ஓதுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்து நேரத்தில் அபயமளித்த முத்துக்குமரன்
## ( அனுபவக் கட்டுரை)

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின் அவலம், அழிவுகள், இடம் பெயர்வுகள், உறவுகளின் பிரிவுகள். இவ்வகையில் எம்மை இழுத்து வந்தன கிழக்கிலங்கைக்கு. அதுவும் முத்துக்குமரன் சந்நிதி அருகில் உறவுகளோ, அறிந்தவர்களோ அற்ற நிலையில் 'யாமிருக்க பயமேன்?' என முருகன் அருள்பாலித்தான்.

கார்த்திகேயனான காங்கேயப் பெருமானே தனது அருகிலே இல்லிடம் அமைத்தான். பன்னிருகரத்தானின் துணைகொண்டு பதினான்கு வருடங்கள் வாடகை வீடு என்ற உணர்வின்றியே வாழ்ந்த காலம், பாட்டி மூலம் கிடைத்த பாலசுப்பிரமணியனின் அடியவர் உறவுகள், அந்நிய உணர்வின்றி அரவணைத்த அயலவர்.

மனதிற்கு இதமளிக்கும் மந்திரப் பதங்களான தேவார திருமுறைகளை நாவால் இசைப்பதற்கு இடமளித்த இசையரசியின் பரிபூரணமான கடாட்சம் நிரம்பப்பெற்ற நடமாடும் கலைமகளின் கலாலயம். இவ்வாறு முருகனருள் நிரம்பப்பெற்ற இடத்தில் எமது ஆறுதலான வாழுங்காலங்கள் பல வருடங்கள் உருண்டோடின.

ஒருவரின் சஞ்சித, பிரார்ப்த வினைகள் அவரை அறியாமலே உயிரை ஆட்டிப்படைப்பவை. வைத்திய தேவை காரணமாக ஏற்பட்ட கடும் பொருளாதார இழப்புகளால் நாம் திருகோணமலையின் புறநகர்ப்பகுதியில் உள்ள ஒரு வீட்டில் ஒரு வருடகாலம் இருக்கும் நிலைஒரு கணம் நாம் மீண்டும் எமது சொந்த ஊருக்கே மாற்றம் எடுத்துப் போகலாம் என முடிவெடுத்திருந்த தருணம்.

ஒரு கார்த்திகை மாதம் (2011) காரிருள் விரவி மாலையை இரவாக்கியது. இடிமின்னலுடன் கூடிய அடைமழை மின்சாரமும் தடைப்பட்டது. வீட்டின் வெளி வாசலில் அறிந்த குரலொன்றின் அழைப்பு ஓசை மழை இரைச்சலையும் கிழித்துக் கேட்டது. மெழுகுதிரி வெளிச்சத்தில் அவரை வரவேற்றோம். முருகப்பெருமானின் முழுநேரத்தொண்டன். 'அண்ணா' என நாம் அன்புடன் அழைக்கும் அவர் மழைநீரில் ஊறி இருட்டில் மேடு பள்ளந் தெதரியாமல் விழுந்தெழும்பி இரண்டு மணித்தியாலமாக எமது முகவரி தேடி களைத்து வந்திருந்தார். முருகன் கோயிலுக்கு சொந்தமான வீதியில் இருக்கம் காணியை எடுக்கும்படியும் எமது சம்மதத்தை உடனடியாக முகாமையாளரிடம் தெரிவிக்கும் படியும் கூறினார். முருகன் கோயிலின் மணியோசை மீண்டும் கேட்போம் என்ற சந்தோசம் என்றாலும் நாம் இருந்த பொருளாதார இழப்பு நிலை காணி எடுப்பதற்கோ வீடு கட்டுவதற்கோ கனவு கூடக் காணமுடியாது. எமது நிலையை அவரிடம் விரிவாகக் கூறினோம். மாலை 7.00 மணியளவில் ஆரம்பித்தது உரையாடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கதை ஒன்றையும் அவர் கேட்டுப் புரிந்தவராக இல்லை. 'தங்கச்சி ஓம் என்று மட்டும் சொல்லும் வேறொன்றும் இப்ப வேண்டாம்' என்றார். அவரது இறுக்கமான அன்புக் கட்டளையால் இரவு 9.00 மணியளவில் சம்மதித்தோம். உடனேயே முகாமையாளர் வீட்டுடன் தொடர்பு கொண்டு எமது விருப்பத்தை தெரிவித்தார். ஏதோ முருகனின் அருளால் குத்தகைப்பணமும் கிடைத்தது.

2012 தைப்பூசத் திருவிழா வீதியுலா வந்த முருகப்பெருமானின் திருக்கோலம் தரிசிக்கும் பாக்கியம் கிட்டியது. கண்களில் நீர் திரையிட 'ஏனப்பா இவ்வளவு சோதனை? எம்மை அந்நியராக்கி தூர வைத்துள்ளாயே' என மனதார மன்றாட்டுக்கள் காற்றுக் கூட அதிகமாக வீசவில்லை. திடீரென முருகனின் திருமேனி தொட்டிருந்த மஞ்சள் பூவொன்று காற்றினால் பறந்து வந்தது போல் ஒதுங்கி நின்ற எம்பக்கம் வந்து புரியாத சேதி சொல்லியது.

எனதருகில் எனது பாசமிகு மாணவியின் தாயாரும் சக ஆசிரிய நண்பியுமான ஒருவரும் இதனைக் கண்ணுற்றார். எனது காதருகில் வந்து 'காற்றுக்கூட வீசவில்லை. ஒரு பூ பறந்து வந்து எமதருகே வந்ததை பார்த்தீரா. இது நல்ல சகுனம் தானே' என்றார். அவரும் எதை முருகனிடம் வேண்டினாரோ நானும் ஓம் என்றேன்.

சில மாதங்களிலேயே எடுக்க முடியாதிருந்த வங்கிக்கடன் கிடைப்பதற்கு சுவாமிநாதனாக உருக்கொண்ட வேலவன் வழி சமைத்தான். குமரப்பெருமான் குமாரனாக நின்று வீட்டு வேலைகளை நிறைவேற்றினார். சிவசுதனாக வந்து குடும்பத்தாருடன் சேர்ந்து புதுமனை புகுவிழாவை முருகப்பெருமான் சிறப்பித்தார். வாழ்வின் இடர்கள் ஆதவனை கண்ட பனி போல ஆறுமுகப் பெருமானின் திருக்கடாட்சத்தால் விலகின. இவை யாவும் எமக்கு அதிசயமே. முருகனின் கிருபைகளை அனுபவித்த கணப்பொழுதுகளோ இன்பம்.

புரட்டாதி மாத ஆவணி சதுர்த்தியில் கட்டத்தொடங்கிய வீடு மார்கழி பெருங்கதையுடன் நிறைவுற்றது. அண்ணனுடன் சேர்ந்து அருள்புரிந்த குமரன் முத்துக்குமரன்

தெய்வீக ஆனந்தம். ஆவினங்களின் ஆசி பெற்ற தரை. தீர்த்தோற்சவ முருகப்பெருமானின் நிறைந்த திருக்கோல தரிசன கடாட்சம். நல்ல உள்ளம் கொண்டவர்கள் விரும்பி வரும் இல்லம். வீடு நிறைந்த சிறு குழந்தைகள் பாலமுருகன்களாக குறும்பு செய்து பயிலும் ஆனந்த நிலையமாக விளங்குகிறது.

வேண்டத்தக்கதறியும் முத்துக்குமாரா
வேண்ட முழுதும் தருவோய் நீ முருகா
உன் பதம் சரண் அடைந்தோம்.

அருள்மிகு முத்துக்குமாரசுவாமி ஆலய
குத்தகை குடியிருப்பாளர் அனுபவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

ஆலயங்களில் பன்னிரு வருடங்கட்கு ஒருமுறை குடமுழுக்கு எனப்படும் மகாகும்பாபிஷேகம் செய்யப்பட வேண்டும் என்பது ஐதீகம். 27.06.2002 ற்கு பிற்பாடு 03.04.2016 இல் கும்பாபிஷேகம் நடைபெற வேண்டும் என்பது திருவருளேயாகும். இத்தினங்களில் கும்பாபிஷேகம் செய்ய வேண்டி திருகோணமலையில் பல ஆலயங்கள் திருப்பணி தேவைகட்கு அடியவர்களிடம் நன்கொடைகளை வேண்டி நிற்பது கண்டு தேவஸ்தானம் ஆலய சேமிப்பின் மூலமே கும்பாபிஷேகத்தை நடாத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு வேலைகள் தொடங்கப்பட்டன. ஆயினும் வேலைகளைத் தொடங்கிய போது பழைய கட்டுமானங்கள் பல பலமிழந்து இருப்பது தெரிந்ததால் அவற்றினை புதுப்பிக்க வேண்டி வந்ததும் செலவினங்கள் அதிகரித்தன. ஆயினும் மனம் தளராமல் எம்பெருமான் திருவடியில் பொறுப்பினை வைத்து கருமமாற்ற முடிந்தது அவன் திருவருளேயாகும். ஆலய நிர்வாகம் நிதி சேகரிப்பில் ஈடுபடா நிலையில் சில அடியவர்கள் தாமாகவே ஆலயத்தில் நிதியினை அளித்திட்டதால் அவர்கட்கு எமது நன்றியினை தெரிவிக்க விரும்புகிறோம். இம்முறை ஆலய புனருத்தான வேலைகள் ஆலயத்தினை செப்பனிடுவதோடில்லாமல் புதிதாக பல வேலைத்திட்டங்களை சேர்த்துள்ளதால் இனிவரும் பல்லாண்டுகட்கு நிலைத்து நிற்கும்.

தேவஸ்தான சேவையாளர்கள் சிரமம் பாராது ஒத்துழைப்பு நல்கி கும்பாபிஷேக ஏற்பாடுகளில் இணைந்திருந்ததால் அவர்கட்கு எமது நன்றிகள் சேரட்டும். ஆலய கட்டுமானங்களை சிறப்புற ஆக்கித் தந்த திரு. S.தயாபரன் குழுவினருக்கும் ஒலி, ஒளி தேவைகளை பூர்த்தி செய்த திரு மயில்வாகனம், திரு. S.ரமணன் குழுவினருக்கும் எமது நன்றிகளை சொல்வதோடு மகாகும்பாபிஷேகம் வைபவ ரீதியாக நடைபெற மங்கள வாத்தியம் வாசிக்கும் திரு K.கிருஷ்ணா குழுவினருக்கும், வேல்முருகு, குமார் குழுவினருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

ஆலயத்தின் கலச வேலைகளுடன் பித்தளை, செப்பு ஆக்கங்களை உருவாக்கி சுவாமி சிலைகளுக்கு மெருகு ஏற்றும் பணிகளை சிறப்பாக செய்து தந்துள்ள திரு S.சிவசோதிலிங்கம் ஸ்தபதி அவர்கட்கும் நன்றிகள் சேரட்டும்.

ஆலய கட்டுமானங்கள் முடிவுற்றிருந்தாலும் அவற்றினை வர்ணம் பூசி மெருகேற்றிய பெருமை திரு க.அஜந்தன் குழுவினருக்கே உரியது. அவர்கட்கு நன்றிகள் சொல்வோம். அது போல ஆலயத்தில் வர்ணப்பூச்சு வேலைகளை இனிதே செய்திட்ட திரு றொபேட் குழுவினருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும். ஆலயத்தில் தங்கியிருந்து அழகான மாலைகள், சரங்கள் தொடுக்கும் மனோன்மணி குழுவினரும் நினைவு கூரத்தக்கவர்கள்.

கும்பாபிஷேக ஏற்பாடுகளை செவ்வனே செய்வதற்கு வழிகாட்டியதோடல்லாமல் தம்மோடு ஏனைய சிவாச்சாரியார்களையும் சேர்த்து வந்து இக்கும்பாபிஷேகத்தை சிறப்புற நடாத்தி தந்த நல்லை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ மு.வைகுந்த வாசக் குருக்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைச் சொல்வோம். கும்பாபிஷேக தினத்தில் எமது அழைப்பை ஏற்று ஆகமரீதியாக அனுசரணை செய்த திருகோணமலை சிவஸ்ரீ சோ.ரவிச்சந்திரக் குருக்கள் முதலான ஏனைய சிவாச்சாரியப் பெருமக்களுக்கும் எமது நன்றிகள் சேரட்டும்.

கும்பாபிஷேக மலர் வெளியிடும் முயற்சிக்கு இணைவாக அருளாசி நல்கிய பெரியோர்கட்கும் கட்டுரைகள் எழுதிய பெரியோர் மற்றும் மாணவ மாணவியர்கட்கும் இஃதை அழகுற அச்சேற்றும் சண்பிரிண்டர்ஸ் பிறைவேட் லிமிட்ட் நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

எம்கடன் பணி செய்து கிடப்பதே

முகாமையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சண்பிரிண்டர்ஸ் பிறைவெட் லிமிடெட்
244, மத்திய வீதி, திருக்கோணமலை
077 7296061, 071 2751797

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org